C 3-2 M



“பாரத்” நம் நாடு

"பாரத்" நம் நாடு

சுதந்திர இந்தியக் குடியரசு அமைப்பையும்,
மக்களது சுகவாழ்வைப் பெருக்க உதவும்
திட்டங்களையும் விளக்கும் நூல்

எழுதியவர் :
ஸ்ரீ V. நடராஜன் அவர்கள்
(Divisional Inspector of Schools, Retired)

SITU
PUBLICATIONS LTD.

எஸ். ஐ. டி. யு. பப்ளிகேஷன்ஸ் லிமிடெட்
520, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை 5.

 1954 [விலை ரூ. 1-8-0

THE JUPITER PRESS, LTD., MADRAS-18

முகவுரை

'பாரத்' எனப்படும் நம் இந்திய நாடு சுதந்தரம் அடைந்தவுடன் குடியரசு ஸ்தாபிதமாயிற்று. அரசியல் அமைப்பையும் ஜனநாயக ஆட்சியின் தத்துவத்தையும் இச்சிறு நூல் விளக்கும். இனி மக்கள் யாவரும் ஒற்றுமையுடன் உழைத்து நாட்டின் இயற்கை வளத்தை நன்கு பயன் படுத்திச் செல்வத்தைப் பெருக்கவேண்டும், வியாபாரத்தை விருத்தி செய்யவேண்டும், மக்களது சுகவாழ்வு ஓங்க வேண்டும், உலக நாடுகளுக்குச் சமதையாக நம் நாடும் தலை தூக்கி நின்று பெருமை அடையவேண்டும்.

குடியரசு ஸ்தாபிதமான பிறகு நம் நாடு எவ்வளவோ விருத்தியடைந்துவிட்டது. முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் அநேகமாக வெற்றிகரமாக நிறைவேறி வருகிறது. இரண்டாவது ஐந்து ஆண்டு முயற்சியைத் திட்டமிடும் இச் சமயம் இந்த நூல் பொது மக்களுக்கு மிகவும் உபயோகமாக இருக்கும்.

எல்லாப் பள்ளிச் சாலைகளிலும் பொது வாசகச் சாலைகளிலும் இந்நூலை ஆதரித்துப் பயன் படுத்துவார்களென நம்புகிறோம்.

கல்வித் துறையில் பரந்த அனுபவம் பெற்றுப் பல உயர் பதவிகளிலும் உழைத்திருந்த ஸ்ரீ V. நடராஜன் அவர்கள் மிகவும் எளிய நடையில் சுருக்கமாக விஷயங்களை எழுதி உதவியதற்கு எங்கள் நன்றி.

எஸ். ஐ. டி. யூ. பப்ளிகேஷன்ஸ் லிமிடெட், (தென் இந்திய ஆசிரிய சங்க பதிப்பகம்) செய்து வரும் இந்தத் தொண்டைப் பொதுமக்கள் பாராட்டி, இன்னும் விருத்தி செய்ய ஊக்கமளிக்கும்படி வேண்டுகிறோம்.

சென்னை
5—10—54

S. நடராஜன்,
செயலாளர்.

பொருளடக்கம்



பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு இந்தியன் ஸ்டாண்டர்ட் இன்ஸ்டிட்யூடின் அஸ்திவாரக்கல்லை ஸ்தாபனம் செய்தல்.

"பாரத்" நம் நாடு

1. நமது குடியரசு

"என் வீட்டில் நான்தான் ராஜா" என்று பெருமை பேசுகிறான் ஒருவன். இது வெறும் பெருமைப் பேச்சல்ல. 15—8—1947க்குப் பிறகு முற்றிலும் உண்மை. அன்றையதினம் நாம் எல்லோரும் சுதந்திரம் கொண்டாடி மகிழ்ந்தோம். இனி பாரததேசம் முழுவதும் நம் வீடு; அந்த வீட்டில் நாமெல்லோரும் ராஜாக்கள் என்று பெருமையடையலாம்.

வரிகள் வசூலித்து, சேனைகள் நிறுவி, துஷ்டர்களைத் தண்டித்து, ஜனங்களைப் பரிபாலிப்பது ராஜாவின் கடமை. சகல ஜீவராசிகளையும் படைத்து அவர்கள் வாழ்க்கைக்குரிய வசதிகளை அளித்துள்ள ஆண்டவன், பிரபஞ்சம் முழுவதையும் பரிபாலிக்கிறான். ஆண்டவன் பிரதிநிதியாக அரசன் தன் நாட்டுப் பிரஜைகள் சுகமாக வாழும்படி கவனித்துக் கொள்கிறான். தொன்று தொட்டு வந்துள்ள நமது சமூகப் பண்பாட்டில் இக்கருத்து வளர்ந்து வேரூன்றியுள்ளது.

ஒரு நாட்டை ஆளும் அரசன், அந் நாட்டு மக்களின் பிரதிநிதியாக இருப்பின், அவ்வாட்சியை மக்கள் ஆட்சி எனக் கருதலாம். இன்று நமது

பாரதநாட்டில் மக்களின் பிரதிநிதிதான் அரசருக்குள்ள அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார். ஆதலால் மக்களே ராஜாக்களாகத் தம்மை ஆட்சி செய்து கொள்கிறார்கள் என்று கூறுவதில் தவறு எதுவும் இல்லையல்லவா?

குடியரசு உதயம்


1857 முதல் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தில் இந்தியா ஒரு பகுதியாக இருந்தது. பிரிட்டிஷ் இராஜப் பிரதிநிதி (வைஸ்ராய்) இந்தியாவில் சர்வாதிகாரியாய் இருந்தார். பிரிட்டிஷ் ஆட்சி 1947 ஆகஸ்டு, 15ம் தேதி முடிவுற்றது. 'உங்கள் நாட்டை நீங்களே ஆண்டு கொள்ளுங்கள்' என்று பிரிட்டிஷார் அன்று விலகிக்கொண்டனர். சுய ஆட்சி தொடங்கிய அத்தினத்தை நாம் சுதந்திர தினமாக என்றும் கொண்டாடுவோம்.



ஸ்ரீ சக்கரவர்த்தி
இராஜகோபாலாச்சாரியார்
(கடைசி கவர்னர் ஜனரல்)

கடைசி இராஜப் பிரதிநிதியான லார்ட் மவுண்ட் பாட்டன் 21—6—1948ல் பதவியிலிருந்து விலகியவுடன் ஸ்ரீ இராஜகோபாலாச்சாரியார் சுதந்திர இந்தியாவின் கவர்னர் ஜனரலாகப் பதவியில்

அமர்ந்தார். அவரே முதல் இந்திய கவர்னர் ஜனரல்; அவரே கடைசி இந்திய கவர்னர் ஜனரலும் ஆவர். ஏனெனில் 26 — 1 — 1950 ல் இந்தியாவில் குடியரசு ஸ்தாபிதமாயிற்று. அத்துடன் கவர்னர் ஜனரல் பதவியும் எடுபட்டு விட்டது. இனி இந்திய ஆட்சியை நடத்துபவர் குடியரசுத் தலைவர் அல்லது ஜனாதிபதி. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் இவர். நமது குடியரசின் முதல் ஜனாதிபதி ஸ்ரீ இராஜேந்திரப் பிரசாத்.



ஜனாதிபதி ஸ்ரீ இராஜேந்திரப் பிரசாத்
(முதல் ஜனாதிபதி)

1930ம் வருஷம் ஜனவரி 26ம் தேதி இந்திய தேசிய காங்கிரஸ் நமக்குச் சுதந்திரம் வேண்டுமெனத் தீர்மானம் செய்தது. நமது நாட்டின் பெருமக்கள் மகாத்மா காந்தியின் திட்டத்தை ஏற்றுச் சுதந்திரம் பெருவதற்கென உழைத்தார்கள். பல இன்னல்களை அடைந்தனர். அவற்றைப் பொருட் படுத்தாதும் சலிக்காமலும் இருபது ஆண்டுகள் உழைத்து வந்ததின் விளைவாக 1950ம் வருஷத்தில் அதே ஜனவரி 26ல் சுதந்திர இந்தியக் குடியரசு அமலுக்கு வந்தது. ஒவ்வொரு ஆண்டிலும்

இந்த தினத்தைக் குடியரசு தினம் எனக் கொண்டாடுகிறோம்.

நமது அரசியலமைப்புத் திட்டம்

"இந்திய மக்களாகிய நாம் இந்தியாவைச் சுதந்திர ஜனநாயகக் குடியரசாக அமைக்கத் தீர்மானித்துள்ளோம்" என்று தொடங்கும் குடியரசு சாஸனம் 1949 நவம்பர் 26ம் தேதி ஜனப்பிரதிநிதிகளின் சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. நியாயம், சுதந்திரம், சமத்வம், சகோதரத்வம்—இந்நான்கு உரிமைகளையும் எல்லா இந்தியப் பிரஜைகளுக்கும் இச்சாஸனம் அளிக்கிறது. சமூக வாழ்வு, பொருளாதார நிலை, இடவசதி யாவற்றிலும் எல்லா மக்களுக்கும் நியாயமான பங்கு உண்டு. கருத்து, பேச்சு, நம்பிக்கை, கொள்கை, இறைவன் வழிபாடு முதலியவைகளில் சுதந்திரம் உண்டு. சமூக வாழ்வில் ஒவ்வொரு பிரஜைக்கும் சரிசம சந்தர்ப்ப வசதிகள் கிடைக்கும். எல்லா மக்களும் தத்தம் கௌரவத்தை நிலை நிறுத்திக்கொண்டு, சகோதர நட்புடன் ஒற்றுமையான ஜன சமூகத்தை உருவாக்கவேண்டுமென்பதே நமது குடியரசின் குறிக்கோள். இக்கருத்துக்களை அனுசரித்து குடியரசு ஸ்தாபன சட்டத்தில் விதிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவைகள் நல்ல முறையில் இயங்க இந்திய அரசியலமைப்பில் புதிய மாறுதல்கள் செய்யப்பட்டன.

2. புதிய இந்தியா

நமது குடியரசு நாடு பாரத் எனப்படும். இதன் விஸ்தீரணம் சுமார் 12½ லட்சம் சதுரமைல். 1947க்கு முன் இருந்த இந்தியாவில் இது சுமார் முக்கால் பாகம். சுதந்திரம் அடையும்போது முஸ்லீம் மக்கள் தமக்குத்



தனி நாடு அமைத்துக்கொண்டு பிரிந்து விட்டனர். அந்நாடுதான் பாகிஸ்தான். பாரத் என்னும் நமது

நாடு ஹிந்துஸ்தான் எனவும் வழங்கப்படும். பெயர் அங்ஙனமிருப்பினும் இது ஒரு ஹிந்து இராஜ்ஜியமல்ல. இங்கு எல்லா மதத்தினரும் சம உரிமைகளுடனும் சௌகரியங்களுடனும் வாழ்ந்து வரலாம்.



மகாத்மா காந்தி

பாகிஸ்தான் பிரிவினையினால் பஞ்சாபும் வங்காளமும் இரு பகுதிகளாயின. மேற்கு பஞ்சாபும் கிழக்கு வங்காளமும் பாகிஸ்தானில் சேர்ந்தவை. மிகுந்த கிழக்கு பஞ்சாபும் மேற்கு வங்காளமும் இந்தியாவில் சேர்ந்துவிட்டன. இந்தியாவின் இதர பாகங்கள் நமது குடியரசில் அடங்கியவை. அவை ஒவ்வொன்றும் ஒரு மாகாண இராஜ்ஜியம். சென்னை இராஜ்ஜியம் இரண்டு ஆகப் பிரிக்கப்பட்டது. 1953 அக்டோபர் முதல் தேதி ஆந்திர இராஜ்ஜியம் ஏற்பட்டது.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் அவர்களுக்குட்பட்ட பல சிற்றரசர்கள், சிறு இராஜ்ஜியங்களை ஆண்டுவந்தனர். சுதந்திரக் குடியரசு ஏற்பட்ட பிறகு இவர்கள் என்ன செய்வார்களோ என்ற பீதி இருந்தது. ஆனால் எதிர்பாராத ஒரு அதிசயம் நடந்தது. சிற்றரசர்களெல்லாரும் தம் அரச பதவிகளைத் துறந்து, தமது இராஜ்ஜியங்களை இந்திய யூனியனுடன் இணைக்கச் சம்மதித்தனர். சுதந்

திரப் போராட்டத்தில் மகாத்மா காந்தியுடன் உழைத்த முக்கியமான வீரர்களில் ஒருவர் சர்தார் வல்லபாய் படேல். அவர் முயற்சியால் இராஜ்ஜிய இணைப்பு சாதிக்க முடிந்தது.



சர்தார் வல்லபாய் படேல்

சில இராஜ்ஜியங்கள் தம் அருகே உள்ள மாகாணங்களுடன் சேர்ந்தன. புதுக்கோட்டை, பங்கனப் பள்ளி, சாண்டூர் இம்மூன்றும் சென்னையில் சேர்ந்தன. அஸ்ஸாமுடன் 25 இராஜ்ஜியங்களும், பம்பாயுடன் 178ம், மத்ய பிரதேசத்துடன் 15ம், ஒரிஸ்ஸாவுடன் 24ம், பஞ்சாபுடன் 3ம், உத்திரப் பிரதேசத்துடன் 3 மாகப் பல இராஜ்ஜியங்கள் இணைக்கப்பட்டன.

சில இராஜ்ஜியங்கள் ஒன்றாக இணைந்துகொண்டு கூட்டு இராஜ்ஜியமாயின. தனிப்பட்ட பெரிய இராஜ்ஜியங்கள் மாத்திரம் குடியரசுக்கடங்கிய தனி இராஜ்ஜியங்களாகவே இருக்கின்றன. ஹைதராபாத், காஷ்மீரம், மைசூர் இவை தனி இராஜ்ஜியங்கள். திருவாங்கூரும் கொச்சியும் சேர்ந்து ஒன்றாயிற்று. குவாலியர், இந்தூர் முதலிய 20 மகாராஷ்டிர இராஜ்ஜியங்கள் ஒன்றாகி மத்திய பாரத் என உருவாகிற்று. ஜெயபுரி, ஜோதிபுரி, பிகானிர், ஆள்வார் முதலிய 17 இராஜபுத்திர இராஜ்ஜியங்கள் சேர்ந்து இராஜஸ்தான் ஆகியது. பாடி-

யாலா, கபர்துலா முதலிய 8 இராஜ்ஜியங்கள் பெப்சு ஆகிற்று. (Patiala East Punjab States Union—PEPSU பெப்சு என்ற புதுப்பெயர் ஏற்பட்டது.) ராஜ்கோட், பவநகர், நவநகர், போர்பந்தர் முதலிய 221 சிறு இராஜ்ஜியங்கள் ஒன்று சேர்ந்து சௌராஷ்டிரம் எனத் தோன்றிற்று. மண்டி, சம்பா முதலிய 21 சிறு இராஜ்ஜியங்கள் தான் ஹிமாசல பிரதேசம். ரிவா முதலிய 35 இராஜ்ஜியங்கள் கூடியது விந்திய பிரதேசம்.

இவ்விதம் நூற்றுக்கணக்கான பல சிறிய இராஜ்ஜியங்கள் இணைக்கப்பட்டன. சுமார் 600 இராஜ்ஜியங்களுக்குப் பதிலாக இப்போது 10 பெரிய பகுதிகளே உள. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு இராஜப் பிரமுகர் தலைவர். மைசூர், ஹைதராபாத் போன்ற தனிப்பட்ட இராஜ்ஜியங்களில் முன் இருந்த ராஜாக்களே ஜனாதிபதிக்கு அடங்கிய இராஜப் பிரமுகர்கள். கூட்டு இராஜ்ஜியங்களில் பிரபலஸ்தரான பெரிய ராஜாக்கள் இராஜப் பிரமுகர்களாக உளர்.

நமது நாட்டில் உள்ள அந்நிய ஆட்சித் திட்டுகள்

பிரிட்டிஷார் தங்கள் ஆட்சியை இந்திய மக்களிடம் ஒப்படைத்துவிட்டு வெளியேறிய பிறகும் இந்தியாவில் இன்னும் சில இடங்கள் அந்நியரால் ஆட்சி செய்யப்படுகின்றன. பிரெஞ்சு ஆதிக்கம் உள்ள புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் முதலிய இடங்களில் வாழும் இந்திய மக்கள் தங்கள் தாய் நாட்டுடன் சேர வேண்டுமென்று ஆவல் கொண்டு அரும்பாடு படுகிறார்கள். பிரிட்டிஷாரைப் போலவே சுமுகமாக விலகிவிட

பிரெஞ்சு அதிகாரிகள் முதலில் சம்மதிக்கவில்லை. மக்களது சுதந்திரக் கிளர்ச்சி மிகவும் வலுவடைந்து மாஹி, ஏனும் விடுதலை பெற்றன. ஆயினும் பிரான்சு வல்லரசு இது விஷயமாக இன்னும் இந்திய சர்க்காருடன் சமரசப் பேச்சு நடத்தி வருகிறார்கள். கூடிய சீக்கிரம் புதுச்சேரியும் காரைக்காலும் இந்தியக் குடியரசுடன் இணைந்துகொள்ளும் என்று நம்ப இடம் உண்டு.

போர்த்துகீசியரும் இந்தியாவில் கோவா, டய்யு, டாமன் என்ற இடங்களை இன்னும் ஆட்சி செய்கின்றனர். இக்கால உலகப் போக்கை அனுசரித்து அவர்களும் தங்கள் அதிகாரத்தை மக்கள் இஷ்டப்படி விட்டு விடுவதே நியாயமாகும். ஆனால் போர்த்துகீசியர் தாங்களே முதல் முதலில் 400 வருஷங்களுக்கு முன் கிழக்கு இராஜ்ஜியத்தை ஸ்தாபித்தவர்கள், கோவாவும் போர்த்துக்கல் நாட்டின் ஒரு பகுதி என விதண்டாவாதம் செய்கின்றனர். தங்கள் ஆட்சியைவிட்டு விலக முடியாது என சாதித்தனர். ஆனால் இதர நாடுகள் அவர்கள் பிடிவாதத்தை ஏற்கவில்லை. உலக அபிப்பிராயம் தங்களது அநியாயப் போக்கை ஆதரிக்காதது கண்ட போர்த்துகீசிய சர்க்கார் இப்போது மத்யஸ்தத்திற்கு விடத் தயார் என ஒப்புக்கொண்டுளர். கூடிய சீக்கிரம் இந்தப் பிரச்சினையும் நியாயப்படி பரிசீலிக்கப்பட்டு, மக்கள் இஷ்டப்படி இந்த இடங்கள் இந்திய நாட்டுக் குடியரசு ஆட்சியில் கலந்துகொள்ளும்.

3. குடியரசின் அமைப்பு

அரசாங்கம்

இந்திய அரசியலமைப்புத் திட்டப்படி இயங்க அடிப்படையான தேவைகள் உள. அவை வருமாறு :


1. ராஜாங்கத் தலைமை.
2. மக்கள் பிரதிநிதிகளின் சபைகள்.
3. மேற்படி சபைகளுக்குட்பட்ட பொறுப்புள்ள மந்திரி நிர்வாகம்.
4. மத்திய சர்க்காருக்கும், இதர இராஜ்ஜிய சர்க்கார்களுக்கும் உள்ள அதிகாரப் பங்கீடுகள்.
5. அதிகார ஸ்தாபனங்கள் தம் அதிகார எல்லையை மீருமல் நடக்கிறதா என்பதைப் பற்றி நியாயம் கூறவல்ல நீதி மன்றம்.
6. இதர சில்லரை ஸ்தாபனங்கள்.

மேற் குறிப்பிட்டவைகளிற் சில முக்கியமான ஸ்தாபனங்களைப் பற்றியும், அவை செயல் புரியும் முறைகளைப் பற்றியும் இப்பொழுது சுருக்கமாகத் தெரிந்து கொள்வோம்.

ஜனதிபதி

குடியரசுத் தலைவர் ஜனதிபதி (President) அல்லது ராஷ்டிரபதி எனப்படுவர். ஜனதிபதியே அரசர் போன்றவர். ஆனுல் தந்தைக்குப் பின் அவன் மகன் அரசு உரிமை கொண்டாடுவதுபோல ஜனதிபதியின் மகன் அவருக்குப் பின் அப்பதவிக்கு உரிமை

சமஷ்டி யூனியன் சர்க்கார்



கொண்டாட முடியாது. பொதுஜன சமூகத்தில் ஜனாதிபதியும் ஒருவர். லோக சபை என்னும் மக்கள் சபை, இராஜ்ஜிய சபை என்னும் இராஜாங்க கௌன்சில் இவைகளில் உள்ள ஜனப்பிரதிநிதிகள் தம்மில் மிகச் சிறந்த ஒருவரை ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுப்பார்கள். இப்பதவியில் அவர் ஐந்து வருஷகாலமே இருக்கலாம். பிறகு அப்பதவிக்கு மறுபடியும் தேர்தல் நடக்கும். முன்னிருந்த ஜனாதிபதியையே மறு முறையாக இன்னும் ஐந்து வருஷ காலத்திற்குப் பதவியில் அமர்த்தலாம். அல்லது வேறொருவரைத் தேர்ந்தும் எடுக்கலாம்.

ஜனாதிபதி தன் இஷ்டப்படி ஆட்சி செய்ய முடியாது. மக்கள் சபை இயற்றும் சட்டதிட்டங்களை அனுசரிக்க வேண்டும். ஜனப்பிரதிநிதிகள் சபைகளில் மூன்றில் இரண்டுபங்கு எண்ணிக்கையினர் விரும்பினால் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகவேண்டும். அவரே நேரிடையாக ஆட்சி செய்யாமல் மந்திரிகள் வசம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைப்பார். மந்திரிகளும், ஜனப்பிரதிநிதி சபைகளில் உள்ளவர்கள். சபையில் பெரும்பான்மையோர் மந்திரிகளை ஆதரித்து அவர்கள் ஆட்சித் திட்டங்களை ஒப்புக்கொள்ள வேண்டும். ஜனாதிபதியின் அதிகாரமும் மந்திரிகளின் ஆட்சியும் ஜனங்களது ஆதரவில்தான் நடைபெற முடியும். இதுவே குடியரசின் அடிப்படையான தத்துவம்.

நிலம், கடல், வானம் என்று மூவகைப் படைகளுக்கும் ஜனாதிபதியே தலைவர். நீதி வழங்குவதில் தண்டனையைக் குறைக்கவோ அல்லது மன்னிப்பு அளிக்கவோ அவருக்கு அதிகாரம் உண்டு. இராஜ்ஜிய கவர்னர்கள், அயல்நாடுகளுக்கு அனுப்பப்படும் தூதர்

கள், உயர்நீதி மன்ற நீதிபதிகள், ஆட்சி நிர்வாக ஊழியர்களை நியமிக்கும் சபையினர்கள் முதலியவர்களை ஜனாதிபதி நியமிப்பார். அரசாங்க செலவு கணக்குகளைப் பரிசோதிக்கும் அதிகாரி (Auditor-General) யையும் அவர் நியமிப்பார்.

லோக சபை அல்லது மக்கள் சபை (அதாவது பார்லிமெண்டு) கூடாத சமயங்களில், நாட்டில் ஏதேனும் அவசர நிலைமை ஏற்பட்டால் உடனே சமாளிக்க வேண்டி, புதிய சட்டங்களை ஜனாதிபதி பிரகடனம் செய்யலாம். சண்டை, உள்நாட்டுக் கலகம் முதலிய நெருக்கடியான சந்தர்ப்பங்களில் தற்காலிக அவசர ஆட்சி ஏற்பாடுகளை ஜனாதிபதி செய்ய வேண்டும்.



டாக்டர் ராதாகிருஷ்ணன்
உப ஜனாதிபதி

உப ஜனாதிபதி

ஜனாதிபதி தாமே ஆட்சி விஷயங்களைக் கவனிக்க முடியாத நிலையில் உப ஜனாதிபதி ஆட்சி வேலைகளை நடத்துவார். ஒரு ஜனாதிபதி பதவியிலிருந்து விலகிய பிறகு அடுத்த ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும்வரை உப ஜனாதிபதியே ஆட்சியைக் கவனிக்க வேண்டும்.

4. மக்கள் சபைகள்

குடியரசு யூனியன் (மத்திய அரசாங்கம்) சபைகளாவன :—

1. பார்லிமெண்டு (Parliament). இது மக்கள் சபை அல்லது லோக சபை எனப்படும்.
2. இராஜ்ஜிய சபை (Council of States) அல்லது இராஜாங்க கௌன்சில்.

பார்லிமெண்டு சபை 500 ஜனப் பிரதிநிதிகள் கொண்டது. ஒவ்வொருவரும் பல மக்களது வாக்கு (Vote) பெற்றவர்கள்.

21 வயது ஆன ஒவ்வொரு இந்தியப் பிரஜைக்கும், ஆண் பெண் பிரஜைக்கும், குடியரசு ஆட்சியில் பங்கு உண்டு. அதாவது தன் அபிப்பிராயத்தை வோட் சீட்டில் (ballot paper) குறிப்பிட்டுத் தான் விரும்பும் பிரதிநிதியை ஒவ்வொரு பிரஜையும் தேர்தல் செய்ய முடியும். 'என் நாட்டில் நானே ராஜா' என்று ஒவ்வொரு பிரஜையும் எண்ணுவது மிகவும் பொருத்தமானது.


'வோட்' அளிக்கும் சுதந்திரமே ஒரு பிரஜையின் உரிமை. அநேக நாடுகளில் எல்லா ஜனங்களுக்கும் இன்னும் பிரஜா உரிமை இல்லை. படிப்பு, ஆஸ்தி, உள்ளவர்களுக்கே இந்த உரிமை உண்டு. ஸ்திரீகளுக்கு இன்னும் அநேக நாடுகளில் 'வோட்' உரிமை கிடை

யாது. இங்கிலாந்தில் கூட ஸ்திரீகள் 'வோட்' உரிமை அடைய வேண்டிப் பல ஆண்டுகள் பாடுபட்டார்கள். ஆனால் நம் குடியரசு ஸ்தாபிதமான உடனேயே ஆண் பெண், ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளி, ஹிந்து முஸ்லிம், முதலிய வித்தியாசங்கள் இன்றி, 21 வயது ஆன எல்லாப் பிரஜைகளுக்கும் 'வோட்' உரிமை அளிக்கப்பட்டது.

முதல் தேர்தல்

1952ல் முதல் தேர்தல் நடைபெற்றது. இது மிகவும் பிரமாதமான ஒரு வேலை. வோட் உரிமை பெற்றவர்களின் ஜாபிதா தயார் செய்யப்பட்டது. நாடெங்கும் தேர்தல் ஏற்பாடுகள் நிறுவப்பட்டன. யூனியன் சபைகளுக்கும் இராஜ்ஜிய சபைகளுக்கும் மக்கள் தம் பிரதிநிதிகளைத் தேர்தல் செய்தார்கள். சுமார் 17 கோடி வாக்காளர்கள் வோட் கொடுக்க வேண்டியவர்கள். 60 கோடி 'வோட்' சீட்டுகள் தயார் ஆயின. 225 ஆயிரம் தேர்தல் இடங்கள் நிறுவப்பட்டன. சுமார் ஒரு லட்சம் அதிகாரிகளும் குமாஸ்தாக்களும் உழைத்தார்கள். சுமார் 10½ கோடி வாக்காளர்கள் 'வோட்' அளித்தார்கள். இந்தத் தேர்தல் நடத்த சுமார் 9½ கோடி ரூபாய் செலவு ஆயிற்று.

சுதந்திரம் அடைந்த உடனேயே முதல் தேர்தலிலேயே தமது குடியரசு உரிமையை அறிந்து ஜனங்கள் பயன்படுத்தியது மிகவும் வியக்கத்தக்கது. நூற்றுக்குச் சுமார் 61 பேர் வோட் அளித்தார்கள். ஜனநாயக ஆட்சி தொடக்கத்திலேயே இந்திய ஜனங்


ஜனாதிபதி தேர்தல்
ஜனாதிபதி
ராஜ்ய சட்ட சபை
மெம்பர் தேர்தல்
யூனியன் சட்ட மன்றத்திற்கு
தேர்ந்தெடுக்கப்பட்ட
அங்கத்தினர்கள்
கூட்டாகத்
தேர்ந்தெடுக்கப்
பட்டவர்
உப-ஜனாதிபதி
ஜனங்கள்

களது முற்போக்கான வெற்றி ஏற்பாடுகளைப்பற்றி உலகம் முழுவதும் மெச்சிப் பாராட்டியது.

மக்கள் சபை அல்லது லோக சபை


ஐந்து வருஷகாலமே ஜனப்பிரதிநிதிகள் பதவியில் இருக்க முடியும். பிறகு மறுபடியும் ஜனங்கள் தேர்தல் நடத்திப் புதிய பிரதிநிதிகளைப் பொறுக்குவார்கள். ஜனங்களது அபிப்பிராயங்களும் ஆசைகளும் அவ்வப் போது ஏற்படும் சம்பவங்களுக்கேற்ப மாறுகின்றன. இந்த மாறுதல்களை அனுசரித்து ஆட்சி நடத்தும் ஜனப்பிரதிநிதிகளும் மாறவேண்டும். ஐந்து வருஷங் களுக்கு ஒரு முறை தேர்தல் இருப்பதால், ஜனங்களது புதிய கருத்துக்களைப் பிரதிபலிக்கும் புதிய பிரதிநிதிகள் ஆட்சி சபைகளில் இடம் பெறுவார்கள்.

முதல் முதல் சபை கூடியவுடன், சபை மெம் பர்கள் தமக்குள் ஒருவரைச் **சபாநாயகர்** (Speaker) ஆகத் தேர்ந்தெடுக்கவேண்டும். சபைக் கூட்டங்களை ஒழுங் காக நடத்திக் கவனிப்பது அவரது வேலை. சபையின் கௌரவத்தைக் காப்பது அவரது பொறுப்பு.

வருஷம் இரு முறைகளுக்குக் குறையாமல் சபை கூட வேண்டும். சாதாரணமாக ஒவ்வொரு தடவை யிலும் 30 அல்லது 40 நாட்களுக்குச் சபை நடை பெறலாம். பிரயாணச் செலவும், சபை கூடும் நாட்களில் தினப்படிச் செலவும் தவிர மாதச் சம் பளமும் ஜனப்பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும்.

ஆட்சி சம்பந்தமான எந்த விஷயத்தைப் பற்றியும் மக்கள் சபை சட்டங்கள் இயற்றலாம். வரவு செலவு

பார்லிமெண்ட்





இனங்களைப் பற்றிப் பரிசீலனை செய்து குறைக்கவோ கூட்டவோ சபைக்கு அதிகாரம் உண்டு. நிதி சம்பந்தமான எல்லா விஷயங்களிலும் முடிவான அதிகாரம் மக்கள் சபைக்கே உரியது.

ஏதேனும் ஒரு மாகாண இராஜ்ஜியத்தில் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டதாக ஜனாதிபதி அறிவித்தால், அதற்கான அவசர சட்டங்களையும் இந்தச் சபை பிறப்பிக்கவேண்டும்.

இராஜாங்க கவுன்சில் அல்லது இராஜ்ஜிய சபை (Council of States).

இதில் மொத்தம் அதிகபட்சமாக 250 மெம்பர்கள். இதில் 12 பேர்கள் ஜனாதிபதியால் நியமனம் செய்யப்பட்டவர்கள். மிகுதியுள்ளவர் இராஜ்ஜியவாரியாக அந்தந்த இராஜ்ஜியப் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

குடியரசின் உப ஜனாதிபதியே இந்த கவுன்சில் தலைவர்.

5. மந்திரி சபை

ஜனங்களே ஆட்சி செய்வது என்ருல் எப்படி? ஜனங்கள் தேர்தல் செய்து அனுப்பிய ஜனப்பிரதிநிதிகள் சபையில் அதிக செல்வாக்குள்ள கட்சியினர்களே ஆட்சிப் பொறுப்பை ஏற்று நிர்வகித்து நடத்துவார்கள். அவர்களே மந்திரிகள். அவர்கள் செய்யும் வேலையைச் சபையில் பெரும்பான்மையோர் ஆதரிக்கவேண்டும்.


பிரதம மந்திரி

பார்லிமெண்டில் அதிக செல்வாக்குள்ள கட்சித் தலைவரை ஜனதிபதி அழைத்து, ஆட்சிப் பொறுப்பை அவரிடம் ஒப்புவிப்பார். கட்சித் தலைவர் தானே பிரதம மந்திரி (Prime Minister) யாகப் பதவி ஏற்கலாம். அல்லது தன் கட்சியில் இன்னெருவரை பிரதம மந்திரியாக இருக்கச் சொல்லலாம். ஜனதிபதியே பிரதம மந்திரியை நியமிப்பார் எனினும், அவரும் கட்சித் தலைவரது யோசனையை அனுசரிப்பார். பிரதம மந்திரி தனக்கு உதவியாக மற்றும் பல மந்திரிகளை நியமித்துக் கொள்வார். அவர்களை ஜனதிபதியும் அங்கீகரிப்பார்.

கூட்டுப் பொறுப்பு

ஆட்சி அலுவல்களை மந்திரிகள் தமக்குள் பங்கிட்டுக் கொண்டு மேற்பார்வை செய்து நடத்துவார்கள். எல்லா மந்திரிகளும் ஒற்றுமையாக கூட்டுப் பொறுப்புடன் வேலை செய்யவேண்டும். அதாவது பிரதம மந்திரிக்கே முக்கியமான பொறுப்பு. மந்திரிகள்

லோக சபையில் அதிக எண்ணிக்கை உள்ள
கட்சித் தலைவரை ஜனாதிபதி
நியமித்தல்



நடத்தும் ஆட்சி ஜனப்பிரதிநிதிகளுக்குப் பாதகமாக இருந்தால், மந்திரிகள் திட்டங்களை அவர்கள் ஆதரிக்க மாட்டார்கள். சபையில் 'வோட்' எடுக்கும்போது மந்திரிகளை ஆதரிக்கும் வோட்டுகள் அதிகப்படியாகக் குறைந்துவிட்டால், மந்திரிகள் பதவியைத் துறந்துவிட வேண்டும். பிரதம மந்திரி தன் பதவியை 'ராஜிநாமா' (resign) செய்துவிட்டு, மந்திரி சபையைக் கலைத்து விடுவார். சபையின் நோக்கத்தை அறிந்து, அதிக ஆதரவு உள்ள இன்னொரு மந்திரி சபையை ஜனாதிபதி ஏற்பாடு செய்வார். இதுவே ஜன ஆட்சியில் முக்கிய மான தத்துவம். ஜனங்கள் (அதாவது ஜனப்பிரதிநிதி கள்) விருப்பத்திற்கு ஏற்ப மந்திரிகள் ஆட்சி அலுவல் களை நடத்தவேண்டும்.


6. இராஜ்ஜிய ஆட்சி

ஒவ்வொரு இராஜ்ஜியத்திற்கும் ஒரு கவர்னரோ, ராஜப் பிரமுகரோ, சீப் கமிஷனரோ சம்பிரதாயத்தை அனுசரித்து, ஜனாதிபதியால் நியமிக்கப்படுவர். இவர் களின் பதவி குறைந்தது ஐந்து வருஷ காலத்திற்கு நீடித்திருக்கும். இராஜ்ஜியத்தின் விஸ்தீரணத்திற் கும், ஜனத் தொகைக்கும் தக்கபடி ஒன்றோ அல்லது இரண்டோ சட்டசபைகள் உண்டு.

இராஜ்ஜிய மாகாண சபைகள்

எல்லா இராஜ்ஜியங்களிலும் சட்டசபைகள் உண்டு. அந்தந்த இராஜ்ஜிய ஜனத் தொகையை அனுசரித்து ஒவ்வொரு சபைக்கும் எவ்வளவு பிரதிநிதிகள் என்று

ஜனாதிபதி நியமனம்
இராஜ்ஜிய கவர்னர்
அல்லது



ஜனங்களது வோட் பெற்ற பிரதிநிதிகள்

கணக்கு விதிக்கப்பட்டுள்ளது. எல்லாச் சபைகளிலுமாக மொத்தம் சுமார் 4000 மெம்பர்கள். ஒவ்வொரு பிரதிநிதியும் சுமார் 50 முதல் 70 ஆயிரம் மக்களின் சார்பாக இருப்பதாகச் சொல்லலாம். ஐந்து வருஷங்களுக்கு ஒரு முறை பொதுத் தேர்தல் நடைபெறும். புதிய சட்ட சபைகள் அமைக்கப்படும்.

சட்ட சபை (Legislative Assembly)

ஒவ்வொரு இராஜ்ஜிய சட்ட சபையும் அந்தந்த இராஜ்ஜிய சம்பந்தமான விஷயங்களைப் பற்றி சட்ட திட்டங்களை அமைக்கவேண்டும். யூனியன் (மத்ய) ஆட்சிக்கு உட்பட்ட விஷயங்களைப் பற்றி இராஜ்ஜிய சட்ட சபைகள் யோசனைகள் கூறலாமேயன்றி சட்டம் இயற்ற அதிகாரம் இல்லை.

வருஷம் இரு முறைகளாவது சட்ட சபை கூட வேண்டும். ஒரு கூட்டத்திற்கும் அடுத்த கூட்டத்திற்கும் இடையே ஆறுமாத காலத்திற்குமேல் ஆகக் கூடாது.

சபாநாயகர் (Speaker)

சபையின் முதல் கூட்டத்தில் சபாநாயகர், உப சபாநாயகர் (Deputy Speaker) பதவிகளுக்குத் தேர்தல்கள் நடைபெறும். சபைக் கூட்டம் ஒழுங்காக நடைபெறுவதற்குச் சபாநாயகர் பொறுப்பாளி.

வருஷ ஆரம்பத்தில் அடுத்த வருஷ வரவு செலவு திட்டத்தை முதல் மந்திரி (அல்லது நிதி மந்திரி) சபையில் ஆஜர் செய்வார். சபை மெம்பர்கள் அத்திட்டத்

தைப் பரிசீலனை செய்து, யோசனைகள் சொல்வார்கள்; திருத்தங்கள் கொண்டு வருவார்கள். சபையினர் 'வோட்' பிரகாரம் ஒவ்வொரு திருத்தமும் ஏற்றுக் கொள்ளப்படலாம் அல்லது புறக்கணிக்கப்படலாம்.

சட்ட கவுன்சில் (Legislative Council)

எல்லா இராஜ்ஜியங்களிலும் சட்ட கவுன்சில்கள் இல்லை. ஏழு பெரிய இராஜ்ஜியங்களில் மாத்திரமே உண்டு. சென்னையில் சட்ட கவுன்சில் உண்டு.

இரு சபைகள் உள்ள ஒவ்வொரு இராஜ்ஜியத்திலும் சட்ட சபை மெம்பர்கள் சங்கியையில் நான்கில் ஒரு பகுதியளவு கவுன்சில் மெம்பர்கள் இருக்கவேண்டும். கவுன்சில் மெம்பர்கள் சங்கியையில் மூன்றில் ஒரு பகுதி இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறையாக விலகிவிட வேண்டும்.

சென்னை சட்ட கவுன்சில் ஏற்பட்டவுடன் சீட்டுக் கள் போட்டுப் பார்த்து, மெம்பர்களில் யார் யார் இரண்டு வருஷ முடிவில் விலக வேண்டும்: நான்கு வருஷ முடிவில் யாவர், ஆறு வருஷ முடிவில் யாவர் என்று நிர்ணயிக்கப்பட்டது. இரண்டு வருஷ காலத் திற்குப் பிறகு மூன்றில் ஒரு பகுதி மெம்பர்கள் விலகிய வுடன், அவர்களுக்குப் பதில் புதிய மெம்பர்கள் தேர்தல் செய்ய வேண்டும். இப்படிச் செய்வதால் சட்ட கவுன் சில் முழுவதுமே ஒருபோதும் கலைக்கப்படமாட்டாது.

சட்ட கவுன்சில் மெம்பர்களில் ஆறில் ஒரு பகுதி யினரைக் கவர்னர் நியமிப்பார். ஆறில் இரண்டு பகுதிகள் இராஜ்ஜிய சட்ட சபை மெம்பர்கள் தேர்தல் செய்து

அனுப்புவார்கள். ஆறில் மூன்று பகுதிகள் (அதாவது பாதி) லோகல் போர்டுகள், கல்லூரிப் பட்டதாரிகள், ஆசிரியர்கள் இவர்களால் தேர்தல் செய்யப்படும்.

சட்ட கவுன்சில் முதல் முதல் கூடியவுடன் தலைவர், உபதலைவர் இவர்களைத் தேர்ந்து நியமித்துக் கொள்ள வேண்டும்.



ஸ்ரீ காமராஜ நாடார்
(சென்னை இராஜ்ஜிய முதல் மந்திரி)

இராஜ்ஜிய மந்திரி சபை

இதற்குத் தலைவர் முதல் மந்திரி. சட்ட சபையில் அதிக மெம்பர்கள் ஆதரவு பெற்ற கட்சியினரே மந்திரி சபை ஏற்க முடியும். அதிக ஆதரவு பெற்ற கட்சித்

தலைவரைக் கலந்துகொண்டு முதல் மந்திரியைக் கவர்னர் நியமனம் செய்வார். தன் கட்சி சகாக்களில் சிலரைத் தன் சகா மந்திரிகளாக முதல் மந்திரி பொறுக்கிக் கொள்வார்.



ஸ்ரீ ஸ்ரீபிரகாசா
(சென்னை இராஜ்ஜிய கவர்னர்)

ஆட்சி அலுவல்கள் பலவற்றையும் முதல் மந்திரி யின் யோசனைப் பிரகாரம் இதர மந்திரிகள் பங்கிட்டுக்

கொண்டு, அவரவர் பகுதியில் ஆட்சி வேலைகளைக் கவனித்து நடத்துவார்கள். இவ்வாறு பல மந்திரிகள் ஆட்சி வேலைகளைப் பங்கிட்டுக்கொண்டாலும் ஆட்சி முழுமையும் கூட்டுப் பொறுப்பாக மந்திரிசபையே ஏற்றுக் கொள்ளவேண்டும். அதாவது முதல் மந்திரியே ஆட்சிக்குப் பொறுப்பாளியாவர்.

கவர்னரது அதிகாரம்

இராஜ்ஜிய வேலையை நடத்தும் பொறுப்பு கவர்னருடையது என்று பெயரளவில் இருந்தாலும், அவர் தம் இஷ்டப்படி ஒன்றும் செய்யமுடியாது. பொது ஜன ஊழியர்களில் கவர்னர் முதன்மையானவர் என்று சொல்லவேண்டும். இராஜ்ஜிய ஆட்சி முழுவதும் மந்திரிகள் மூலமாகவே நடைபெறும்.

சில சந்தர்ப்பங்களில் தண்டனை குறைப்பதும் மன்னிப்பு அளிப்பதும் ஆகிய அதிகாரம் கவர்னருக்கு உண்டு. இரு சபைகளையும் அவ்வப்போது கூட்டுவதும் கலைப்பதும் அவரது அதிகாரம். கவர்னர் சிபார்சு இல்லாமல் நிதி சம்பந்தமான 'பில்' அல்லது செலவுக்காகப் பணம் கேட்பது சபையில் அனுமதிக்கப் படமாட்டாது. சட்டசபை கூடாத இடைவெளிக் காலத்தில் ஏதேனும் நெருக்கடி நிலைமை உண்டாகுமானால் அவசரச் சட்டங்களை ஏற்படுத்தி அமைதி நிலைக்கச் செய்வது கவர்னர் வேலையாகும்.

7. ஆட்சி நிர்வாகப் பங்கீடு

(அ) ஆட்சி வேலைகளில் முக்கியமான சில பகுதிகளை மாத்திரம் இந்திய அரசாங்கம் நிர்வகித்து நடத்

தும். அவை பின்வருவன :—நாட்டுப் பாதுகாப்பு, வெளிநாட்டு உறவாடல், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம், ரயில் மார்க்கங்கள், முக்கிய துறைமுகங்கள், ஆகாய விமானங்கள், தபால், தந்தி, டெலிபோன், வானொலி, வெளிநாடுகளுடன் ஏற்றுமதி, இறக்குமதி, சுங்கவரி, பாங்கு, இன்ஷியூரன்ஸ், சினிமாத் தணிக்கை, வருமான வரி; பனாரஸ், அலிகார், டில்லி, உஸ்மானிய சர்வகலா சாலைகள், ஆராய்ச்சி நிலையங்கள், யூனியன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் முதலியன.

(ஆ) கீழ்க்கண்டவை மாகாண ஆட்சியின் பொறுப்பிலுள்ளவை : போலீஸ், நீதி வழங்குவது, ஜெயில், சுகாதாரம், ஆஸ்பத்திரி, கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம், நிலவரி, காடுகள், மீன்வளம், உள்நாட்டு வியாபாரம், வருமானவரி நீங்கலாக மற்ற வரிகள்.

(இ) யூனியன், மாகாணம் இரண்டும் கலந்து கவனிப்பவை (Concurrent list)—இந்திய பினல் கோடு, விவாகப்பதிவு, ஜீவஹிம்சை தடுப்பு, தொழிற்சங்கம், அகதிகள் நிவாரணம், ஜனனமரணம், விலைவாசி கட்டுப்பாடு, தொழிற்சாலை, மின்சக்தி முதலியன.

இப் பாகுபாட்டினாலும், அரசியலமைப்பினாலும் இந்திய மக்கள் ஒவ்வொருவரும் ஒரே சமயத்தில் மத்திய சர்க்கார் சேவையையும், இராஜ்ஜிய சர்க்கார் சேவையையும் பெற வசதி ஏற்படுகிறது. மேலும் இரு சர்க்கார்களும் மக்களிடமிருந்து நேர்முகமாக அதிகாரம் பெறுவதால் இது சாத்தியமாகிறது.

சில புள்ளி விவரங்கள்

மாகாண இராஜ்ஜியங்கள், கூட்டு இராஜ்ஜியப் பகுதிகள் முதலியவைகளைப் பற்றிய விவரங்கள் : இவை 1951-ம் வருஷத்திய ஜனகணிதை (Census)ப் பிரகாரம்.

மாகாண இராஜ்ஜியங்கள் (Part A States)

		விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத் தொகை	மக்கள் சபை பிரதிநிதிகள்	இராஜ்ஜிய கவுன்சில் மெம்பர்கள்	இராஜ்ஜிய சபை மெம்பர்கள்
1	அஸ்ஸாம்	85, 012	9,043,709	13	6	105
2	பிஹார்	70, 330	40,225,947	55	21	330
3	பம்பாய்	111, 434	35,956,150	45	17	315
4	மத்தியப் பிரதேசம்	130, 272	21,247,533	29	12	232
5	சென்னை	60, 506	35,734,489	75	18	230
6	ஆந்திரா	67, 284	20,507,801		9	140
7	ஒரிஸ்ஸா	60, 136	14,645,946	20	9	140
8	பஞ்சாப் (கிழக்கு)	37, 378	12,641,205	18	8	126
9	உத்திரப் பிரதேசம்	113, 409	63,215,742	86	31	430
10	வங்காளம் (மேற்கு)	30, 775	24,810,308	34	14	238
	மொத்தம் ...	766, 536	278,028,830	375	145	2286

கூட்டு இராஜ்ஜியப் பகுதிகள் (Part B States)

		விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத் தொகை
1	ஹைதராபாத்	82,168	18,655,108
2	ஜம்மு காஷ்மீரம்	92,780	43,700,000
3	மத்திய பாரத்	46,478	7,954,154
4	மைசூர்	29,489	9,674,972
5	பெப்சு	10,078	3,493,685
6	இராஜஸ்தானம்	130,207	15,290,797
7	சௌராஷ்டிரம்	21,451	4,137,359
8	திருவாங்கூர் கொச்சி	9,144	9,280,425
	மொத்தம் ...	421,795	112,186,500

கூட்டு இராஜ்ஜியப் பகுதிகள் (Part C States)

		விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத் தொகை
1	ஆஜ்மீர்	2,417	693,372
2	போபால்	6,878	836,474
3	பிலாஸ்பூர்	453	126,099
4	கூர்க் (குடகு)	1,586	229,405
5	கட்ச்	16,724	567,606
6	டெல்லி	578	1,744,072
7	ஹிமாசலப்பிரதேசம்	10,451	983,367
8	மணிபூர்	8,628	577,635
9	திரிபுரா	4,032	639,029
10	விந்தியப் பிரதேசம்	23,603	3,574,690
	மொத்தம் ...	75,350	9,971,749

கூட்டு இராஜ்ஜியப் பகுதிகள் (Part D States)

		விஸ்தீரணம் சதுர மைல்	ஜனத் தொகை
1	அந்தமான்நிக்கோபர்	3,215	30,971
2	சிக்கிம்	2,744	137,925
	சர்வ மொத்தம் ...	503,104	121,727,145

அதிகாரிகளும், அதிகார ஸ்தாபனங்களாகிய சட்ட சபைகளும் ஒழுங்காகச் செயல்படுகின்றனவா என்பதைப் பற்றி நியாயம் கூற ஒரு உயர்தர நீதிமன்றம் (Supreme Court) உண்டு. சட்ட விஷயங்களில் மிகவும் தேர்ச்சியும் அனுபவமும் பெற்ற நீதிபதிகளை ஜனாதிபதி நியமிப்பார்.

இதுவன்றி, நாட்டின் வரவு செலவு கணக்குகளைக் கண்காணிப்பதற்கென்று தலைமை சோதனையாளர் (Auditor-General) ஒருவரையும், அரசியல் நிர்வாகத்திற்குத் தேவையான சிப்பந்திகளைத் தேர்ந்தெடுக்கும் சர்விஸ் கமிஷன் அங்கத்தினரையும் ஜனாதிபதி நியமிப்பார்.


8. நாட்டுப் பாதுகாப்பு

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் நாட்டுப் பாதுகாப்பிற்காகப் பிரிட்டிஷ் சேனைகளும் பிரிட்டிஷ் சேனாதிபதிக் கடங்கிய இந்தியத் துருப்புகளும் இருந்தன. ஆனால் சுதந்திரக் குடியரசு ஏற்பட்ட பிறகு இந்தியப் படைகளே அப்பொறுப்பு முழுவதையும் ஏற்கவேண்டியதாயிற்று. நாட்டின் அமைதியை நிலைநிறுத்தவும், அண்டை அயல் நாடுகளின் ஆக்கிரமிப்பைத் தடுக்கவும், நம் சேனை பலத்தை அதிகரிக்க வேண்டியது அவசியமாயிற்று. உலகத்தில் சண்டை சச்சரவு இன்றி, எல்லா விஷயங்களையும் நேசமனப் பான்மையுடன் தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பதே மகாத்மா காந்தியின் கொள்கை. அவருடைய உத்தம சீடராகிய ஜவஹர்லால் நேரு அக்கொள்கையை மேற்கொண்டுள்ளார். வலிய சண்டைக்குப்போக மாட்டோம், ஆனால் ஒருவர் சண்டைக்கு வந்தால் பின் வாங்கமாட்டோம் என்பதே அவர் தீர்மானம். மக்கள் சபையும் அதை அங்கீகரித்துள்ளது. அதற்கிணங்க, நமது சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியது அவசியம். அதை அனுசரித்து இந்தியப் படை பலத்தைச் சீர்படுத்தி உருவாக்கும் திட்டம் மிகவும் முக்கியம்.

நிலப்படை, கப்பல் படை, ஆகாயப் படை என நமது படையில் மூன்று பிரிவுகள் உண்டு. இம்மூவகைப் படைகளுக்கும் ஜனாதிபதியே தலைவர். ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு தனி சேனாதிபதி உண்டு.

நிலப்படை


இதற்கு இப்போது ஜெனரல் ராஜேந்திரசிங் சேனாதிபதி. அவருக்கு முன் இருந்தவர் ஜெனரல் கரியப்பா. அவர்தான் சேனாதிபதி பதவி வகித்த முதல் இந்தியர்.




ஜெனரல் கரியப்பா

நிலப்படை மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொன்றிற்கும் ஒரு தளபதி இருக்கிறார். 1950-ல் எல்லாச் சிற்றரச ராஜ்ஜியங்களும் குடியரசில்

இணைக்கப்பட்ட பிறகு அவர்களின் சேனைகளும் குடியரசு சேனாதிபதியின் கீழ் இணைக்கப்பட்டன.




பீரங்கி தாங்கிய மோட்டார்



டாங்கி

தற்கால யுத்த முறைகளுக்கேற்றவாறு நிலப்படையிலும், இதர பகுதிகளிலும் பல பிரிவுகள் இருக்கின்றன. கவசம் பூண்ட தொட்டிக்கார்கள் (Tanks), வான பீரங்கிப் படை, மலைப் படை, இஞ்சினீர்கள், சிக்னல் படை,

வைத்தியர், செய்தி சேகரிப்பவர், கணக்காயர்கள் முதலியன.




விமான எதிர்ப்பு பீரங்கி

இப்போது நிரந்தரமாக உள்ள சேனைகளைத் தவிர அவசரமாகத் தேவை ஏற்பட்டபோது தயாராகப் பின்னணியில் இருந்து பொறுப்பேற்பதற்குப் பிரதேசப் படைகளை (Territorial army) ஆங்காங்குச் சேர்த்துப் பயிற்சி அளித்து வருகின்றனர். மேலும் இளைஞர் படைகள் (National Cadets) என்ற ஒரு பகுதியையும் நிறுவியிருக்கிறார்கள். இதில் சீனியர் படை என்பது சுமார் 25,000 பயிற்சிபெற்ற கல்லூரி மாணவர்கள் கொண்டது. ஜூனியர் படை சுமார் 50,000 ஹைஸ்கூல் மாணவர்கள் அடங்கியது.

கப்பல் படை

சுதந்திர இந்தியாவில் ஆரம்பத்தில் நான்கு கப்பல்களே இருந்தன. அவைகளும் பிரிட்டிஷாரிடமிருந்து வாங்கப்பட்டவை. இவைகளுக்கு 'டில்லி', 'ராஜ்



நமது ஜனாதிபதி இந்திய கப்பல் படைக்கு,
நமது கொடியை வழங்குவது.

புட்', 'ரஞ்சிட்', 'ராணு' என்று இந்தியப்பெயர்கள் சூட்டப்பட்டன. 1950-ம் ஆண்டு மற்றொரு கப்பலை வாங்கி அதற்கு 'கங்கா' என்று பெயரிட்டனர். கப்பல் படையைச் சிறுகச் சிறுக அதிகரிக்க அரசாங்கத்தார் திட்டம் செய்திருக்கிறார்கள். அதன்படி 'ஜம்னு', 'சட்லிஜ்', 'காவேரி', 'கிருஷ்ணு' என்ற நான்கு கப்பல்கள் பிறகு வந்தவை. இப்போது 12 கடல் துடைக்கும் (Minesweepers) கப்பல்களும் வெடிவீசும் 2 மோட்டார் கப்பல்களும் இருக்கின்றன. கப்பல் மாலுமிகளாக வேலை செய்ய இந்திய இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. கொச்சி, பம்பாய், ஜாம்நகர், விசாகப்பட்டணம் இவ்விடங்களில் முறையே 'சிவாஜி', 'பால்சோரா', 'வெண்டுருத்தி' 'சர்கார்ஸ்' என்ற நான்கு கப்பல்களில் பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

1953-ல் பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் மகுடாபிஷேக சமயம் நடந்த கடல்படை அணிவகுப்பில் இந்திய கப்பல்களும் கலந்துகொண்டன.

ஆகாய விமானப் படை

இந்தப் பகுதி இன்னும் அபிவிருத்தி யடைய வேண்டும். ஆரம்ப விமானப் பயிற்சி தாம்பரம், ஜோதிபுரி இவ்விடங்களிலும், முடிவுப்பயிற்சி அம்பாலா, கோயமுத்தூரிலும் உண்டு. பங்களூருக்கருகே ஜலஹள்ளியில் டெக்னிகல் டிரெய்னிங் காலேஜ் என்ற ஒரு உயர்தரப் பயிற்சி ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

வீரப்பதக்கம்

குடியரசுக்குப் பிறகு இந்திய கலாசாரத்திற் கேற்ப வீரச் செயல்களை மெச்சி வழங்கப் புதுப் பதக்கங்களும் ஏற்பாடாயின. அவை வீரச்சக்கரம், மஹா வீரச்சக்கரம், பரம வீரச்சக்கரம், வீரப்பதக்கம் என்று படிப்படியாகப் பாராட்டுக்குரிய விருதுகள்.

காப்பு மந்திரியின் திட்டப் பிரகாரம் நம் காப்புப் படையைத் திறமையுள்ள தாக்க அபிவிருத்தி வேலைகள் பல நடந்து வருகின்றன. அவைகளில் முக்கியமாகப் பின்வருபவைகளைக் குறிப்பிடலாம் :

1. இராணுவப் பயிற்சி—தற்சமயம் டேராடூனில் நடைபெறுகின்றன. பூனாவில் 5 கோடி ரூபாய் செலவில் புதிய பயிற்சிச்சாலை கட்டப்பட்டுத் தயாராகி வருகிறது.
2. வெடிமருந்து, இதர தேவைகள் தயார் செய்யும் புதுத் தொழிற்சாலைகள் அமைத்தல்—அரவங்காடு (நீலகிரி) தொழிற்சாலை அவைகளில் ஒன்று ஆகும்.
3. பயிற்சிக்கும் தளவாடங்களுக்கும் இங்கிலாந்துடன் ஒப்பந்தம்.
4. புதிய கப்பல்கள் கட்டுவதும், வாங்குவதும்; இருபது வருஷத்தில் சுமார் 300 கப்பல்கள் கட்டுவதாகத் திட்டம்.
5. ஆகாய விமானங்களை அதிகரிப்பது.
6. திறமை வாய்ந்த பின்னணிப் படையை ஏற்படுத்துவது.

9. அண்டை அயல் நாடுகள்

குடியரசு இந்தியாவின் எல்லைகள் இப்போது மாறி விட்டதைப் பக்கத்தில் உள்ள தேசப்படத்தில் காண்பீர்கள். மேற்கேயும் கிழக்கேயும் பாகிஸ்தான் எல்லை. வடக்கே இமயமலையை எல்லையாகக் கொள்ளலாம். வடமேற்கே காஷ்மீரம். அதன் அருகே சோவியத் ருஷ்யா நெருங்கியுள்ளது. வடக்கேயுள்ள திபெத் நாட்டில் இப்போது சீனாவின் ஆதிக்கம் ஏற்பட்டுவிட்டது. வடகிழக்கில் பர்மாவுடன் தொடர்பு உண்டு. காஷ்மீரம் இந்தியாவுடன் சேர்ந்துவிட்டது எனினும் இது இன்னும் ஊர்ஜிதமாகவில்லை. இந்தப் பிரச்னைபற்றி இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே ஏற்பட்டுள்ள வேற்றுமை சமரசமாக முடியவேண்டும்.

நேப்பாளம்

இது சுதந்திரமுள்ள ஹிந்து இராஜ்ஜியம். 1950-ல் இந்தியாவுடன் நேச உடன்படிக்கை செய்து கொண்டது. இவ்விராஜ்ஜியத்தின் தலைநகரம் காட்மாண்டு. இப்போது இங்கும் ஜனநாயக ஆட்சி அமைக்கவேண்டும் என ஜனங்கள் முயற்சி செய்து வருகிறார்கள். உலகத்திலேயே அதி உயர்ந்த மலைச் சிகரம் எவரெஸ்டு (5 மைல் உயரம்) இங்கு உள்ளது. 1953-ல் இம்மலைச் சிகரம் ஏறிய தீரர்களில் டென்சிங் ஒருவர். நேபாளத்தில் பிறந்தவராயினும் அவர் டார்ஜிலிங்கில் வசிக்கும் இந்தியப் பிரஜை.

சிக்கிம்

இது பௌத்தர்கள் நாடு. இதன் மஹாராஜா ஜிக்மா தொர்ஜிவாங்-சுக். இதன் தலைநகர் காங்டாக்.

இது சிறியதொரு இராஜ்ஜியம் எனினும் அதன் இருப்பிட விசேஷத்தால் இந்தியாவுக்கு இதைப் பற்றி அதிகப் பொறுப்பு உண்டு. 1950ஆம் உடன்படிக்



(1) நேப்பாளம். (2) சிக்கிம். (3) பூட்டான்.

கைப் பிரகாரம் இதைப் பாதுகாக்க இந்தியா ஒப்புக் கொண்டது. சாலைகள், தபால் தந்தி, ரயில்பாதை நிர்வாகம் இந்தியாவைச் சேர்ந்தது. இந்தியா அனுமதியின்றி சிக்கிம் அரசர் அயல் நாடுகளிடமிருந்து துப்பாக்கி, யுத்த தளவாடங்கள் வாங்கக் கூடாது. வருஷா வருஷம் ஒரு லட்சம் ரூபாய் சிக்கிம் அரசருக்கு இந்தியா அளிக்கிறது.

பூட்டான்

1949-ல் இந்தியாவுடன் இந்நாடு ஒரு புதிய உடன்படிக்கை செய்து கொண்டது. அதன்படி பூட்டான் உள்நாட்டு நிர்வாகத்தில் இந்தியா தலையிடாது. ஆனால் வெளிநாட்டு உறவு விஷயமாக இந்தியாவின் யோசனையை இந்நாடு ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தியாவின் அனுமதியுடனும் உதவியுடனும் வெளிநாடுகளிலிருந்து துப்பாக்கி, வெடிமருந்து முதலிய வாங்கலாம். இதன் மகாராஜா ஜிக்மா தொர்ஜி வாங்-சுக். இவ்விராஜ்ஜியத்தில் 9 மாகாணங்களுண்டு. ஒவ்வொரு மாகாணமும், மகாராஜாவால் நியமிக்கப்பட்ட ஒரு கவர்னரினால் நிர்வாகிக்கப்படுகிறது. மகாராஜாவின் இஷ்டப்பிரகாரம் ஆட்சி நடைபெற்றுவருகிறதே யொழிய ஜனநாயக ஏற்பாடுகள் இல்லை. பிரதி வருஷமும் இந்தியா 5 லட்சம் ரூபாய் மான்யம் பூட்டானுக்கு அளிக்கிறது.

பாகிஸ்தான், திபெத், பர்மா, இந்த எல்லைப்பிரதேசங்களிலிருந்து தொந்தரவு இன்றி பாதுகாப்பு அவசியம். அஸ்ஸாம் இராஜ்ஜியத்தில் எல்லை ஓரம் உள்ள மலைவாசிகளைப் பற்றி இந்திய சர்க்கார் சிறிது கவலை கொண்டுளர். இவர்கள் வாழ்க்கை வசதிகளை உயர்த்தி இந்தியாவுடன் சந்தோஷமாக உறவாடச் செய்யவேண்டும் என்பது இந்திய அரசாங்கத்தின் நோக்கம். சென்ற வருஷம் பிரதம மந்திரி நேரு இந்தப் பிரதேசத்தில் பிரயாணம் செய்து அவர்களை உத்சாகப்படுத்தி வந்தார்.

10. நாட்டின் செல்வ வளம்

இயற்கைச் செல்வ வளம் மிகுந்துள்ளது நம் நாடு. உலகத்திலே மிக உயர்ந்ததும் எப்போதும் பனி நிரம்பியுள்ளதுமான இமயமலைகள் நமது வடக்கு எல்லை. இம் மலைப் பிரதேசத்தில் கங்கை, யமுனை, பிரம்மபுத்ரா, சிந்து, சட்லெஜ் முதலிய பல ஆறுகள் உற்பத்தியாகி, இந்திய சமவெளிகளுக்கு ஓடிவருகின்றன. தெற்கே முக்கடல் சேரும் குமரி முனைவரை உள்ள இந்திய நிலப் பரப்பில் இடையே எவ்வளவு மலைகள், காடுகள், ஆறுகள் இருக்கின்றன! மகா நதி, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி இவ்வாறுகள் எல்லாம் நாட்டின் செழுமையைப் பெருக்குகின்றன. கடுங்கோடையும், நடுக்கும் குளிரும், கொட்டும் மழையும், மழையற்ற வறட்சியும் உள்ள பல பகுதிகளும் நம்நாட்டில் உள. ஆற்றுப் பாய்ச்சல் வயல்களும், அடர்ந்த காடுகளும், செல்வச் சுரங்கங்களும், மீன் நிரம்பிய கடல்களும் உண்டு. இவ்வளவு அபரிமிதமான செல்வம் படைத்த நம் நாட்டை ஏழை நாடு என்று சொல்ல முடியுமா? ஒருக்காலும் இல்லை.

முன் காலத்தில் பொன் விளையும் பாரததேசம் என்று ஜனங்கள் பெருமை கொண்டார்கள். பாலும் தேனும்பொழியும் நாடு என வர்ணித்தார்கள். அச்செல்வமெல்லாம் எங்கு போயிற்று? செல்வம் குறையவில்லை. இன்னும் இருக்கத்தான் இருக்கிறது. ஆனால் மக்களாகிய நாம் இதுகாறும் ஒருவித மாயையில் சிக்கி மயக்கமுற்று இருந்தோம். அந்நிய ஆட்சியாளர் தங்கள் தாய் நாட்டு வியாபாரத்தையே பிரதானமாகக்கொண்டு, இந்

தியாவின் முன்னேற்றத்தைப் பற்றி பெருங்கவலை கொள்ளவில்லை. இப்பொழுது நாம் மயக்கத்திலிருந்து விடுபட்டுள்ளோம். இனி நாமே நமது நாட்டு இயற்கை வளத்தைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருள்களை அதிகரித்து வியாபாரத்தைப் பெருக்கி நாட்டுச் செல்வத்தை விருத்தி செய்யவேண்டும்.

முப்பத்து ஆறு கோடி மக்கள் வாழும் நம் நாட்டில் மக்கட் செல்வம் எவ்வளவு உண்டு! மனித உழைப்பே பெருஞ் செல்வமாகும். ஜனங்கள் யாவரும் வியாதியின்றி வாழவேண்டுமாயின், வறுமையை முதலில் விரட்டவேண்டும். வறுமையைப் போக்க, தொழிலும் செல்வமும் பெருகவேண்டும். குடியரசுத் தலைவர்கள் இதை உடனடியாகச் சாதிக்க முடியாது. படிப்படியாகவே முயற்சி செய்து வெற்றிபெற வேண்டும்.

இப்பொழுது நமக்குள்ள இயற்கைச் செல்வங்களைப் பற்றிச் சிறிது ஆராய்வோம். மிருகராசிகள், காட்டுவளம், சுரங்கப் பொருள், நீர் விசைச் செல்வம், விவசாய வளம் இவைகளெல்லாம் செல்வ வளங்கள்.

மிருக ராசிகள்

ஆடுமாடுகள் நமது செல்வத்தில் முக்கியமான ஒரு பகுதி. நமது சுகவாழ்விற்கு அவசியமான உணவு, உடை கொடுத்து அவைகள் உதவுகின்றன. வண்டி இழுத்தும், பொதி சுமந்தும் மிருகங்கள் நமக்கு உதவி செய்கின்றன.

உலக மொத்த மிருக ராசிகளில் 15% சதவிகிதம் இந்தியாவில் உண்டு. ஆடுமாடுகளில் மாத்திரம் உலக

மொத்தத்தில் கால்பங்கு நமது நாட்டில் இருக்கிறது. உலகத்திய நாடுகளில் இந்தியாவில்தான் ஆடுமாட்டுச் செல்வம் அதிகம். முதல் இடம் பெற்றுள்ளது.

1945 வருஷக் கணக்குப்படி (லட்சக் கணக்கில்)

	மாடு	ஆடு	பன்றி	குதிரை
இந்தியா	1368	378	38	14
ஆஸ்திரேலியா	141	1053	16	14
நியூசிலண்டு	45	339	6	2
கானடா	102	28	76	26
சீனு	198	87	485	20
தென் ஆபிரிக்கா	125	—	11	7
பிரிட்டன்	93	158	22	9
ஐக்ய அமெரிக்கா	855	485	600	87

இதர நாடுகளின் விஸ்தீரணத்தையும் ஜனத் தொகையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவில் மொத்த ஆடுமாட்டுச் செல்வம் அதிகம் என்றாலும் ஒரு ஆளுக்கு வீதாசாரம் அளவு மிகவும் குறைவு என்பது விளங்கும். வீதாசாரம் நியூசிலண்டில் 21, ஆஸ்திரேலியாவில் 16 ; ஆனால் இந்தியாவில் ஆளுக்கு ஒன்றுகூட இல்லை.

இந்தியா—மிருகராசிகள்

	லட்சம்		லட்சம்
மாடுகள்	1368	கோவேறு கழுதை	½
எருமை	408	கழுதை	12
வெள்ளாடு	378	ஒட்டகம்	7
செம்மறி ஆடு	484	பன்றி	38
குதிரை	14	கோழிகள்	583.

1953 வருஷக் கணக்கு—இந்தியா

ஆடுமாடுகள்—1930 லட்சம். உலக நாடுகளில் முதன்மை இடம் இப்போது.

இவைகளில் 670 லட்சம் 3 வயதுக்கு மேற்பட்ட பசு, எருமைக்கடாரிகள்.

பால் வருமானம் வருஷ சராசரி ரூ. 300 கோடி பெறுமானம்.

விவசாயத்திற்கு உதவும் உழைப்புப் பெறுமானம் 141 கோடி ரூபாய்.

பதனிடாத தோல்—40 கோடி ரூபாய்.

எல்லா ஜனங்களுக்கும் போதுமான அளவு பால் கிடைப்பதில்லை. ஆளுக்குத் தினப்படி ஒரு ஆழாக்கு வீதாசாரம் கூட இல்லை. ஆஸ்திரேலியா, நியூசிலண்டு நாடுகளிலிருந்து வருஷந்தோறும் பால் டின், டால் பொடி ஏராளமாகத் தருவிக்கிறோம். இறக்குமதிப் பொருள்களைக் குறைத்து நமது நாட்டிலேயே நமக்குப் பால் தரும் மிருக நண்பர்களை நன்கு போஷித்து வளர்ப்பது அவசியம். மாட்டுப் பொங்கல் என்று பண்டிகை கொண்டாடுவது மாடுகளைப் போஷிப்பதின் அவசியத்தை உணர்த்துவதேயாகும். அரசாங்கத்தாரும் வருஷ முழுவதும் அவைகளைக் கவனித்து, நோய் வராமல் காப்பாற்றத் திட்டமிட வேண்டும். பால்தரும் பசுக்கள் விருத்தியாகவும் பலமுள்ள புஷ்டியான எருதுகளைப் பெருக்கவும் தீவிரமான முயற்சிகள் இப்பொழுது செய்து வரப்படுகின்றன.

காட்டுவளம்

இந்தியாவின் நிலப்பரப்பில் ஏழில் ஒரு பங்கு காட்டுப் பிரதேசம். முன்காலத்தில் இருந்த விஸ்தீரணம் சிறுகச் சிறுகக் குறைந்துவிட்டது. மழை பொழியக் காடுகள் உதவுகின்றன. ஓடும் ஜலம் நிலத்தை அரித்துவிடாமல் காட்டு மரங்கள் தடுக்கின்றன. காட்டுமரங்கள் அடுப்பு எரிக்கவும் பலவித மரச் சாமான்கள் செய்யவும் உதவுகின்றன. டர்பென்டைன், சந்தன் எண்ணெய், ரோசன், அரக்கு, சாயச் சரக்குகள், மருந்துகள், காகிதம் செய்ய உதவும் மரச் சோறு முதலிய பல பொருள்கள் காடுகளிலிருந்து கிடைக்கின்றன.

சென்ற யுத்த காலத்தில் நம் நாட்டிலுள்ள காடுகளை வெகுவாக அழித்துவிட்டார்கள். காட்டுப் பிரதேசம் இனி நன்ருக விருத்தியாக வேண்டும். ஒரு மரத்தை வெட்டுபவன் இன்னெரு மரத்தையாவது வளர்க்க வேண்டியது கடமை. நஷ்டத்திற்கு ஈடு செய்யவேண்டுமல்லவா? வருஷா வருஷம் வனமகோத்சவம் கொண்டாடத் தொடங்கியிருக்கிரேம். காடுகளை அழிப்பது சுலபம். ஆனல் வளர்த்துப் பெருக்குவதற்கு நாள் பிடிக்கும். சில வருஷங்களில் காட்டுவளம் அபிவிருத்தியடைய இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது.

ரயில் வண்டிகள் கட்டவும், நெருப்புக்குச்சி செய்யவும், ஒட்டுப் பலகை (Plywood) தயாரிக்கவும் இன்னும் பலவிதத் தொழில்களுக்கும் அவசியமாகக் காட்டுவளம் பெருகவேண்டும்.

சுரங்கப் பொருள்கள்


பூமி மேல்பரப்பின் அடியில் சேமித்து வைக்கப்பட்டுள்ள செல்வம் அபரிமிதமானது. பல உலோகங்கள் கல் மண்ணுடன் கலந்து இருக்கும். நிலக்கரியும், கிரசன் எண்ணெயும் பூமிக்குள்ளிருந்து கிடைக்கும். சுரங்கச் செல்வம் இதர நாடுகளில் அதிகம் என ஒருவேளை தோன்றும். மத்ய ஐரோப்பா, அமெரிக்காவில் நிலக்கரியும் இரும்பும் எண்ணெயும் அதிகம். ஆனாலும் உலக நாடுகளுடன் சராசரியாக ஒப்பிட்டுப் பார்த்தால் இந்தியாவின் இயற்கைச் செல்வம் குறைவு என்று நாம் கருதவேண்டியதில்லை.

சுரங்கத் தொழில் நமது நாட்டில் இன்னும் அதிக முன்னேற்றம் பெற இடம் இருக்கிறது. இத்தொழிலில் சுமார் 5 லட்சம் ஜனங்களே ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்களில் சுமார் முக்கால் பங்கினர் நிலக்கரிச் சுரங்கங்களில் வேலை செய்பவர்.

நிலக்கரி உற்பத்தி 1948 கணக்குப்படி—(லட்சம் டன்களில்)

இந்தியா	298	1·7	அந்தர் ஒரு ஆளுக்கான வீதாசாரம்
ஆஸ்திரேலியா	148	38	,,
கானடா	149	23	,,
செக்கோஸ்லாவிகா	174	28	,,
பிரான்சு	549	27	,,
ஜெர்மனி	870	42	,,
போலண்டு	691	58	,,
ஜப்பான்	331	8	,,
தென் ஆப்பிரிக்கா	231	39	,,
பிரிட்டன்	2094	83	,,
ஐக்ய அமெரிக்கா	5862	80	,,

1948-ல் சுமார் 3 கோடி டன் நிலக்கரி நம் நாட்டில் வெட்டி எடுக்கப்பட்டது. இதில் முக்கால் பாகம் வங்காளம், பீஹார் சுரங்கங்களில் கிடைத்தது. கிடைக்கும் நிலக்கரியில் ப்த்தில் ஒன்பது பங்குவரை தொழில் ஆலை



ஸ்ரீ நேரு, நெய்வேலி சுரங்கத்திலிருந்து
எடுத்த லிக்னைட்டை பரிசோதிக்கின்றார்.

களும் ரயில் இஞ்சின்களும் உபயோகித்து விடுகின்றன. எஞ்சிய சொற்ப பாகமே மற்றவருக்குக் கிடைக்கும். எரிவாயு (Coal gas) உபயோகம் பிரபலமாகவில்லை. தென் ஆற்காடு நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி

கிடைக்கும் என அறிந்து அதை வெட்டி எடுக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

நிலக்கரி, அலுமினியம், பாஸ்பேட் முதலிய உப்புக்கள், கண்ணுடி இவை நம்நாட்டு உபயோகத்திற்குப் போதிய அளவே கிடைக்கின்றன. செம்பு, வெள்ளி, நிக்கல், பெட்ரோலியம், கந்தகம், ஈயம், டின், துத்தநாகம், பாதரசம், பிளாடினம் இவை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகின்றன.

சுரங்கச் செல்வத்தை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்—

1. உலக வியாபார மார்க்கெட்டில் ஏற்றுமதி செய்யும்படி கிடைப்பவை.

2. உள்நாட்டு உபயோகத்திற்கு மட்டும் கிடைப்பவை.

3. உள்நாட்டு உற்பத்தி போதாததால் வெளிநாட்டிலிருந்து வாங்குபவை.

முதல்வகையில் இரும்புக் கலப்படம் (iron ore), மைகா (அபரக்) இவற்றை விசேஷமாகக் குறிப்பிடலாம். இவைகளைத் தவிர கணிசமாக ஏற்றுமதிக்குக் கிடைக்கும் பொருள்கள் :—மங்கனீஸ், பாக்சைட், ஜிப்ஸம், மாக்னிசைட், கிரானைட் கற்கள் முதலியன.

பற்பல தொழில்கள் அபிவிருத்திக்கு வேண்டிய உலோகப் பொருள்களை இந்தியா வெளிநாடுகளிலிருந்து வாங்கவேண்டியிருக்கிறது.

சுரங்கப் பொருள்கள்—இந்தியா உற்பத்தி—1948 கணக்குப்படி

தங்கம்	180	ஆயிரம் அவுன்ஸ் எடை
பெட்ரோலியம்	6800	ஆயிரம் காலன்
இரும்பு (ore)	2300	ஆயிரம் டன்
மங்கனீஸ்	470	ஆயிரம் டன்
மைகா	160	ஆயிரம் அந்தர்
செம்பு	320	ஆயிரம் டன்
உப்பு	2300	ஆயிரம் டன்
கில்மிநட்	230	ஆயிரம் டன்
கட்டிடக் கற்கள்	3	கோடி ரூபாய் மதிப்பு

குடியரசு ஸ்தாபிதமான பிறகு சுரங்கப் பொருள்களின் உற்பத்தியில் அதிக ஊக்கம் ஏற்பட்டுள்ளது. 1952-ல் தங்கம் 3½ கோடி ரூபாய் மதிப்புக்கு உற்பத்தி பெருகியது. இரும்பு இன்னும் 6 லட்சம் டன் உற்பத்தி அதிகமாய் இருக்கிறது.

மீன் செல்வம்

ஆறுகள், குளங்கள், ஏரிகளில் தவிர கடல்களிலும் மீன் பிடிக்கும் தொழில் இப்போது அபிவிருத்தி அடைந்து வருகிறது. விவசாயச் செல்வத்திற்கொப்பாகவே கடலும் மகசூல்தரும். சென்னை, வங்காளம் இரண்டு இராஜ்ஜியங்களிலும் மீன் மகசூல் அதிகம். வருஷம் சராசரி 6 லட்சம் டன் எடை மீன் பிடிக்கப்படுகிறது. இதில் முக்கால்பங்கு கடலிலிருந்து கிடைக்கிறது சுமார் 5 லட்சம் ஜனங்கள் இத் தொழிலில் உழைக்கிறார்கள். உணவுப் பெருக்கம் அவசியமாதலின் இத் தொழில் அபிவிருத்தியில் இப்போது மிகவும் ஊக்கம்

உண்டாகியிருக்கிறது. ஜனங்களில சுமார் பாதிப்பேர் மீன் உணவு உபயோகிக்கிறார்கள்.

நம் தேவைக்கு அதிகமாகவே உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்யவும் நமது சர்க்காரின் நோக்கம். மண்டபம் (சென்னை இராஜ்ஜியத்தில்), கல்கத்தா இவ்விரண்டு இடங்களிலும் மீன் ஆராய்ச்சி சாலைகள் உண்டு. லட்சக்கணக்காக மீன்களை வளர்க்கவும், சுலபமாகவும் நிரம்பவும் பிடிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

நீர் விசைச் செல்வம்

மலை மேட்டிலிருந்து நீர்வீழ்ச்சிகளாகக் கொட்டும் ஆறுகள் எல்லாம் நாட்டுச் செல்வம். உயரத்திலிருந்து கொட்டும் நீரையும் ஆழமான ஏரித் தேக்கத்திலிருந்து பீரிட்டுக் கொண்டு ஓடிவரும் நீரையும் சக்கரங்கள் பொருத்தியுள்ள குழாய்கள் வழியே ஓடச் செய்தால், குழாய்களில் இணைத்துள்ள சக்கரங்கள் அதிவேகமாகச் சுழலும். அப்போது உற்பத்தியாகும் மின்சார (எலெக்டிரிக்) சக்தியைச் சேகரித்துக் களஞ்சியங்களில் சேமித்து வைத்து உபயோகிக்கிறோம். மின்சார நிலையத்திலிருந்து மின்சக்தியைச் சிறு கம்பிகள் வழியாக நாடு எங்கும் வினியோகிக்கிறோம். மோட்டார் எஞ்சின்களை ஓட்ட மின்சக்தி வேண்டும். நீர் இறைக்க மின்சக்தி வேண்டும். ஆலைகளில் துரிதமாகவும் சுலபமாகவும் வேலை நடக்கவும் இச்சக்தி உபயோகப்படும். விளக்கு, பங்கா, வீட்டு அடுப்பு முதலிய பல வசதிகளுக்கும் மின்சக்தி தேவை. ஆகவே தொழில் பெருக்கத்திற்கும் வாழ்க்கை வசதிகளுக்கும் மின்சக்தி நிலையங்கள் இன்னும் அதிகம் பெருகவேண்டும்.

அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில் நீர் விசைச் செல்வம் அதிகம். ஆயினும் இதில் வெகு சிறிய பங்கையே நாம் இதுகாறும் பயன்படுத்தியிருக்கிறோம். 270 லட்சம் குதிரைச் சக்தி அளவு நீர் விசைச் செல்வம் நம் நாட்டில் உண்டு என்று கணக்கிட்டு இருக்கிறார்கள். ஆனால் இதில் 8 லட்சம்தான் இப்போது கிடைக்கிறது. இந்தியாவில் இயற்கையாக உள்ள நீர் விசைச் செல்வத்தை அதிகம் பயன்படுத்த இப்பொழுது திட்டமிடப்பட்டுள்ளது.

தென் இந்தியாவில் காவேரி (சிவ சமுத்திரம்) நீர்வீழ்ச்சியைப் பயன்படுத்தி மின்சக்தி நிலையம் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. பிறகு பல இடங்களில் நீர்த் தேக்கங்களும் அணைக்கட்டுகளும் கட்டி மின்சக்தி சேகரிக்கப்பட்டது. சென்ற பத்து வருஷத்தில் உற்பத்தியும் சேகரமும் இரண்டு மடங்கு அதிகரித்து விட்டது. இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இன்னமும் நம் நாடு எவ்வளவு பின் தங்கியிருக்கிறது என்பது புலப்படும்.

	உற்பத்தி சேகரம் மிலியன் கிலோவாட்ஸ்	உற்பத்தி வீதாசாரம்	ஒரு சதுர மைலுக்கு உபயோகம்
இந்தியா	4575	13	3.7
ஆஸ்திரேலியா	8741	1134	2.9
கானடா	44569	3460	12.1
பிரான்சு	27561	676	129.6
ஜப்பான்	31725	393	222.9
பிரிட்டன்	46536	930	494.0
ஐக்ய அமெரிக்கா	282696	1929	93.5

மின்சக்தி உற்பத்தியும் சேகரமும் இதர நாடுகளில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளதையும், பங்கீடு

அதிகமாயுள்ளதையும் மேற்கண்ட அட்டவணையில் காண்பீர்கள். ஆகவே அந்த நாடுகளில் தொழில் பெருக்கமடைய மிக அனுகூலமாக இருக்கிறது.

அந்நாடுகளில் பொது மக்களது வாழ்க்கை வசதிகளும் மிகவும் உயர்ந்துள்ளன. நமது நாட்டில் பொதுவாகக் கிராம ஜனங்களுக்கான செளகரியங்கள் இன்னும் பன்மடங்கு பெருகவேண்டும்.

உயர்ந்த மலைச் சரிவுகளில் நீரைத் தேக்கியும், ஆறுகளின் குறுக்கே அணைகள் கட்டித் தேக்கியும் நீர்ப்பாசன வசதிகளையும் மின்சக்தி நிலையங்களையும் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால் பருவ மழைகள் காலா காலத்தில் ஏற்படாமல் தவறிவிடுவதால் மழை அளவும் குறைந்துவிடுகிறது. நீர் விசைச் சக்தி சேகரிப்பதும் கஷ்டமாகிவிடுகிறது.

பருவ மழைகள் குறைவதன் காரணங்களை விஞ்ஞானிகள் பரிசீலனை செய்து வருகிறார்கள். காட்டுப் பிரதேசம் குறைந்துவிட்டது ஒரு காரணம். காடுகளை வளர்ப்பது அதி அவசரம். இம்முயற்சியில் நாடெங்கும் இப்போது முனைந்திருக்கிறார்கள். ஐந்து ஆண்டுகளில் முதல்படியாக 70 லட்சம் கிலோவாட் மின்சக்தி உற்பத்தி செய்ய வசதி உண்டாகும் என எதிர்பார்க்கப் படுகிறது.

விவசாயம்

பூமி நமக்குச் செல்வக் களஞ்சியம். மக்களுக்கு உணவும் உடையும் இருக்க இடமும் கொடுத்து உதவும் பூமியை பூமிதேவி என்று போற்றுவது வழக்கம். மக்களைப் போஷித்து வளர்க்கும் தாய் போலவே பூமியும் ஜனங்களைப் போஷித்துக் காப்பாற்றுகிறது.

இந்தியா விவசாயம் மிகுந்த நாடு. மக்களின் செல்வம் முழுவதும் விவசாயத்தில் கிடைப்பது. 36 கோடி மக்களில் 25 கோடி மக்கள் விவசாயம் செய்து ஜீவிக்கிறார்கள். இவ்வளவு ஜனங்கள் உழைத்தும், நாட்டில் எல்லோருக்கும் தேவையான உணவுப்பொருள்கள் உற்பத்தி இல்லை. உணவு தானியங்கள் பற்றாமல், சில வருஷங்களாகவே நாம் வெளி நாடுகளிலிருந்து கோதுமை, அரிசி முதலியன வாங்குகிறோம். 1950-51ல் 48 லட்சம் டன் தானியங்கள் வாங்க வேண்டியிருந்தது. சிறுகச்சிறுக இதைக் குறைத்து நாட்டில் உற்பத்தியைப் பெருக்கி, 1954ல் நம் நாட்டு விளை பொருள்களே நமக்கு வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்வதுடன் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதிக்கும் உதவவேண்டும். இந்த நோக்கத்தை நிறைவேற்றவே ஐந்து ஆண்டுத் திட்டம் பாடுபடுகிறது.

இவ்வருஷமே (1953) இனி வெளி நாடுகளிலிருந்து உணவு தானியங்கள் வாங்க வேண்டிய அவசியமில்லை என்று உணவு மந்திரி சமீபத்தில் வெளியிட்டார். 1953-54 ஆண்டில் 750 லட்சம் ஏகராக்களில் நெல் சாகுபடி. மகசூல் அளவும் அதிகமாயிற்று. 250 லட்சம் டன் அரிசி உற்பத்தி. சென்ற ஆண்டைவிட 2 சத விகிதம் விளைச்சல் நிலமும் அதிகம், 30 சத விகிதம் உற்பத்தியும் அதிகம்.

சாகுபடி நிலத்தை அதிகமாக்குவதும், மகசூலைப் பெருக்குவதும்

நாட்டு ஜனத் தொகை பெருகிவிட்டது. அதனால் உணவுத் தேவை அதிகமாகிவிட்டது என்று சிலர் காரணம் கூறலாம். ஆனால் இது பிரதான காரணம் அல்ல. பூமி வளத்தை நன்கு பயன்படுத்தாமல்

இருப்பதே முக்கிய காரணம். சுமார் 82 கோடி ஏகரா நிலம் இந்தியாவில் இருந்தாலும் சுமார் 48 கோடியே விவசாயத்திற்கு ஏற்றது என மதிப்பிடுகிருர்கள். இதிலும் 28 கோடி ஏகராதான் இப்போது சாகுபடிக்கு உபயோகப்படுகிறது. இன்னும் 20 கோடி ஏகராவில் சாகுபடி செய்யமுடியும். இதை விவசாயத்திற்குக் கொண்டு வருவது முதல் வேலையாகும்.

விளைபொருள்கள்— 1948–49 கணக்குப்படி.

A. உணவுக்கானவை

	சாகுபடி ஆயிரம் ஏக்கர்	உற்பத்தி ஆயிரம் டன்கள்
நெல்	60480	18863
கோதுமை	21165	5414
இதர தானியங்கள்	75189	12419
பருப்பு வகைகள்	19711	4563
நிலக்கடலை	9078	3073
கரும்பு	3645	4964 (வெல்லம்)
டீ (Tea)	767	561 மிலியன் lbs
காபி	198	34 மிலியன் lbs.

B. உணவுக்காகாதவை

பருத்தி	11,0555	1864 கட்டுகள். ஒரு கட்டு எடை 392 lbs.
சணல்	766	1982 (400 lbs. கட்டுகள்)
இதர எண்ணெய் வித்துக்கள்	13303	1599 ஆயிரம் டன்
புகையிலை	784	342 ஆயிரம் டன்
ரப்பர்	167	34 ஆயிரம் டன்.

சில வருஷங்களாகவே நாடு எங்கும் உணவு உற்பத்தியை அதிகமாக்கும் முயற்சிகளில் எல்லா ஜனங்

களும் ஊக்கம் கொண்டுளர். ஓரளவு உற்பத்தியும் கணிசமாகப் பெருகிவருகிறது. ஆனால் இது போதாது. இன்னும் தீவிரமாக அதிகப்படுத்துவது அவசியம். நெருக்கடியான பயங்கர கட்டத்தை வென்றுவிட்டோம் எனினும், இனியும் இவ்வித ஆபத்து ஏற்படாமல் இருக்க முன் எச்சரிக்கையான ஏற்பாடுகளைச் செய்வதில் குடியரசு சர்க்கார் முனைந்திருக்கின்றனர். அதற்காக நீர்த்தேக்கங்களையும் நீர்ப்பாசன வசதிகளையும் அதிகமாக்கத் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது.

நிலப்பங்கீடு

விவசாயப் பொருள்கள் உற்பத்தி அதிகமாக எல்லா வசதிகளும் அமைத்துத் தருவது ஒருபுறம் இருக்க, விவசாயத் தொழிலில் உழைக்கும் மக்களும் உற்சாகமாக இவ் வேலையில் முயற்சி செய்யவேண்டும். விவசாய உழைப்பாளிகளின் ஊக்கம் குறைந்துவிட்டதற்கு முக்கிய காரணம் நில உடைமைப் பங்கீடு நியாயமாக அமையவில்லை என்பதே. ஒரு சிலர் வசம் அவர்கள் தேவைக்குமேல் பன்மடங்கு ஏராளமாக அதிக நிலம் குவிந்து இருப்பதால் பல கோடி மக்களுக்கு நில உடைமையே இல்லை. தங்களுக்குச் சொந்தமில்லாத நிலத்தில் பாடுபட்டு உழைக்கும் மக்களுக்கு எவ்விதம் சிரத்தையும் உற்சாகமும் ஏற்படும்? 25 கோடி மக்கள் விவசாயிகள் என்றாலும் சுமார் 16 கோடி ஜனங்களுக்கே சொந்த நிலம் உண்டு. இவர்களில் பெரும்பான்மையோர் தாமே உழைக்கும் விவசாயிகள் அல்லர்.

முன்னாள் அரசர்கள் தம் கீழுள்ள பிரபுக்களுக்குக் கிராமங்களும் நிலங்களும் அளித்தார்கள். இவ்வாறு ஜாகீர்தார்களும் ஜமீன்தார்களும் ஏற்பட்டனர். ஏராளமான பூஸ்திதி படைத்த மிராசுதார்களும் ஏற்பட்ட

ணர். பெரிய நிலச்சுவான்தார்கள் தங்கள் நிலங்களைச் சாகுபடி செய்வதற்குக் குத்தகைக்காரரிடம் ஒப்படைத்து விடுகிறார்கள். நிலத்தில் உழைக்கும் பாட்டாளிகள் பெரும்பாலும் கூலிக்கு வேலை செய்கிறார்கள். இவ்விதமாக நிலச் சொந்தக்காரர், நடுவில் உள்ள குத்தகைக்காரர், நிலத்தில் உழைப்போர் என மூன்று பிரிவுகள் உள்ளன. நிலத்தில் கிடைக்கும் மகசூலில் பாதி சொந்தக்காரனுக்குக் கிடைக்கவேண்டும். உழைப்பாளிகளுக்குக் கிடைப்பதோ மிகவும் சொற்பம். இந்த நிலையில் விவசாயப் பெருக்கம் எவ்விதம் ஏற்படும்?

உழைப்பாளிகள் சமூகத்தில் அதிருப்தியும் மனக்கசப்பும் அதிகமாகவே இம்முறை உதவியது. குடியரசு நாட்டில் ஒரு சிலர் மாத்திரம் தனி உடைமை பெற்று உழைக்காமல் ஏன் சும்மா இருக்கவேண்டும்? நிலம் எல்லாம் பொது உடைமை, சாகுபடி நிலத்தை மக்களுக்குச் சமமாகப் பங்கிடு செய்து அளிப்பது சர்க்கார் கடமை என்ற கருத்து பரவலாக ஏற்பட்டது. இவ்விதப் பொது உடைமைப் போராட்டம் ருஷ்யா, சீனு நாடுகளில் மிகவும் பிரபலமாகி, இப்போதுதான் ஒரு விதமான சம பங்கிடு அனுசரிக்கப்பட்டு நிலைமை நிதானப்பட்டு வந்துள்ளது.

இந்திய ஜன சமூகத்திலும் இந்தக் கிளர்ச்சி முதிர்ந்து விபரீதமான கலகங்களும் நாச வேலைகளும் ஏற்படாமல் இருக்க முன் எச்சரிக்கையாகவே சமூக நலத்திட்டங்களைக் குடியரசு சர்க்கார் மேற்கொண்டுள்ளர். ஜனங்களது க்ஷேமமே குடியரசின் குறிக்கோள். எந்த உழைப்பாளியும் தன் உழைப்பின் லாபத்தைப் பெற வேண்டும். அந்த உரிமையைக் குடியரசு சாஸனம் அளித்துள்ளது. இந்த உரிமையை வாழ்க்கை அனு

பவததில் கொண்டுவருவதற்கான சட்டதிட்டங்கள் இயற்றப்பட்டன. விவசாயிகளின் கடன் பளு குறைக்கப்பட்டது. குடியரசு ஸ்தாபிதமான உடனே முதல் வேலையாக ஜமீன்தாரிகளை ஒழிப்பது நிறைவேறியது. குத்தகைக்காரர்களே சொந்தக்காரர்களாக வேண்டிய உதவிகள் அளிக்கப்பட்டன. நிலத்தில் உழைக்கும் பாட்டாளிகளின் பங்கு அநியாயமாகக் குறைக்கப் படாமல் பாதுகாப்பதற்கும் சென்னை சர்க்கார் சமீபத் தில் சட்டம் இயற்றினர்.

ஐந்து ஆண்டுத் திட்டத்திலும் நிலப்பங்கீடு முறையில் நியாயமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது அவசியமென வற்புறுத்தப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஒருவருக்கு அதிகப்பட்ட நிலம் எவ்வளவு நியாயமாக இருக்கவேண்டும் என ஒரு வரம்பு நிர்ணயிப்பது அந்தந்த இராஜ்ஜிய சர்க்கார் வேலை. அதிக நிலம் உள்ளவர்கள் தாமே நில உடைமை இல்லாதாருக்குப் பூதானமாக அளிப்பது மிகச் சிறந்த வழியாகும். இதுவே மகாத்மா காந்தி காட்டிய வழி. ஆசார்யா விநோபா பாவே இப்போது இந்தப் **பூதான இயக்கத்தை** நாடெங்கும்


ஆசார்யா விநோபா பாவே

போதித்து வருகிறார். அவர் முயற்சியின் பலனாக 29 லட்சம் ஏகரா நிலம் இதுவரை நிலமில்லாதாருக்குப் பங்கிட்டு அளிக்கப்பட்டது. இந்த முயற்சி இன்னும் தீவிரமாகவும் உற்சாகமாகவும் நிறைவேறினால் சிறந்த வெற்றியாகும்.

பங்கீட்டு முறையை சமப்படுத்த இந்தப் பூதான முறை ஒரு வழியாகும். இன்னொரு வழியும் மேற் கொள்ளலாம். கூட்டுறவுத்துறையில் ஒரு கூட்டத்தார் சமத்துவக் கொள்கையில் நிலத்தைச் சாகுபடி செய்து உழைத்து, மகசூலை பங்கிட்டுக் கொள்ளலாம். கூட்டு முறை விவசாயத்தைப் பெருக்கவேண்டும் என்பதே முக்கிய நோக்கம்.

---

11. தொழில்கள்

பருத்தி மில்களும் கைத்தறி நெசவும்

விவசாயத்திற்கு அடுத்தபடியாக எல்லாத் தொழில் களிலும் மிகவும் முக்கியமானது நெசவு. நமது நாட்டு மக்கள் பல நூற்றாண்டுகளாகவே கைத்தறி நெசவுத் தொழிலில் மிகவும் தேர்ச்சிபெற்றவர்கள். இந்தியத் துணிகளை வாங்கிச் செல்லும் பல பிறநாட்டு வியாபாரி கள் நமது நாட்டிற்கு வந்தனர். ஐரோப்பிய வியாபாரி கள் இந்தியாவிற்கு வரத் தொடங்கியது முதல் இந்தி யாவின் சரித்திரமே மாறுதல் அடைந்தது. பிரிட்டிஷ் ஆட்சியும் ஏற்பட்டது.

19ம் நூற்றாண்டில் இயந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. நூற்பதற்கும் நெய்வதற்கும் இயந்திரங்கள் உபயோகத்தில் வரத் தொடங்கியவுடன் தொழில் புரட்சி உண்டாகியது. இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் இயந்திரக் காலம் ஆரம்பமாகிவிட்டது. இந்திய கைத்தறித் துணிகளுக்கு இருந்த மதிப்பும் குறைந்துவிட்டது. கைத்தறித் தொழிலே மறைந்துவிடும் நிலைமையில் இந்திய நெசவாளிகள் மிகவும் தவிக்க வேண்டியதாயிற்று. இங்கிலாந்திலிருந்தும் ஜப்பானிலிருந்தும் ஏராளமான மில் துணிகள் வந்து குவிந்தன. அவைகள் விலையும் மலிவு, துணி இழையும் மெல்லியது. ஆகவே மில் துணிகளில் மக்கள் விருப்பம் திரும்பிவிட்டது.

இந்தியாவிலும் பருத்தி மில்கள் ஏற்பட்டன. பருத்தி ஆலைகளின் நூற்றாண்டு விழா இவ்வாண்டு பம்பாயில் கொண்டாடப்பட்டது. மில் தொழில் அபிவிருத்தி விவரம் கீழே காண்க—

இந்திய மில்கள்—நூற்பும் நெசவும்

பம்பாய் நகரம்	65	
ஆமதபாத்	74	200
பம்பாயில் இதர இடங்கள்	61	
கோயமுத்தூர்	30	
சென்னையில் இதர இடங்கள்	65	95
இதர இந்திய இராஜ்ஜியங்கள்		158
	மொத்தம் :	453

உற்பத்தி—1952

நூல்	9540	லட்சம் பவுண்டு மில் நெசவுக்கு உபயோகம்
	210	லட்சம் பவுண்டு ஏற்றுமதி
	4720	லட்சம் பவுண்டு கைத்தறிகளுக்கு.
மொத்தம்:	14470	லட்சம் பவுண்டு
துணி	40130	லட்சம் கெஜம் உள்நாட்டுத் தேவை
	5800	லட்சம் கெஜம் ஏற்றுமதி
மொத்தம்:	45930	லட்சம் கெஜம்

மில்களில் போடப்பட்டிருக்கும் மூலதனம் 104 கோடி ரூபாய். வருஷ உற்பத்தி மதிப்பு சுமார் 400 கோடி ரூபாய். மில் தொழிலில் சுமார் 10 லட்சம் தொழிலாளிகள் உழைக்கின்றனர். ஒரு வருஷ உற்பத்தி நூலைக்கொண்டு இந்தப் பூமியை 60 லட்சம் தடவை சுற்றலாம்!

மில்களுக்குத் தேவையான பஞ்சு உற்பத்தி நாட்டில் போதவில்லை. சுமார் 40 கோடி ரூபாய் மதிப்புள்ள 10 லட்சம் பேல்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகின்றன. இதற்குப் பிரதியாக சுமார் 68 கோடி ரூபாய்—60 கோடி ரூபாய் துணிகளும் 8 கோடி ரூபாய் நூலும் நம் நாட்டிலிருந்து ஏற்றுமதி

யாகின்றன. நாட்டிலேயே பருத்தி விளைவைப் பெருக்கி இறக்குமதியைக் குறைக்க முடியும்.

ஆலைத்தொழில் பெருக்கத்தின் பயனாகக் கைத்தறித் தொழிலாளர் நிலை மிகவும் கஷ்டமாயிற்று. சுமார் 115 லட்சம் மக்கள் (இதில் சென்னை இராஜ்ஜியத்தில் மாத்திரம் சுமார் 6 லட்சம்) இத்தொழிலில் உழைப்பவர்கள். கைத்தறிகளுக்காக மில் நூல் 4720 லட்சம் பவுண்டு கிடைக்கிறது. எனினும் கைத்தறித் துணிக்கும் மில் துணிக்கும் போட்டி ஏற்பட்டுவிட்டது. ஜனங்கள் பெரும்பாலரும் மில் துணிகளையே விரும்புவதால், கைத்தறித் தொழிலில் உழைப்பவர்கள் ஜீவனத்திற்குத் திண்டாடும் கதி வந்துவிட்டது.

மில் தொழில் பெருகவேண்டியது தென்னவோ அவசியம்தான். இயந்திரத் தொழில் புரட்சி நமது நாட்டில் தாமதமாக ஏற்பட்டதால் ஜனங்கள் தங்கள் வாழ்க்கை முறைகளை மாற்றிக்கொண்டு சரிப்படுத்திக்கொள்ள இன்னும் அவகாசம் தேவை. இயந்திர உழைப்புக்கும் மனித உழைப்புக்கும் போட்டி ஏற்படுவது எல்லா நாடுகளிலும் சகஜம். எந்தத் தொழிலிலும் இயந்திர சாதனங்கள் தொடங்கியவுடன் அந்தந்தத் தொழில் இனத்தில் ஈடுபட்டிருந்த மக்கள் வாழ்க்கை பாதிக்கப்படும். அவர்கள் ஜீவனம் ஒரேயடியாக அதோகதியாகாமல் முன் எச்சரிக்கையாகத் திட்டமிடவேண்டியது குடியரசு சர்க்காரின் வேலையாகும். மக்கள் க்ஷேமம் ஆட்சியாளரின் பொறுப்பு. ஆதலின் மில் உற்பத்தியை நிதானப்படுத்தலாமல்லவா? சர்க்கார் அப்படிச் செய்யத் தொடங்கியிருக்கின்றனர்.

மில் துணிகளில் சில ரகங்களுக்கு வரி விதிப்பதால் வருஷம் சுமார் 6 கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும். இதில் பெரும்பகுதி கைத்தறி நெசவாளருக்கு உதவுவது, கைத்தறித் துணிரகங்களில் முக்கியமான புடவை, வேஷ்டி வகைகளை மில்கள் உற்பத்தி செய்யாமல் தடை விதிப்பது, கைத்தறித் துணிகளை ஜனங்கள் ஆதரிக்கும்படி பிரசாரம் செய்வது முதலிய திட்டங்களைச் சர்க்கார் இப்போது மேற்கொண்டுளர்.

கைத்தறி நெசவாளர் கூட்டுறவு முறையில் உற்பத்தியைப் பெருக்குவதுடன் துணி ரகங்களையும் மேன்மைப் படுத்தவேண்டும். சில காலம் இப்படிச் சமாளிக்கலாம் எனினும் இயந்திரப் போட்டியை ஒரேயடியாக ஒதுக்கிவிடுவது சாத்தியப்படாது. காலக்கிரமத்தில் அவர்களும் சிறுகச் சிறுக அதிக இயந்திரத் தொழிலுக்கு மாற்றிக்கொள்வது சீராகும். பெரிய மில்கள் அமைக்காமல் கிராமங்களிலேயே மின் சக்தியை உபயோகித்துச் சிறிய ஆலைகளை அமைத்து உழைத்து உற்பத்தியை அதிகமாக்குவதுடன் தங்கள் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திக்கொள்ள வழி கிடைக்கும்.


இரும்பும் எஃகும்

2000 வருஷங்களுக்கு முன்பே இந்திய எஃகு கொண்டுதான் உயர்ந்த கத்திகள் செய்யப்பட்டன. உலோகம் உருக்கும் துறையில் இந்தியருக்கு மிகுந்த திறமை உண்டு. ஆனால் :19ம் நூற்றாண்டில் எல்லாம் மங்கிவிட்டது.

1908ல் டாடா இரும்புக் கம்பெனி ஏற்பட்டது. டிஸ்கோ(Tisco)—இப்போது இக்கம்பெனி 8 லட்சம் டன் எஃகு விற்பனை செய்கிறது.

இந்தியன் இரும்பு எஃகுக் கம்பெனி (வங்காளம்), மைசூர் இரும்பு எஃகுச் சாலை, இவ்விரண்டும் எஃகு உற்பத்தி செய்கின்றன.

இரும்புத் தொழிலுடன் சார்பு உள்ள இதரத் தொழில் கம்பெனிகள் உண்டு. ஸ்டீல் தகடுகள் செய்யும் கம்பெனிகள், டின்பிளேட் செய்யும் கம்பெனி, எஃகுக் கம்பிகள் செய்யும் கம்பெனி, வாகன் கட்டும் கம்பெனி எனப் பல தொழிற்சாலைகள் இருக்கின்றன.



நெய்வேலிச் சுரங்கம்

சணல்

பாகிஸ்தான் பிரிவினையினால் இந்தியாவில் உள்ள சணல் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய சணல்நார்

(மூலப்பொருள்) கிடைப்பதில்லை. சணல் விளையும் பிரதேசங்கள் பாகிஸ்தானிலும் சணல் பைகள், கோணிகள் செய்யும் தொழிற்சாலைகள் இந்தியாவிலுமாகப் பிரிந்து விட்டன. இந்திய மில்களுக்கு வேண்டிய சணல்நார் உற்பத்தி செய்ய இந்தியா முயற்சி செய்து வருகிறது.

நிலக்கரி

பல சுரங்கங்கள் தனி நபர் வசமே உள. இந்திய சர்க்கார், ரயில்வேக்களுக்கு வேண்டிய நிலக்கரி எடுக்க 11 சுரங்கங்களைப் பிரயோசனப்படுத்தி வருகின்றனர். நிலக்கரிச் செல்வம் முழுவதுமே தேசிய வசமாக்கிச் சர்க்காரே மேற்கொள்வது பற்றி யோசனைகள் நடைபெறுகின்றன.

சர்க்கரை

பருத்தி, சணல், இரண்டுக்கும் அடுத்தபடியாக நம் நாட்டிலுள்ள முக்கிய தொழில் சர்க்கரை உற்பத்தியாகும். மொத்த உற்பத்தியில் முக்கால் பங்கு பீஹார், உத்தர பிரதேசத்தில் உற்பத்தியாகிறது. உற்பத்தியில் சுமார் 40 லட்சம் டன் வெல்லமாகவும், மிகுதி சர்க்கரையாகவும் தயாரிக்கப்படுகின்றன. இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது நமது நாட்டு மக்கள் உபயோகிக்கும் சர்க்கரை குறைந்த அளவேயாகும். ஒரு வருஷத்தில் பிரிட்டனில் ஒருவருக்கு 112 பவுண்டும், ஆஸ்திரேலியாவில் 114 பவுண்டும், டென்மார்க்கில் 128 பவுண்டும் உபயோகமாகின்றன. ஆனால் இந்தியாவில் 30 பவுண்டு தான் உபயோகப்படுகிறது.

காகிதம்

முன்னாட்களில் காகிதத் தொழில் ஆங்காங்கு கிராமத் தொழிலாக இருந்தது. பிறகு இயந்திரசாலைகள்


ஏற்பட்டன. இப்போது இந்தியாவிலும் சுமார் 35 மில்கள் இருக்கின்றன. இவைகளிலிருந்து வருஷத்திற்கு சுமார் 2 லட்சம் டன் எடையுள்ள காகித அட்டைகளும், முரட்டுத் தாள்களும், மெல்லிய காகிதமும் உற்பத்தியாகின்றன. அமெரிக்கா, கானடா, பிரிட்டன் நாடுகளில் ஒரு நபர் உபயோகிக்கும் காகிதம் 100 பவுண்டுகளுக்கு மேல் ஆகும். ஆனால் இந்தியாவில் $1\frac{1}{2}$ பவுண்டுகூட இல்லை. நமது உற்பத்தி குறைவாதலின் வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறோம். காகிதம் செய்ய உதவும் (புல்வகைகள், மூங்கில், மரச் சோறு) மூலப்பொருள்களை, இன்னும் அபரிமிதமாகப் பெருக்கி, மில்களையும் அதிகமாக ஏற்படுத்த வேண்டும்.

தோல்

இந்தியாவின் ஏற்றுமதிப் பொருள்களில் தோல் முக்கியமானது. 25 கோடி ரூபாய் மதிப்புள்ள தோல் வருடந்தோறும், ஏற்றுமதியாகிறது. இத் தொழில் இன்னும் அபிவிருத்தியடைய வசதி உண்டு. நூற்றுக் கணக்கான கிராமக் கிடங்குகளைச் சீர்ப்படுத்திச் சேதமின்றிச் சுலபமாகவும் துரிதமாகவும் தோலைப் பதனிட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைத் தீவிரமாகச் செய்து வருகின்றனர். பதனிட்ட தோலுக்குச் சாயமிட உதவும் கஷாயத்திற்கு வேண்டிய மரப்பட்டைகளும் சரக்குகளும் வெளிநாடுகளிலிருந்து வாங்கிவந்தோம். இவைகளில் பெரும்பான்மையானவற்றை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்ய இப்போது திட்டமிடப்பட்டிருக்கிறது.

பட்டு, கம்பளம், பனியன் முதலியன

மைசூர், கொள்ளேகாலம், வங்காளம், அஸ்ஸாம், காஷ்மீரம் இவ்விடங்களில் பட்டு உற்பத்தி அதிகம்.



இந்தியிலுள்ள அழகப்பா தோல் தொழிற் கல்லூரியின் ஒரு பகுதி

வருஷத்தில் சுமார் 8 கோடி ரூபாய் மதிப்புள்ள 25 லட்சம் டன் பட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. செயற்கைப்பட்டு உற்பத்தியும் 2 கோடி ரூபாய் மதிப்பு ஆகும்.

கம்பளத் தொழிலில் சுமார் லட்சம் ஜனங்கள் உழைக்கிறார்கள். கம்பள ஆலைகளில் சுமார் 25,000 ஆட்கள் வேலை செய்கிறார்கள். ஆலைகளிலிருந்து சுமார் 3 கோடி பவுண்டு எடையுள்ளதும் கைத்தறிகளிலிருந்து

சுமார் $1\frac{1}{2}$ கோடி பவுண்டு எடையுள்ளதுமான கம்பளம் உற்பத்தியாகிறது. முரட்டு ரகங்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவிட்டு, சன்ன ரகங்களை இறக்குமதி செய்கிறோம்.

பஞ்சாப், உத்தரப் பிரதேசம், பம்பாய், மலையாளம் இவ்விடங்களில் பனியன், சாக்ஸ் முதலியன பின்னும் ஆலைகள் உண்டு.

செமண்டு

இந்தியாவில் 23 செமண்டு உற்பத்தி சாலைகள் உண்டு. இவற்றில் முதலீடு செய்துள்ளது 30 கோடி ரூபாய். 50,000 தொழிலாளிகள் உழைக்கின்றனர். வருஷத்தில் சுமார் 40 லட்சம் டன் உற்பத்தி எதிர் பார்க்கப்படுகிறது. இதில் அசோசியேடெட் செமண்டு கம்பெனிகள் (A. C. C.) 25 லட்சமும், டால்மியா செமண்டு கம்பெனி 7 லட்சமும் உற்பத்தி செய் கின்றன.

ரப்பர்

தென் இந்தியாவில்தான் ரப்பர் உற்பத்தி அதிகம். இந்தியத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய ரப்பர் சுமார் 30 ஆயிரம் டன். இதில் 6 ஆயிரம் டன் வெளி நாடுகளிலிருந்து வாங்குகிறோம். இதைக் குறைத்து, நாமே உற்பத்தியைப் பெருக்கவேண்டும். மலேயாவில் ஏகருக்கு 500 பவுண்டு ரப்பர் எடுக்கிறார்கள். ஆனல் இந்தியாவில் 300 பவுண்டுதான் எடுக்கப்படுகிறது. ரப்பர் பால்தரும் மரங்களை வளர்ப்பதிலும், அவற்றை நோய்வராமல் காப்பதிலும் பரிசீலனை செய்து ரப்பர் மகசூலை அதிகமாக்கத் திட்டம் இருக்கிறது.

நெருப்புக் குச்சி

இந்தத் தொழில் நம் நாட்டில் சமீபகாலத்தில் நல்ல முன்னேற்றம் அடைந்துவிட்டது. இப்போது இந்தியாவில் உபயோகமாகும் 180 லட்சம் குரோஸ் பெட்டிகளும் இந்தியாவிலேயே உற்பத்தியாகின்றன. ஸ்வீடன் தேச முதலாளிகளும் தொழில் நிபுணர்களும் இந்தியாவில் தொழிற்சாலைகள் (**Western India Match Company**) அமைத்துள்ளார்கள். பாரில்லி, அம்பர்நாத், கல்கத்தா, சென்னை முதலிய இடங்களில் தொழிற்சாலைகள் இருக்கின்றன. நமது நாட்டுத் தேவையில் முக்கால் பங்கு இந்தக் கம்பெனி சாலைகள் உற்பத்தி செய்கின்றன. மிகுதி கால் பங்கு இதர சிறிய தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்றன. மொத்தம் சுமார் 50 தொழிற்சாலைகளில் 20 ஆயிரம் ஆட்கள் உழைக்கின்றனர்.

கண்ணுடி

கண்ணுடி வளையல்கள் செய்வது வெகு காலமாக நடந்துவரும் தொழில். முதல் தொழிற்சாலை டிட்டாகர் நகரில் தொடங்கப்பட்டது. பிறகு பல இடங்களில் ஏற்பட்டு இப்போது 225 தொழிற்சாலைகள் உள. இவற்றில் சுமார் 100 சாலைகள் வளையல்கள், மணிகள், போலி முத்துக்கள் இவைகளை உண்டாக்குகின்றன. வருஷ உற்பத்தி சுமார் 110 ஆயிரம் டன் எடை கண்ணுடி. இதன் மதிப்பு சுமார் 10 கோடி ரூபாய். உத்தரப் பிரதேசத்தில்தான் அதிகத் தொழிற்சாலைகள் இருக்கின்றன.

ஒட்டுப்பலகை (Plywood)

இத் தொழில் இப்போது ஆரம்ப நிலையில் உள்ளது. இந்தியாவின் வருஷத் தேவை சுமார் 4 கோடி ரூபாய் மதிப்புள்ள 15 கோடி சதுர அடி. ஒட்டுப் பலகை தேயிலைப் பெட்டிகள் செய்வதற்குத்தான் ஒட்டுப் பலகை முக்கியமாக உபயோகப்படுகிறது. ஆண்டுக்கு 60 லட்சம் பெட்டிகள் தேவை. ஆனால் அவற்றில் நமது தொழிற்சாலைகள் 30 லட்சமே உற்பத்தி செய்வதால், அமெரிக்க ஐக்கிய நாடுகள், கானடா, பின்லாண்டு, பிரிட்டன் முதலிய வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியதாயிருக்கிறது. இப்போது நாமே உற்பத்தியைப் பெருக்கத் தீவிர முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். சர்க்கார் ஆதரவுடன் சுமார் 80 தொழிற்சாலைகள் இந்த வேலையில் ஈடுபட்டிருக்கின்றன.

சோப்

இத் தொழிலில் மிகவும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. சோப் செய்வதற்கு வேண்டிய மூலப் பொருள்கள் நம் நாட்டிலேயே கிடைக்கின்றன. வாசனைத் தைலங்கள் நம்மிடமே உண்டு. பம்பாய், வங்காளம், மைசூர், பரோடா, மலையாளம் இப்பிரதேசங்களில் சுமார் 60 பெரிய தொழிற்சாலைகள் உள. இவைகளைத் தவிர குடிசைத் தொழில் வகையிலும் சுமார் 4000 சிறு உற்பத்திச்சாலைகளும் இருக்கின்றன.

இதர நாடுகளுடன் ஒப்பிடும்போது வருஷ சராசரி நம்மவர் உபயோகிக்கும் சோப்பின் எடை 1 பவுண்டு தான். இது உலகத்தில் மிகக் குறைந்த அளவு ஆகும்.

தேயிலை

ஏற்றுமதியில் இரண்டாவது ஸ்தானம்பெற்றது தேயிலை. மொத்த ஏற்றுமதி மதிப்பில் 15 சதவிகிதம். தேயிலை. சுமார் 55 கோடி பவுண்டு ஏற்றுமதி. இதில் அஸ்ஸாம், வடஇந்தியாவிலிருந்து முக்கால் பங்குக்கு மேல் கிடைக்கிறது.

நாட்டு உற்பத்தியில் ஐந்தில் ஒருபங்குதான் உள்நாட்டில் உபயோகிக்கப்படுகிறது. மிகுதி 4 பங்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

ஆராய்ச்சி செய்து உற்பத்தியும் வியாபாரமும் இன்னும் பெருக்க தேயிலை போர்டு ஸ்தாபனம் ஏற்பாடுகள் செய்கிறது.

காப்பி

சென்னை, குடகு, மைசூர், திருவாங்கூர், கொச்சி இவ்விடங்களில் காபி பயிராகிறது. சுமார் $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் காப்பித்தோட்டம். காப்பித் தொழிலில் சுமார் 15 கோடி ரூபாய் முதலீடு ஆகும். சுமார் $1\frac{1}{2}$ லட்சம் ஆட்கள் உழைக்கின்றனர். 6 கோடி ரூபாய் மதிப்புள்ள காப்பி மகசூல் வருஷ சராசரி வருமானம். இந்தியன் காப்பி போர்டு ஸ்தாபனம்—காப்பி எஸ்டேட்டுகளை ரிஜிஸ்தர் செய்துகொண்டு, வருஷ மகசூலைத் திரட்டிச் சேகரம் செய்து, ரகப்படுத்தி, ஏற்றுமதிக்கும், உள்நாட்டுத் தேவைக்கும் பங்கிட்டுத்தருகின்றனது.

புகையிலை

புகையிலை உற்பத்தியில் அமெரிக்கா, சீனு இரண்டிற்கும் அடுத்தபடியாக இந்தியா மூன்ருவது ஸ்தானம்

பெற்றுள்ளது. இந்தியாவின் மொத்த புகையிலை சாகுபடி நிலத்தில் சுமார் பாதி அளவு சென்னையில் இருக்கிறது. ஆனால் மொத்த உற்பத்தியில் 90% சென்னையில் கிடைக்கும். இத்தொழில் சுமார் 20 கோடி ரூபாய் முதலீடு கொண்டது. வருஷ சராசரி உற்பத்தி 85 கோடி பவுண்டு எடை. உற்பத்தியில் பாதிக்குமேல் இந்தியாவிலேயே செலவு ஆகிவிடுகிறதாயினும், ஏற்றுமதியும் வருஷா வருஷம் அதிகரித்து வருகிறது.

இந்தியச் செலவு	கோடி பவுண்டு
புகையிலை மெல்லுதல்	12
மூக்குத் தூள்	1
பீடி, சிகிரெட், சிகார் வகை	33
	46

ஏற்றுமதி

1948-ல்	54	கோடி பவுண்டு
1950-ல்	57	,,
1951-ல்	59	,,

இந்தியப் புகையிலையையும் சிகார்களையும் அதிகமாக வாங்கும் தேசம் பிரிட்டன்.

ஆட்டோமோபைல்

இந்தியாவில் இத்தொழில் இப்போதுதான் தொடக்கம். அதுவும் உற்பத்தி இல்லை. பற்பல பகுதிகளைத் தருவித்து இவ்விடமே அவைகளைக் கோத்து இணைத்து உருவாக்குவதே இப்போது உள்ள தொழிலின் நிலை. இந்தியாவிலேயே முழுவதும் உண்டாக்

கப்பட்ட மோட்டார்வண்டி ஏற்பட இன்னும் பல ஆண்டுகள் பிடிக்கும். அயல் நாட்டுக் கம்பெனிகள் சில இந்திய கம்பெனிகளுடன் கூட்டுறவாக, வண்டிகள் கோத்து இணைக்கும் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து வேலை செய்கின்றன. ஜெனரல் மோட்டார் கம்பெனி, போர்டு (**Ford**) மோட்டார் கம்பெனி, ஹிந்துஸ்தான் மோட்டார்கள் (பிரிட்டிஷ் மாரிஸ் கம்பெனியுடன் சார்புள்ளது), பிரீமியர் ஆடோமோபைல் கம்பெனி (அமெரிக்கா கிரிஸாலியர் கம்பெனியுடன் இணைப்பு), அசோக் மோட்டார்ஸ் (பிரிட்டிஷ் ஆஸ்டின் கம்பெனியுடன் இணைப்பு), அடிசன் மோட்டார்ஸ், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ், பிரெஞ்சு மோட்டார் கம்பெனி, உத்தரப் பிரதேச மோட்டார் (ரூட்ஸ் இணைப்பு), மஹிந்திரா, தேவாஸ்—முதலிய 12 கம்பெனிகள் உள. இவற்றின் மொத்த மூலதனம் சுமார் 10 கோடி ரூபாய்.

வர்ணம், வார்னிஷ் முதலியன

வார்னிஷ் தொழிலில் சுமார் 4 கோடி ரூபாய் முடக்கப்பட்டுள்ளது. 1950-ல் 28 ஆயிரம் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டன.

விளையாட்டுப் பந்துகள், மட்டைகள் (**bats**) செய்வதில் சுமார் 151 தொழிற்சாலைகள் உழைக்கின்றன. இவைகள் பெரும்பாலும் வடஇந்தியாவில் உள. டெல்லி, மீரட், ஆக்ரா, ஜலந்தர் முதலிய இடங்கள் முக்கியமானவை. இத்தொழிலில் மிகவும் புகழ்பெற்ற சியால்காட் இப்போது பாகிஸ்தானில் உள்ளது.

மருந்துகள்

கஷாயம், டிஞ்சர், எஸ்ஸென்ஸ் முதலிய உற்பத்தித் தொழில் இன்னும் அதிகம் பெருகவேண்டும். கொய்னா

தயார் செய்வது மாத்திரம் சர்க்கார் வசம் உள்ளது. வருஷம் லட்சம் பவுண்டு கொய்னா உற்பத்தியாகிறது. அபின் (opium) செய்வதும் சர்க்கார் வசம் உள்ளது. லிவர் (ஈரல்) மருந்துகள், இஞ்செக்ஷன் செய்யவும் உள்ளுக்குக் குடிக்கவும், தயார் ஆகின்றன. ஷார்க் மீன் எண்ணெய் உற்பத்தியும் அதிகமாகியுள்ளது. சர்க்கார் மருந்துச் சாலைகளில் 80 லட்சம் C. C. சீரம், வாக்ஸின் உற்பத்தியும் இதர மருந்துச்சாலைகளில் 50 லட்சம் C. C. உற்பத்தியும் செய்யப்படுகின்றன. இவை நமது இப்போதைய தேவைக்குப் போதும்.

வனஸ்பதி

சர்க்கரைக்கு அடுத்தபடியாக இத்தொழில் இப்போது முக்கியமடைந்துள்ளது. சுமார் 50 கம்பெனிகள் 25 கோடி ரூபாய் மூலதனம் போட்டு வேலை செய்கின்றன. சுமார் 20 ஆயிரம் ஆட்கள் இத்தொழிலில் உழைக்கிறார்கள். சுமார் 2 லட்சம் டன் வருஷத்தில் உற்பத்தியாகும். ஆசியாவில் மிக அதிக உற்பத்தி இந்தியாவில்தான்.

கெமிகல்ஸ்

பலவித மருந்துப் பொருள்களும் திரவங்களும் நாம் வெளி நாடுகளிலிருந்தே இன்னும் வாங்குகிறோம். ஆயினும் சிற்சிலவற்றை நம்நாட்டில் உற்பத்தி செய்கிறோம். அயல்நாட்டுக் கம்பெனிகள் இந்தியாவில் தொழிற்சாலைகளை அமைத்திருக்கின்றன. கிளிஸரீன், குளுகோஸ், பைக்ரோமாட்-ஸ், மாக்னீஸியம் குளோரைட் முதலியவற்றை இப்போது பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுக்கும் இந்தியத் தொழிற்சாலைகள் ஏற்றுமதி செய்கின்றன.

சினிமா

இந்தியாவில் முதல் சினிமாப் படம் 1912-ல் தாதா சாஹேப் பால்கி தொடங்கினர். 'ஹரிச்சந்திரா' முதல் படம். நாளடைவில் பில்ம் தொழில் மிகவும் விருத்தியாகியது. 1928-ல் 80 பில்ம்கள் உற்பத்தியாயின. 1931-ல் முதல் பேசும்படம் பம்பாயில் காட்டப்பட்டது.

இப்போது 250 முதல் 280 படங்கள் ஒரு வருஷத்தில் தயாரிக்கப்படுகின்றன. அவைகளின் மொத்த நீளம் 20 கோடி அடி. இத்தொழிலில் 70000 ஜனங்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்தியாவில் சுமார் 3200 சினிமா இடங்கள் உண்டு.

சராசரி 10 லட்சம் ஜனங்களுக்கு 6 சினிமா விகிதம் அனுபவிக்கலாம். பிரிட்டன், அமெரிக்கா முதலிய நாடுகளுடன் ஒப்பிட்டால் இது மிகவும் சொற்பம்.

ஆயினும் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக இந்தியாவில்தான் அதிகப் படங்கள் தயார் ஆகின்றன. இத்தொழிலில் பம்பாய் முதல் இடமும் சென்னை இரண்டாவது இடமும் பெற்றுள. சென்னையில் சராசரி 50 படங்கள் ஒரு வருஷத்தில் தயாராகின்றன.

பில்ம் தொழிலைக் கண்காணிப்பது மத்திய சர்க்காரின் வேலை. போதுஜனங்களுக்கு பில்ம்களைக் காட்டுமுன் தணிக்கை போர்டார் கவனித்துச் சர்டிபிகேட் அளிப்பார்கள்.

சர்க்காரே சிறிய பில்ம்களையும் தயார் செய்கின்றனர். பிரதி வாரத்திலும் சினிமா இடங்களில் சர்க்கார் தயாரித்த 1000 அடி பில்மாவது, அவைகளின்

மூலம் காட்டவேண்டும். பொது அறிவு விஷயங்களும், செய்தி சம்பவங்களும் காட்டப்படும்.

பில்ம் தொழில், சினிமாக் காட்சி இவைகளிலிருந்து வரிவசூல் மூலம் சர்க்காருக்கு வருமானம் உண்டு.

1951-ல்—படங்கள் உற்பத்தி

மொத்தம் 221. இதில் ஹிந்தி 100, வங்காளி 38, தமிழ் 26, தெலுங்கு 20, மராத்தி 16, கூர்ஜரம் 6, மலையாளம் 7, பஞ்சாபி 4, கன்னடம் 2, இதர பாஷை 2.

தொழில் விருத்தியும் உற்பத்திப் பெருக்கமும்

விவசாயத்தை விருத்திசெய்து உற்பத்திப் பொருள்களை அபரிமிதமாகப் பெருக்கமுடியும். விவசாயத்திற்கு வேண்டிய நிலம் இல்லை என்று குறைகூறவேண்டியதில்லை. இன்னும் 20 கோடி ஏகரா நிலம் தரிசாகக் கிடக்கிறது. அதுமாத்திரமல்ல, நமது நாட்டில் ஒரு ஏகராவில் நாம் எடுக்கும் மகசூல் தானியம் மிகவும் குறைவு. இதர நாடுகளில் விளையும் அளவில் அரைப் பங்கு அல்லது முக்கால் பங்குதான் நமக்குக் கிடைக்கிறது. விளைச்சலை அதிகரிக்கத் தீவிரமான முயற்சிகள் செய்யவேண்டும்.

தலைமுறை தலைமுறையாகச் சாகுபடிசெய்யப்பட்ட நிலத்தில் வளம் குறைந்துவிட்டது. வளத்தை அதிகப்படுத்தப் பலவகை எருக்கள் போடவேண்டும். தழை எரு, சாணி எரு இவைகளைச் சேகரித்து உபயோகிப்பது அவசியம். ரசாயன உப்பு எரு போடவேண்டும். புது ரகக் கலப்பைகளையும் உபயோகிக்கவேண்டும். புஷ்டியான உழவுமாடுகளும் வேண்டும். நடவு முறைகளிலும்

சீர்திருத்தம் வேண்டும். இவ்விஷயங்களைப்பற்றி எல்லாம் ஆராய்ச்சி செய்யும் நிலையங்களை ஸ்தாபித்திருக்கிறோம்.

விவசாயத்தில் உணவுப் பொருள்கள் மாத்திரமின்றித் தொழில்களுக்கு வேண்டிய பலவித மூலப் பொருள்களையும் உற்பத்தி செய்கிறோம். ஒரு தொழிலுடன் தொடர்பு உள்ள இதரத் தொழில்களையும், பொருள் உற்பத்தியில் உண்டாகும் பலவித மிச்ச சரக்குகளைப் பயன்படுத்தும் புதுத் தொழில்களையும் விருத்தி செய்கிறோம்.



காரைக்குடியிலுள்ள எலெக்ட்ரோ கெமிகல் இன்ஸ்டிட்யூட்

ஆராய்ச்சி சாலைகள்

விஞ்ஞான அறிவு பெருகி இயற்கை வளங்களைச் செம்மையாகப் பயன்படுத்தும் வழிகளை ஆராய்ச்சி

செய்து உதவுவதற்குப் பல ஆராய்ச்சி நிலையங்களையும் கழகங்களையும் நமது குடியரசு சர்க்கார் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அவையாவன :—

A. **ஆராய்ச்சி நிலையங்கள் :**

1. பௌதிக ஆராய்ச்சிசாலை, டில்லி
2. ரசாயன ஆராய்ச்சிசாலை, பூனா
3. சுரங்க வேலை ஆராய்ச்சிசாலை, ஜெம்ஷெட்பூர்
4. எரிபொருள் ஆராய்ச்சிசாலை, தானபாத்
5. பீங்கான், கண்ணாடி ஆராய்ச்சிசாலை, கல்கத்தா
6. சாலைகள் கட்டும் துறை ஆராய்ச்சிசாலை, டில்லி
7. கட்டிடங்கள் கட்டும் துறை ஆராய்ச்சிசாலை, ரூர்க்கி
8. உணவுப் பொருள் ஆராய்ச்சிசாலை, மைசூர்
9. மருந்துகள் ஆராய்ச்சிசாலை, லக்னோ
10. தோல் பதனிடும் துறை ஆராய்ச்சிசாலை, சென்னை
11. எலெக்ட்ரோ கெமிகல் ஆராய்ச்சி சாலை, காரைக்குடி.

B. வைத்திய முறைகளைப் பரிசீலனை செய்யும் ஆராய்ச்சிக் கழகங்கள் :

1. மலேரியா தடுப்பு, கசௌளி—டில்லி
2. உஷ்ணப்பிரதேச நோய்களும் தடுப்பு முறைகளும்—கல்கத்தா
3. ஹாப்கின் ஆராய்ச்சி நிலையம்—பம்பாய்
4. ரத்த பரிசோதனையும் சீரம் உற்பத்தியும், கிங் இன்ஸ்டிட்யூட் கிண்டி—சென்னை
5. உணவு சத்து ஆராய்ச்சி—குன்னூர்
6. நாய்கடி மருந்து, (பாஸ்தியர் இன்ஸ்டிட்யூட்)—குன்னூர் ; கசௌளி

C. விவசாயம், ஆயுதங்கள், பொறிநூல் ஆராய்ச்சி இடங்கள் :

1. வனத்துறை—டேராடூன்
2. மிருக வைத்தியத்துறை—முக்தேஸ்வர் ; இஸ்ஸாத்புரி
3. பால் பண்ணைத்துறை—பங்களூர்
4. சர்க்கரைத் தொழில்—கோயமுத்தூர்
5. இந்திய விவசாய முறைகள் ஆராய்ச்சி—டில்லி
6. நெல் சாகுபடி ஆராய்ச்சி—கட்டாக்
7. சணல் ஆராய்ச்சி—கல்கத்தா, ஹூக்ளி
8. அரக்கு உற்பத்தி வழிகள்—ராஞ்சி
9. புகையிலை உற்பத்தி — குண்டூர் ; ராஜமகேந்திரம்

10. பீடிகள் கட்டும் தொழில்—ஆனந்த்

11. உள்நாட்டு மீன்கள் — பராக்பூர்; கடல் மீன்கள்—சென்னை; ஆழ்கடல் மீன்கள்—பம்பாய்.

தொழில் அபிவிருத்தியும் உற்பத்திப் பெருக்கமும் அவசியம் என அறிந்து இவ்வாறு பலவித ஆராய்ச்சி இடங்களை குடியரசு சர்க்கார் அமைத்துளர். தொழில் முதலாளிகளும் தத்தம் தொழிலுக்கு இவ்வித ஆராய்ச்சி உதவி தேவையென உணர்ந்து, மூலதனம் கொடுத்து உதவி இருக்கிறார்கள்.

ஆமதாபாத் பஞ்சு ஆலைகள் ரூ. 52 லட்சம் கொடுத்துப் பருத்தி நூல் பஞ்சு ஆராய்ச்சிக்கு உதவின. கோயமுத்தூர் ஆலைகளும் உதவி ஏற்பாடு செய்திருக்கின்றன. பட்டுப்பூச்சி, நார்ப்பட்டு இவைகள் ஆராய்ச்சிக்குப் பட்டுத்தொழில் முதலாளிகள் ரூ. 35 லட்சம் கொடுத்து உதவியிருக்கிறார்கள்.

ஆராய்ச்சி சாலைகளைத் தவிர வசதியான இடங்களில் மாதிரிப் பண்ணைகள் அமைத்துச் சாகுபடி செய்தும் சர்க்கார் காட்டுகிறார்கள்.

(1) உருளைக்கிழங்கு ஆராய்ச்சியும் பண்ணையும்—புனா, நீலகிரி. (2) காய்கறி, பழம் சாகுபடிப் பண்ணை—குனூ. (3) மாட்டுப் பண்ணைகள்—கார்மார், கோயமுத்தூர், ஹோசூர். (4) சிந்திரி ரசாயன உர உற்பத்தி சாலையில் உரங்கள் உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு உதவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்ப்பாசனம்


விவசாய வளம் பெருகுவதற்கு நல்ல நீர்ப்பாசனம் வேண்டும். இந்தியாவில் பல நூற்றாண்டுகளாகவே நீர்ப்பாசன ஏற்பாடுகள் மிகவும் சிறப்பாக உண்டு. நல்ல நீர்ப்பாசன வசதி உள்ள மேற்கு பஞ்சாப், கிழக்கு வங்காளம் இரண்டும் பாகிஸ்தான் பிரிவினையினால் இந்தியாவிலிருந்து விலகிப் போயின. இருந்தாலும் மிகுந்துள்ள சாகுபடி நிலங்களில் இப்போது இருக்கும் நீர்ப்பாசன வசதிகளை இன்னும் நன்கு அபிவிருத்தி



மலம்புழா திட்டத்தின் பகுதி

செய்யவேண்டும். கங்கை, யமுனை ஆறுகளிலிருந்து பல கால்வாய்கள், சட்லெஜ் கால்வாய்கள், மகாநதி, கோதாவரி, கிருஷ்ணை, காவேரி நதிகளிலிருந்தும் பல கால்வாய்கள் இருக்கின்றன. இவைகள் மண்மேடிட்டுத்

தூர்ந்து போகாமல் அடிக்கடி மராமத்து செய்து கவனிக்கவேண்டும். ஆற்று நீர்ப்பாசனம் தவிர ஏரி, குளங்களிலிருந்தும் பாய்ச்சல் வசதிகள் உண்டு. இவ்வளவும் சாகுபடி நிலங்களில் கால்பங்கு அளவுக்குக் கூடப் போதவில்லை. இப்போது சாகுபடியில் உள்ள நிலங்களில் நீர்ப்பாசன வசதி இல்லாதவைகளுக்கும், இனியும் சாகுபடிக்குக் கொண்டுவரும் புது நிலங்களுக்கும் நீர்ப்பாசனத் திட்டம் தேவை. இந்த வேலையில் குடியரசு சர்க்கார் மிகவும் சிரத்தைகொண்டு துரிதமான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்கள்.



கீழ் பவானி திட்டத்தின் பகுதி

140 கோடி ஏக்கர் அளவுக்கு நமது ஆறுகள் நீர் வளச் செல்வம் அளிக்கும் என மதிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் இந்த இயற்கைச் செல்வத்தில் சுமார் அரைக்கால் பங்கைத்தான் நாம் பயன்படுத்தியுள்ளோம்.

மிகுதியெல்லாம் வீணே சமுத்திரத்தில் போய்விழு கிறது. இதில் பெரும்பகுதியை இன்னும் நாம் பிர யோசனமாக்கிக்கொள்ள முடியும்.



மேட்டூர் அணைக்கட்டு

இதன் பொருட்டு பல நீர்த்தேக்கங்களும் அணைக் கட்டுகளும் தொடங்கப்பட்டுள. இவைகளால் நீர்ப் பாசனம் மட்டும் இன்றி இன்னும் இதர உபயோகங் களும் உண்டு. முக்கியமாக நீர்விசையைக்கொண்டு மின் சக்தி சேகரம் செய்யமுடியும். வெள்ளங்களால் நாசம் உண்டாகாமல் பாதுகாத்துக் கொள்ளலாம். படகுப் போக்குவரத்து, மீன் அபிவிருத்தி முதலியனவும் அதி கரிக்கும். தாமோதர், பாக்ரநாங்கல், கோசி, ஹிராகுட், ராமபாத சாகர், கோய்ன, கல்மாடி முதலிய தேக்கங்கள் திட்டத்தில் உள. சிலவற்றில் இப்போது வேலை நடந்து கொண்டிருக்கிறது.



மணிமுத்தார் திட்டத்தில் வேலை நடந்து வருவது



பாக்ரநாங்கல் அணை

ஐந்து ஆண்டுத் திட்டத்தில் சுமார் 70 பிராஜெக்டு கள் உண்டு. இன்னும் 2 கோடி ஏக்கருக்கு நீர்ப் பாசனம் கிடைக்கும். இன்னும் ஒரு மிலியன் கிலோ வாட் மின்சக்தி சேகரிக்க முடியும்.

மத்ய சர்க்கார் திட்டத்தைத் தவிர இராஜ்ஜிய சர்க்கார்களும் அநேக நீர்த் தேக்கங்களைக் கட்டத் தொடங்கி இருக்கிறார்கள். தொடங்கியுள்ள 135 பிரா ஜெக்டுகளைத் தவிர இன்னும் 122 பிராஜெக்டுகளைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

சென்னை இராஜ்ஜியம்

	செலவு கோடி ரூபாய்	பாசனம் ஆயிரம் ஏக்கர்கள்	மின்சக்தி ஆயிரம் கிலோவாட்
துங்கபத்ரா	4·2	700	...
நீர்விசை do	8	...	60
லோயர் பவானி	9	207	...
மல்லம்புழா	4	40	...
மணிமுத்தாறு	4	20	...
மோயார் நீர்விசை	5	...	36
பைகாரா 3ம் பகுதி	5	...	30
பாபநாசம் 2ம் பகுதி	4	...	20
மச்சகுண்ட்	7	...	100

இயந்திரத் தொழில்கள், கிராமத் தொழில்கள்

குடியரசு சர்க்கார் நாட்டுத் தொழில்களைப் பெருக்கவும் கண்காணிக்கவும் மேற்கொண்டு உளர். எஃகு, பருத்தி, சர்க்கரை, செமண்டு, சணல் இவைகள்

பிரதானம். தொழில் பெருக்கம் உள்ள 8 உலக நாடு களில் இந்தியாவும் ஒன்று.

தொழில் வகைகளை மூன்று இனங்களாகப் பிரிப் போம்:

1. யுத்த தளவாடங்கள், அணுசக்தி, பெரிய நீர்த் தேக்கம், ரயில்வே—இவைகளைச் சர்க்காரே ஏற்று நடத்துகிறார்கள். சுமார் 37 தொழில்கள் சர்க்கார் ஆதீனத்தில் உள.

2. நிலக்கரி, இரும்பு, எஃகு, விமானங்களும் வண்டிகளும், டெலிபோன், ரேடியோ, கப்பல், மண் எண்ணெய் முதலியன. இவைகளில் சர்க்காருக்கு முக்கிய பங்கும் பொறுப்பும் உண்டு.

3. பஞ்சு, பருத்தி, சணல், கம்பளம், தோல், செமண்டு, சர்க்கரை, டீ, மோட்டார் வண்டிகள், இயந் திரங்களும் நுண் கருவிகளும் முதலியன. இவைகளைப் பெரும்பாலும் ஜனங்களே மூலதனம் போட்டுச் சொந்த மாக நடத்துகின்றனர்.

தொழில்நிதி கார்ப்பரேஷன் என்ற ஒரு சங்கம் 10 கோடி ரூபாய் மூலதனம் போட்ட பங்குதாரர்கள் சேர்ந்து 1948ல் தொடங்கியுள்ளது. இது சர்க்கார் ஆதரவு பெற்றது. தொழில் நடத்தும் முதலாளிகளுக்கு மூல தனம் கடன் கொடுத்து உதவுகிறது.

கிராமத் தொழில்களை அபிவிருத்தி செய்யவும் திட்டமிட்டிருக்கிறார்கள். குடிசைத் தொழில் போர்டு, கைத்தறி அபிவிருத்தி போர்டு என்றும் அமைக்கப்

பட்டு வேலைகள் நடைபெறுகின்றன. கைத்தொழிலில் ஜீவிப்போர் அவஸ்தைகளைக் குறைக்க வேண்டி, இயந்திரத் தொழில் உற்பத்தியைக் குறைக்கவும் சிற்சில பகுதிகளில் இயந்திர உற்பத்திப் போட்டி ஏற்படாம லிருக்கச் செய்தும் வருகிறார்கள்.

சர்க்கார் தொடங்கியுள்ள சில தொழிற்சாலைகள்

1. சிந்திரி (பீஹார்) ரசாயன உர உற்பத்திச்சாலை. 30 கோடி ரூபாய் மூலதனம். தினமும் 1000 டன்கள் அம்மோனிய சல்பேட் உண்டாக்க வேண்டும் என்று திட்டம்.

2. ஆகாயவிமானம் உற்பத்தி செய்யும் தொழிற் சாலை, பங்களூர். இதில் சர்க்கார் மூலதனம் மூன்றில் இரண்டு பங்கு. ஹிந்துஸ்தான் ஏர்கிராப்டு என்ற கம் பெனி நடத்துகிறது. ரயில்வண்டிப் பெட்டிகளையும் கட்டி முடிக்கத் தொடங்கியுளர்.

3. ரயில்வே லோகோ தொழிற்சாலை, சித்த ரஞ்சன் (அசன்சால்). 14 கோடி ரூபாய்மூலதனம். வரு ஷத்தில் 120 வண்டிகளும் 50 பாய்லர்களும் கட்டுவ தெனத் திட்டம்.

4. பெரம்பூர் ரயில்பெட்டி உற்பத்திச்சாலை, (சென்னை). இந்திய ரயில்வே இலாக்காவால் ஏற்படுத்தப் பட்டது. சுமார் 8 கோடி ரூபாய் திட்டம். ஆசியாவி லேயே மிகப் பெரியது. ஆறுமணி வேலையில் ஒரு பெட்டி தயார் ஆக்குவதெனத் திட்டம். ஒரு ஆண்டில் 350 பெட்டிகள் செய்து முடிக்கலாம். சுமார் 4000 தொழிலாளிகள் உழைக்கிறார்கள்.

5. ஆராய்ச்சிக்கு வேண்டிய நுண்கருவிகள்—கல்கத்தா.

6. நுண்கருவி ஆயுதங்களும் இயந்திரங்களும் செய்யும் தொழிற்சாலை—பங்களூர். அயல்நாட்டு நிபுணர்கள் உதவியுடன் இதைத் தொடங்கியிருக்கிறார்கள்.

7. டெலிபோன் கேபிள்கள்—ரூபநாராயண். ஒரு கோடி ரூபாய் மூலதனம். 80 லட்சம் உற்பத்தி எதிர் பார்க்கப்படுகிறது.

8. சிறு வீடுகள் கட்டுவது—புது டில்லி.

9. விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் தொழிற்சாலை. சிந்தியா கம்பெனியின் ஆதிக்கத்தில் சர்க்கார் உதவியுடன் இவ் வேலை சென்ற 3 வருஷங்களாக நடந்து வருகிறது. ஒரு கப்பல் கட்ட 60 லட்சம் ரூபாய் பிடிக்கும்.

10. பென்சிலின் மருந்து உற்பத்திக் கழகம்—பிம்பரி. உலக ஐக்கியஸ்தாபனம் உதவி அளிக்கிறது. இந்திய சர்க்கார் மூலதனம் $1\frac{1}{4}$ கோடி. 4 லட்சம் மெகா பென்சிலின் மாதம் உற்பத்தி செய்யத் திட்டம்.

11. டெலிபோன் கருவியும் அதன் உபகரணங்களும்—பங்களூர். வருஷம் 25000 டெலிபோன்கள் அமைக்கப்படுகின்றன.

12. D. D. T. (பூச்சி நாச மருந்து) உற்பத்திச் சாலை—டில்லி.

13. தபால் முத்திரை, அச்சு இங்கி—தினம் 2000 பவுண்டு இங்கி உற்பத்தி.

12. மக்கள் வாழ்க்கை

ஜனத்தொகைப் பெருக்கம்

ஜனத்தொகை மிகுந்த நாடு நமது இந்தியா. உலக ஜனத் தொகையில் ஏழில் ஒரு பகுதி இந்தியாவில் வசிக்கின்றனர்.

1948 கணக்குப்படி

நாடுகள்	சதுரமைல் விஸ்தீரணம்	ஜனத்தொகை லட்சக்கணக்கில்	நெருக்கம் (ஒரு சதுர மைலுக்கு)
இந்தியா	1221000	3568	296
U. S. அமெரிக்கா	3022000	1466	49
பிரிட்டன்	94000	502	533
கானடா	3690000	129	3
ஆஸ்திரேலியா	2974000	78	...

இந்தியாவின் ஜனத்தொகை சென்ற பத்து வருஷத்தில் 13·4 சதவிகிதம் பெருகியிருக்கிறது. 1951 சென்ஸஸ் பிரகாரம் இந்திய ஜனத்தொகை 36 கோடி. சீனுவுக்கு அடுத்தபடி இந்தியாதான் அதிக ஜனத் தொகை உள்ள நாடு. இங்கு ஒரு சதுரமைல் விஸ்தீரணத்திற்கு சராசரி 296 பேர் வசிக்கின்றனர். செழுமையான ஆற்றுப் பிரதேசங்களில் ஜன நெருக்கம் அதிகமாயும், மலைப் பிரதேசங்களிலும், பாலை நிலப் பிரதேசங்களிலும், நெருக்கம் குறைவாகவும் இருக்கிறது. மிகவும் ஜன நெருக்கமுள்ளது உத்திரப் பிரதேசம். கங்கை யமுனை சமவெளியும், சென்னை ராஜ்யமும் அடுத்து வரும்.

பாகிஸ்தான் பிரிந்து போன பிறகு, அந்த பாகத்திலிருந்து லட்சக் கணக்கான ஹிந்து ஜனங்கள் இந்தியாவில் குடியேறினர். அவர்கள் இருக்க இடமும் ஜீவன வழிகளும் ஏற்பாடு செய்வது இந்திய சர்க்காரின் பெரிய வேலையாக உள்ளது.

மொத்த ஜனத் தொகையில் நூற்றுக்கு 84·9 ஹிந்துக்கள், 9·9 முஸ்லிம்கள், 2·3 கிருஸ்தவர்கள், 1·7 சீக்கியர்கள், மிகுதி 2·2 ஜெயினர், பார்சியர், பௌத்தர், யூதர், மலைவாசிகள் ஆவர். ஹிந்துக்கள் பெருவாரியாக இருந்தபோதிலும் இந்தியா ஒரு ஹிந்து இராஜ்ஜிய மல்ல. எவ்வித மதச் சார்பும் இல்லாத இந்தியக் குடியரசு நாட்டில் எல்லா மதத்தினருக்கும் சம உரிமை உண்டு.

சுக வாழ்வு

மக்கட் செல்வம் பெருகிவிட்டதே என பீதியடைய வேண்டியதில்லை. நம் நாடு இயற்கை வளம்மிகுந்துள்ளது. ஆனால் இந்திய மக்கள் வறுமையிலும் வியாதியிலும் அவதிப்படுகிறார்கள். இந்தியா வறுமை நாடு இல்லை; ஆனால் ஜனங்களே வறுமையில் தவிக்கின்றனர். வறுமையை விரட்ட ஒரே ஒரு வழிதான் உண்டு. தீவிரமாகவும் சுறுசுறுப்பாகவும் இயற்கைச் செல்வத்தைப் பயன்படுத்தி உழைத்து உற்பத்திப் பொருள்களை ஏராளமாக்கவேண்டும். இதுவே நமது அரசாங்கத்தின் நோக்கம்.

மக்களுக்குத் தேவையான உணவு தாராளமாகக் கிடைத்துவிட்டால், மக்கள் உழைப்பு அதிகரிக்கும். வியாதிகளைத் தடுத்துக் காப்பாற்றிக்கொள்ளும் சக்தி உண்டாகும். ஊட்டக் குறைவே மக்களது வியாதி

களுக்கும் அகால மரணத்திற்கும் முக்கிய காரணம். இந்தக் குறைவை அகற்றிவிட்டால் மக்கள் சுபிட்சமாக வாழ முடியும்.

மக்களது க்ஷேம வாழ்க்கையே அரசாட்சியின் பிரதான இலட்சியம். அரசனும் அரச குடும்பத்தாரும் சில பிரபுக்களும் அதிகாரிகளும் மாத்திரம் சுகவாழ்வு வாழ்ந்தால் போதாது. குடியரசுத் திட்டத்தில் பொது மக்கள் யாவரும் சுபிட்சமாக வாழ்வதற்கு உரிமை உண்டு. அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொடுப்பது அரசாங்கத்தின் கடமை.

வியாதியும் மரணமும்

இதர நாடுகளுடன் நமது நாட்டு ஜனன மரணப் புள்ளி விவரங்களைக் கவனிப்போம் :—

	பிறப்பு	1 ஆயிரத்துக்கு மரணம்	சிசு மரணம்
இந்தியா	25·4	17·1	131
ஆஸ்திரேலியா	23·1	10·0	28
கானடா	26·9	9·8	42
பிரிட்டன்	18·1	10·9	36
U.S. அமெரிக்கா	24·4	9·9	32

உணவு குறைவாக இருப்பதாலும், அச் சொற்ப உணவிலும் போஷாக்கு சக்தி குறைந்துள்ளதாலும் பெரும்பாலர் வியாதிக்கு உட்படுகின்றனர். மரண விகிதம் இதனால் அதிகமாகிறது. பிரசவகாலத்திலேயே ஆயிரம் தாய்மாரில் 24 பேர் இந்தியாவில் இறந்து விடுகின்றனர். ஆனால் இங்கிலாந்திலோ இவ்விகிதத்தில் மரணமடைபவர் நான்குபேர்களே. நம் நாட்டில்

பிறக்கும் ஆயிரம் சிசுக்களில் 26 தான் உயிருடன் பிறக்கின்றன. உயிருடன் பிறந்த ஆயிரம் சிசுக்களில் ஒரு வருஷம் பூர்த்தியாகுமுன் 131 சிசுக்கள் மடிந்து விடுகின்றன. இவ்வளவு மோசமான நிலைமையை மாற்றவேண்டியே அரசாங்கத்தார் திட்டமிட்டிருக்கின்றனர்.

முதல் படியாக உணவுக் குறைவை நீக்கி போஷாக்கு வசதிகளை அதிகரிப்பது. நிறைய உற்பத்தியாகும் உணவுப் பொருள்களைச் சேகரித்து, எல்லா மக்களுக்கும் கிடைக்கும்படியாகப் பங்கிட்டு உதவும்படி ஏற்பாடுகள் செய்வது.

அடுத்தபடியாகச் சுகாதார வசதிகளைப் பெருக்கவும் திட்டமிட்டிருக்கிறார்கள். பத்து வருஷகாலத்தில் இதற்காக 1000 கோடி ரூபாய் செலவு செய்வது என்று உத்தேசம். ஒவ்வொரு கிராமத்திலும் 5 படுக்கைகள் கொண்ட ஆஸ்பத்திரி நிறுவுவது; வைத்தியர்கள், நர்சுகள், ஆயாக்கள் முதலியவர்களைப் பயிற்றுவித்து அவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்துவது; ஆயிரம் பேருக்கு ஒரு வைத்தியர் விகிதம் ஏற்பாடு செய்வது; என்பவை போன்றவைகளே இத்திட்டத்தின் நோக்கம்.

இவ்வித ஏற்பாடுகள் நிறைவேறினால் இன்னும் சில ஆண்டுகளில் மக்களின் சுகவாழ்வு உயரும், அகால மரணமும் குறையும். இந்திய மக்களின் சராசரி ஆயுள் 28 ஆண்டிலிருந்து இப்போது 32 ஆக உயர்ந்து இருக்கிறது. ஆயினும் இதர நாடுகளில் 50, 60 என்று இருக்க நமது நாட்டில் மாத்திரம் குறைவாகவே இருக்கிறது. "ஆயுசு நூறு" என்று நம் பெரியோர்கள்.

வாழ்த்துவது வழக்கம். ஆனால் நூறு வயதை எட்டிப் பிடிப்பவர் மிகமிகச் சிலரே. வைத்திய வசதிகள் பெருகியும், உணவு போஷாக்கு அதிகரித்தும் வாழ்க்கைத் தரம் உயர்ந்துவிடுமாயின் சராசரி ஆயுள் 28 ஆண்டிலிருந்து கணிசமாக அதிகரிப்பது திண்ணம்.

---

13. வாழ்வில் வளம்

வாழ்க்கைத்தரம் உயர்வு

குடியரசு சாஸனத்தில் மக்களது சுகவாழ்வுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியது அரசியலார் கடமை என்று விதிக்கப்பட்டுள்ளது. பிறந்த ஒவ்வொரு குழந்தையும் சுக வாழ்விற்கு உரிமை உள்ளது. ஒவ்வொரு பிள்ளையும் 14 வயது வரை இலவசப் படிப்பு பெற உரிமை உண்டு. அவரவர் சக்திக்கும் ஆசைக்கும் உகந்த தொழில் செய்யலாம். தொழிலுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டிய ஊதியம் பெற வசதி உண்டு. வேலை யில்லாதவர்களுக்கும், வியாதிஸ்தருக்கும், விருந்தாப்பியருக்கும், கூடுமானவரை உதவி செய்ய வேண்டுமென்பதே அரசியலாரின் கொள்கை. விவசாயம், தொழில், வியாபாரம், எல்லாம் பெருகும்போது மக்களது செல்வநிலை உயரும். சராசரி வருமானமும் உயர்ந்து வாழ்க்கைத் தரமும் மேலோங்கி நிற்கும்.

விலைவாசி ஏற்றம்

மக்கள் வாழ்க்கையில் வருவாய்க்கும் செலவிற்கும் சரிக்கட்ட முடியாத நெருக்கடி நிலைமை சில வருஷங்களாகவே ஏற்பட்டுவிட்டது. வாழ்க்கைக்கு அவசியமான பொருள்களின் விலைகள் வெகு அதிகம் உயர்ந்துவிட்டன.

1939 ஆண்டின் விலை அளவு மட்டத்தை 100 என்று வைத்துக் கொண்டு விலை ஏற்றத்தை கவனிப்போம் :

நகரம்	பொது	உணவு மாத்திரம்
டில்லி	344	300
பம்பாய்	288	311
கல்கத்தா	339	451
சென்னை	315	360
நாகபுரி	390	379
கான்பூர்	471	514

சென்ற 15 ஆண்டுகளுக்குள் விலைவாசி எவ்வளவு உயர்ந்திருக்கிறது என்பது விளங்கும். செலவு இனம் மாத்திரம் இவ்வளவு ஏறிவிட்டபோது உழைப்பாளிகளின் வரவு இனமும் இதற்கு நிகராக உயர வேண்டியது நியாயமே யாகும். 1939ல் தினசரி ஒரு ரூபாய் ஊதியத்திற்கு உழைத்த ஆள் இப்போது நான்கு ரூபாய் தினசரி சம்பாதிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆனால் ஊதியம் அவ்வளவு பெருகவில்லை.

இதர நாடுகளிலும் இதே மட்ட அளவுக்கு ஏற்றம் காண்க :

	பொது	உணவு மாத்திரம்
இந்தியா	286	305
ஆஸ்திரேலியா	148	148
கானடா	153	189
எகிப்து	281	299
இரான்	773	781
ஜப்பான்	369	323
பிரிட்டன்	108	108
U. S. அமெரிக்கா	167	200

விலைவாசி ஏற்றம் நமது நாட்டில் தான் ஓரேயடியாக ஏறிவிட்டது என்று சிலர் எண்ணலாம். ஆனல் இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் எங்கும் விலைவாசி ஏற்றம் அதிகரித்துள்ளது புலப்படும். நம் நாட்டு நிலைமையை அநாவசியமாக மிகைப்படுத்திச் சொல்லத் தேவை இல்லை. பிரிட்டன் ஒரு நாட்டில் தான் விலைவாசி ஏற்றம் மிகவும் குறைவாக இருக்கிறது. அந் நாட்டு மக்கள் கட்டுப்பாடுகளுக்குத் தாமே மனமுவந்து உட்பட்டு, உற்பத்தியையும் உணவுப் பங்கீட்டையும் மிகவும் நேர்மையாக அனுசரித்து வருகின்றனர்.

விலைவாசி ஏற்றத்தால் மக்கள் கஷ்டப்படாமல் வசிப்பதற்குத் தொழில்கள் பெருகவேண்டும். தொழிலாளியின் ஊதியம் வீதாசாரப்படி உயர வேண்டும். தொழிலாளிகளுக்கு நியாயமான சம்பளம் விதிப்பது அவசியம். சுகவாழ்விற்கு அவசியமான ஊதிய விகிதம் நிர்ணயிப்பது அரசாங்கத் திட்டங்களில் முக்கிய

மானது. முதலாளிகளும் செல்வம் படைத்த சீமான்களும் இவ்வழியில் சர்க்காருடன் ஒத்துழைப்பது மிகவும் அவசியம் என்று வற்புறுத்தத் தேவையில்லை.

கல்வி வளர்ச்சி

குடியரசு சாஸனத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் இலவச ஆரம்பக் கல்வி அளிக்கப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. கட்டாயக் கல்வித் திட்டத்தை சிற்சில இடங்களில் மேற் கொண்டு இராஜ்ஜிய சர்க்கார்கள் நடத்துகிறார்கள்.

இதைத் தவிர குடியரசு ஸ்தாபிதமான 15 வருஷ காலத்திற்குள் இந்தியப் பிரஜைகள் யாவரும் எழுதப் படிக்கப் பயின்று, நாட்டுச் செய்திகளையும் உலக விஷயங்களையும் அறிந்து கொள்ளத் திறமை பெற வேண்டும் என்பது அரசியல் திட்டத்தின் முக்கிய குறிகோள்களில் ஒன்றாகும்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் ஆரம்பக் கல்வி பிரபலமாக அமைந்து நிலைபெறும் முன்னரே ஹைஸ்கூல், கல்லூரிக் கல்வியை விஸ்தரிக்கத் தொடங்கி விட்டனர். இனி உடனடியாக ஆரம்பக் கல்வி பெருகத் திட்டமிட வேண்டும். பல கோடி ரூபாய் செலவிட்டாலன்றி நாட்டில் உள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசக் கல்வி அளிக்க வசதி ஏற்படாது. சுமார் 8 கோடி இளைஞர்களுக்கு கல்வி வசதி வேண்டும்.

பிள்ளைகள் கல்வி கற்கும்போதே ஒரு வாழ்க்கைத் தொழிலிலும் பயிற்சி பெறுவது அவசியம். மகாத்மா காந்தியும் இதை வற்புறுத்தினார். ஆனால் எல்லா ஆரம்பக் கல்வியிலும் இவ்வித பயிற்சி தருவதற்கு

வசதியில்லை. தற்பொழுதுள்ள பள்ளிக் கல்வியில் உடல் உழைப்புக்கு அதிக வசதியும் அவசியமும் இல்லாம லிருக்கிறது. உழைத்து உற்பத்தித் தொழில்களில் பாடு படுவதற்கு மக்கள் முன் வருவது இல்லை. இதை நிவர்த் திக்கவே கல்வித் திட்டத்தில் உடல் உழைப்பு கலந்து இருக்கவேண்டும் என்று இப்போது முயற்சி செய்து வருகிறார்கள்.

சென்ற ஆண்டில் சென்னை சர்க்கார் தொடங்கிய சீர்திருத்தக் கல்வித் திட்டத்தில் பிள்ளைகள் பள்ளியில் அரைநாள் புத்தகப் படிப்பும் மிகுதி அரைநாள் தமது பெற்றோர்கள் கண்காணிப்பில் அவர்களது தொழில் களில் பயிற்சி பெறவும் எதிர்பார்க்கப் பட்டது. தின மும் ஒருவேளை ஒரு பகுதிப் பிள்ளைகளும் மற்றொரு வேளை இன்னொரு பகுதி பிள்ளைகளும் படிப்பு வசதி பெறஇடம் உண்டு. தற்சமயம் கிடைத்துள்ள இடவசதி யைப் பயன்படுத்தி இரண்டுமடங்கு பிள்ளைகள் படிக்க லாம். ஆனால் தொழில் பயிற்சிக்குத்தான் வசதியான திட்டம் ஒன்றும் காணமுடியவில்லை. தினமும் பிள்ளைகள் அரைநாளை வீணாக்க ஏதுவாகிறது. இவ்வருஷம் இத் திட்டத்தைக் கைவிட்டு முன்போலவே முழுதினப் பள்ளிகளே நடைபெறுகின்றன. ஆயினும் கல்வித் திட்டத்தில் திருப்தியானதொரு வழி அமைப்பது அவசியமென்று சர்க்கார் உணர்ந்துள்ளர். கூடிய சீக்கிரம் இதுவும் செய்து முடிப்பார்கள் என எதிர்பார்க்கிறோம்.

1950 வருஷ கணக்குப்படி சென்னை இராஜ்ஜியத் தில் மாத்திரம் 40,870 கல்வி ஸ்தாபனங்கள் இருந்தன. அவற்றில் 31,34,321 பிள்ளைகளும், 16,03,118 பெண் களும் (ஆக மொத்தம் 47,37,349) கல்வி பயின்றனர்.

இதற்கான செலவு சுமார் 12 கோடி ரூபாய். கல்வி கற்கும் வயதை எட்டிய சுமார் 1¼ கோடி இளைஞர்களில் இப்போது ½ கோடி பிள்ளைகளே பள்ளிப் படிப்பு பெறுகிறார்கள். மிகுதி பிள்ளைகளுக்கும் கல்வி வசதி ஏற்பட வேண்டும். அப்பொழுதுதான் எல்லா மக்களுக்கும் குறைந்த அளவிலாவது கல்வியறிவு ஏற்பட வசதி உண்டாகும்.

இதைத் தவிர வயது வந்தவர்களில் எழுதப் படிக்கத் தெரியாதவருக்கு முதியோர் கல்வித் திட்டமென்று வகுக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் இராஜ்ய சர்க்கார் அநேக இடங்களில் முதியோர் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி, மக்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுக்கின்றனர். எழுதப் படிக்கக் கற்றுக் கொள்வது சமூகக் கல்வியில் ஒரு பகுதியேயாகும். இக்கால விஞ்ஞான முன்னேற்றம், புதிய வைத்திய முறைகள், உலகப் பொது விஷயங்கள், ஜனநாயக சமூகப் பண்பாடு, கூட்டுறவுத் தொழில் முறைகள் முதலிய பல பகுதிகளும் சமூகக் கல்வியில் சேர்ந்துள. முக்கியமாக சுதந்திரக் குடியரசுநாடு ஆனபிறகு நமது மக்கள் வாழ்வில் புதியதொரு தெம்பும் பெருமையும் ஏற்பட வேண்டும். இதுவே சமூகக் கல்வியின் அடிப்படை நோக்கம்.

இவ்வசதிகளைத் தவிர இந்தியாவிலேயே நம் இராஜ்ஜியத்திற்கென சிறப்பான ஒரு வசதி இருக்கிறது. அதுதான் 1948ம் வருஷத்தில் அமுலுக்கு வந்த புத்தகாலயத் திட்டம். இத்திட்டத்தின்படி நம் இராஜ்ஜியத்திலுள்ள மக்கள் எல்லோரும் கற்ற கல்வியை மறவாது இருக்கவும், அதை மேலும் விருத்தி செய்துகொள்ளவும் உதவியாக இருக்கும்படி புத்தகாலய வசதிகள் ஏற்படும்.

1952-ம் வருஷத்தில் சுமார் 3000 புத்தகாலயங்கள் தொண்டாற்றி வருகின்றன. சுமார் பத்து லட்சம் மக்கள் புத்தகாலயங்களை உபயோகிக்கின்றனர். நமது இராஜ்ஜிய சர்க்கார் அவைகளுக்கு மான்யமாக அளித்த தொகை ரூ. 2,72,000.

தபால், தந்தி, டெலிபோன்

குடியரசு மத்திய சர்க்கார் நிர்வகித்து நடத்தும் வருமான இனங்களில் தபால், தந்தி இலாகா முக்கிய மானது.

1952 மார்ச்சு 31 தேதி கணக்குப் பிரகாரம் இந்தியாவில் 42084 தபால் ஆபீசுகள் உள. சென்ற ஒரு வருஷத்தில் மாத்திரம் 5000 புதிய ஆபீசுகள் ஏற் படுத்தப்பட்டன. குடியரசுக்கு முன் இருந்ததைவிட இப்போது தபால் வசதி சுமார் இரண்டு மடங்கு அதிகம். 2000 ஜனங்கள் உள்ள ஒவ்வொரு கிராமத் திலும் ஒரு தபால் ஆபீஸ் ஏற்படுத்தத் திட்டமிட்டு இருக்கிறார்கள். தபால் தந்தி வகையில் சுமார் 50 கோடி ரூபாய் வருமானம் உண்டு.

இதர நாடுகளுடன் ஒப்பிடுதல் (1947 கணக்குப்படி)

	தபால் ஆபீசுகள்	தந்தி ஆபீசுகள்	டெலி. நிலை யங்கள்	கடிதங்கள்	தந்திகள்
இந்தியா	23314	7761	120000	225 கோடி	2·7 கோடி
ஆஸ்திரேலியா	8714	9426	905000	122 ,,	3·4 ,,
கானடா	12033	4707	2026000	146 ,,	2·1 ,,
தெ. ஆப்பிரிக்கா	3390	3444	164000	90 ,,	1·2 ,,
பிரிட்டன்	24000		4275000	758 ,,	6·7 ,,
U.S. அமெரிக்கா	41751	18238	3485700	456 ,,	23·4 ,,

தபால் தந்தி வசதிகள் பெருகுவதால் வியாபார முன்னேற்றம் அதிகமாகும்.

வானொலி

இந்தியாவில் வானொலி பரப்பும் நிலையங்கள் 28 உண்டு. லைசென்ஸ் பெற்ற (ரேடியோக்கள்) சுமார் 6 லட்சம். லைசென்ஸ் மூலமாக சர்க்கார் வருமானம் சுமார் 84 லட்சம். லைசென்ஸ் பெற வருஷ கட்டணம் ரூ. 15/-. சராசரி 800 பேருக்கு ஒருரேடியோ இருக்கிறது. பள்ளிச்சாலையில் ரேடியோ இருந்தால் வருஷ லைசென்ஸ் ரூ. 3 தான். வானொலி நிலையங்கள் மத்திய சர்க்கார் நிர்வாகத்திலிருக்கின்றன. சில நாடுகளில் உள்ள வானொலி நிலையங்கள் :—

இந்தியா	28
ஆஸ்திரேலியா	138
சிலோன்	2
பிரான்சு	59
ஜப்பான்	58
தெ. ஆப்பிரிக்கா	8
பிரிட்டன்	43
ஐக்கிய அமெரிக்கா	2972

அமெரிக்கா, பிரிட்டன் நாடுகளில் இப்போது டெலிவிஷன் (ரேடியோவிலேயே பேச்சுடன் காட்சியும் காணும்) வசதிகள் பெருகி வருகின்றன.

கூட்டுறவு (கோ ஆபரேஷன்)

கூட்டுறவு இயக்கத்தில் இந்தியா மிகவும் முன்னேற்றம் பெற்றுள்ளது. 50 வருஷ காலமாக கூட்டுறவுச் சங்கங்கள் உழைத்து வருகின்றன. இவைகள்

பெரும்பாலும் மெம்பர்களுக்குக் கடன் கொடுத்து உதவும் சங்கங்கள். பொதுவாக நான்கு கிராமங்களுக்குச் சராசரி ஒரு சங்கம் இருக்கிறது.

1948-ல் சுமார் 15 லட்சம் சங்கங்கள் இருந்தன. அவற்றின் மொத்த மூலதனம் சுமார் 175 கோடி ரூபாய். ஒரு மெம்பருக்கு கிடைக்கக் கூடிய அதிகப்பட்ட உதவித் தொகை சராசரி 170 ரூபாய். இவைகளில் 70% கிராமச் சங்கங்கள் ஆகும். நில அடமான பாங்கு, பொருள்கள் வாங்குவோர் சங்கங்கள், வியாபார (**Marketing**) சங்கங்கள், சிறு நிலப் பகுதிகளை கூட்டும் சங்கங்கள், நிலமீட்சி, புதிய குடியேற்றம், வீடு கட்டுதல், மீன் பிடிப்போர், குடிசைத் தொழில் என்றவாறு பற்பல துறைகளில் கூட்டுறவு சங்கங்கள் பாடுபடுகின்றன.

இந்தியாவிலும் சில இதர நாடுகளிலும் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் விவரம் (1945 கணக்கு) கீழ்கண்ட அட்டவணையில் காண்க.

	சங்கங்களின் எண்ணிக்கை	மெம்பர்கள் (ஆயிரக் கணக்கில்)	ஒரு சங்கத்தின் சராசரி மெம்பர்கள்
இந்தியா	149768	10117	68
பர்மா	10066	3500	348
சிலோன்	6567	1157	176
சீனு	167340	23695	142
ஜப்பான்	38600	9250	239
பிலிப்பைன்ஸ்	1065	257	241

இந்தியாவில் இவ்வளவு சங்கங்கள் இருந்தபோதி லும் கூட்டுறவு வழியில் விவசாயம் முதலிய உற்பத்தித் தொழில்களில் அவைகள் இன்னும் அதிகமாக ஈடுபட வில்லை. சமீபகாலத்தில்தான் கைத்தறி நெசவாளர், தேனீ வளர்ப்போர், நாட்டு வெல்லம் காய்ச்சுவோர் முதலிய தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் நிறுவித் தொழில் விருத்தி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இன்னும் பலவித தொழில் துறைகளில் கூட்டுறவு அதிகமாகி உற்பத்திப் பொருள்கள் பெருகுவது அவசியம்.

*1953-54*ல் இந்தியாவில் கூட்டுறவு சங்கங்கள் அபி விருத்தி விவரங்களைக் காண்க :

	1947	1953
கிராமாந்திர சங்கங்கள்	17057	26850
விவசாய சங்கங்கள்	11375	11720
மார்க்கெட்டிங் சங்கங்கள்	193	286
பால் சங்கங்கள்	290	781
நெசவாளர் சங்கங்கள்	659	1191
	29574	40828

சென்னை இராஜ்ஜியத்தில் கூட்டுறவு சங்கங்கள் மிகவும் சிறப்பாக உழைத்து வருகின்றன.

இவ்வளவு அதிகரித்தும் கிராம மக்களில் இன்னும் கால் பங்குகூட கூட்டுறவு இயக்கத்தில் சேரவில்லை. ஆயினும் பல துறைகளில் கூட்டுறவு இயக்கம் நல்ல பயன் அளித்து வருகிறது. உணவு உற்பத்தியிலும், கொள் முதலிலும், சீராக விநியோகிப்பதிலும் சங்கங்கள்

உதவுகின்றன. வாழ்க்கை புனர்நிர்மாண வேலையிலும் இவைகள் உழைக்கின்றன. நெசவாளர் கூட்டுறவு சங்கங்கள் திருப்தியாக வேலை செய்கின்றன. சுமார் $1\frac{1}{2}$ லட்சம் கைத்தறிகள் இச் சங்கங்களில் ரிஜிஸ்தர் செய்யப்பட்டுள. கூட்டுறவு விவசாயப் பண்ணைகள் இன்னும் அதிகம் விருத்தியடைய வேண்டும்.

பாங்க்

1949-ல் இந்திய ரிசர்வ் பாங்க் தேசியமாக்கப் பட்டது. சர்க்கார் செலாவணி முழுவதும் பாங்கி வசம் ஒப்படைக்கப்பட்டது. ஜனங்கள் நடைமுறைப் புழக்கத் திற்கு வேண்டிய (பண) நோட்டுகளை அச்சிடுவதும், நாணயங்களை உற்பத்தி செய்வதும் ரிசர்வ் பாங்கின் பொறுப்புகளில் ஒன்ருகும். அச்சிடும் நோட்டு மதிப்பில் 40% முன் ஜாக்கிரதைக்கு வேண்டி காப்பு நிதியாகக் கைவச ரொக்கம் எப்போதும் இருக்க வேண்டும். இதைத் தவிர நாட்டில் உள்ள இதர பாங்குகளுக்கும் கண்காணிப்பு உதவி செய்வதும் ரிசர்வ் பாங்கின் வேலை.

ரிசர்வ் பாங்கின் மூலதனம் 40 கோடி ரூபாய். 5 லட்சம் மூலதனம் உள்ள இதர பாங்குகள் 72 (ஷெடியுல் பாங்குகள்) ரிசர்வ் பாங்கியுடன் லேவா தேவி செய்கின்றன. இவைகளைத் தவிர மற்றும் 60 (ஷெடியுல் அல்லாத) பாங்குகளும் கிளை ஆபிசுகளும் இந்தியாவெங்கும் சுமார் 5000 உள.

இன்ஷியுரன்ஸ்

எதிர்பாராமல் திடீரென ஆபத்து நேரிடும் காலங் களில் உடனடியாக ரொக்க உதவி கிடைப்பதற்கு

வேண்டிய ஏற்பாடுகளும் இன்ஷியுரன்ஸ் திட்டத்தில் உண்டு. ஆனால் ஆயுள் இன்ஷியுரன்ஸ் ஒன்றையே பெரும்பாலும் ஜனங்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். அதாவது குடும்பத் தலைவன் இறந்து விட்டால் அவர் மனைவி மக்களுக்கோ அல்லது உறவினருக்கோ இன்ஷியுரன்ஸ் தொகை கிடைக்கும். இன்ஷியுர் செய்வது முன் ஜாக்கிரதையுள்ள காப்பு வழி. மக்கள் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு இந்தக் காப்பு வழியை எல்லா ஜனங்களும் பின்பற்ற வேண்டும்.

சமீப காலமாகத்தான் இந்தியாவில் இன்ஷியுரன்ஸ் ஏற்பட்டுள்ளது. ஆரம்ப நிலையில் அயல் நாட்டு கம்பெனிகள் இந்தியாவில் அதிக இடம் பிடித்திருந்தன. ஆனால் இப்போது வரவர இது குறைந்து விட்டது.

1948ல் இந்திய இன்ஷியுரன்ஸ் கம்பெனிகள் சுமார் 200 இருந்தன. இவைகள் பெரும்பாலும் ஆயுள் இன்ஷியுரன்ஸ் கம்பெனிகளே. சுமார் 35 லட்சம் பாலிஸிதார்களே இருந்தனர். இன்ஷியூர் செய்து கொண்டு மாதாமாதம் அல்லது வருஷா வருஷம் பணம் கட்டுபவர்கள் பாலிஸிதார்கள் எனப்படுவார்கள். இவர்கள் கட்டும் வருஷத் தொகை சுமார் 36 கோடி ரூபாய்.

இதர நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் நமது நாட்டில் இன்ஷியுரன்ஸ் திட்டம் இன்னும் பன்மடங்கு அபிவிருத்தி ஆகவேண்டும் மென்பது நன்கு புலன் ஆகும்.

ஆயிரம் ஜனத்தொகைக்கு இன்ஷியுரன்ஸ் செய்த வர்கள் :—

நாடுகள்	நபர்கள்	ஒவ்வொரு வருஷமும் இன்ஷியுர் செய்த வர்கள்
ஐக்கிய அமெரிக்க நாடுகள்	276	3418
பிரிட்டன்	155	5308
இந்தியா	7	2213

பிரயாண வசதிகள்

பிரயாணத்திற்கும் வியாபாரப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கும் சாலைகளும் வாகன வசதிகளும் இந்தியாவில் இன்னும் ஏராளமாகப் பெருக வேண்டியது அவசியம். ரயில் பாதைகள் ஓரளவு பெருகி உள்ளன. அவைகளை இன்னும் அதிகரிக்க திட்டமிடப் பட்டிருக்கிறது. உள்நாட்டுக் கால்வாய்கள், கடல் ஓரப் பிரயாண வசதிகள், ஆகாயப் பிரயாண வசதிகள், இவை சமீப காலத்தில் விருத்தியடைந்து வருகின்றன.

சாலைகள்

முன்னாட்களில் இந்தியாவில் பற்பல தனி இராஜ்ஜியங்கள் இருந்தபோதிலும் நாடு முழுவதுக்கும் பயன் படும்படி, வசதியான நீண்ட பெருஞ்சாலைகளும் சில இருந்தன. ஏனெனில் ஜனங்கள் அடிக்கடி புண்ணிய தீர்த்தங்களில் நீராடவும், விசேஷ கோவில்களை தரிசிக்க

வும் பிரயாணம் செய்வார்கள். மேலும் வியாபாரச் சரக்குகள் எடுத்துச் செல்லவும், அரசனது சேனைகள் துரிதமாகப் பிரயாணம் செய்யவும், சாலைகள் அவசியமாக இருந்தன. ஆதலால் பிரதான நகரங்களையும் க்ஷேத்திரங்களையும் இணைத்து சாலைகள் கட்டப்பட்டன.

தென் இந்தியாவிலும் சோழ மன்னர்கள் காலம் முதல் சாலைகள் கவனிக்கப்பட்டுவந்தன. ராமேஸ்வரம் செல்லும் சாலை முக்கியமாக கவனிக்கப்பட்டது.

குடியரசு ஸ்தாபிதமான பிறகு சாலைகளைப் பற்றிய கவனம் அதிகரித்துவிட்டது. இப்பொழுது உள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்கும் புதிய சாலைகள் அமைப்பதற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது. 1943ல் 450 கோடி ரூபாய் செலவில் 4 லட்சம் மைல் சாலைகள் அமைக்க வேண்டும் என்ற ஒரு 20 வருஷ திட்டம் வகுக்கப்பட்டது. இப்போது சுமார் 14,000 மைல் நீளம் பெருஞ் சாலைகள் (**Trunk Roads**) உபயோகத்திலிருக்கின்றன. இவைகள் டில்லி தலைநகரிலிருந்து நாட்டின் நாலாபுறங்களுக்கும் செல்கின்றன. மேற்கே—டில்லி, அமிருதசரஸ், பாகிஸ்தான் எல்லைவரை ; கிழக்கே—டில்லி, ஆக்ரா, கான்பூர், கல்கத்தாவரை; தெற்கே—டில்லி, நாக்பூர், பம்பாய் இவைகளுடன் சேரும் கிளைப் பாதைகளும் பெருஞ் சாலைகளாம். கட்டாக், விசாகப்பட்டினம், ராஜமகேந்திரி, விஜயவாட வழியாக கல்கத்தாவிலிருந்து சென்னை ; சென்னையிலிருந்து பம்பாய், பங்களூர், திருவனந்தபுரம், மதுரை வரை ; பனரசிலிருந்து (காசி) குமரிமுனை வரையில் செல்லும் சாலைகள் முக்கியமானவை. இவைகளை மத்திய சர்க்கார் ஏற்று நடத்தும்.

அகில இந்திய டிரங்கு சாலைகளைத் தவிர இராஜ்ஜியங்களில் மோட்டார்கள் பஸ்ஸுகள் பிரயாணத்திற்கு வசதியான கப்பி ரோடுகள் சுமார் 18,000 மைல் நீளம். இவைகளைத் தவிர நகரங்களில் உள்ள முனிசிபல் சாலைகள் சுமார் 2½ லட்சம் மைல். மோட்டார் பிரயாணத்திற்கு மண் சாலைகள் அநேகமாக ஒவ்வொரு இராஜ்யத்திலும் உண்டு. இவைகளின் மொத்த நீளம் சுமார் ஒரு லட்சம் மைல்.

சாலைகளைத் துரிதமாக அதிகரித்து உதவுவதால் வியாபாரம் நன்கு பெருகும். உற்பத்திப் பொருள்கள் பங்கீடும் சுலபமாகும். இதை உணர்ந்தே குடியரசு சர்க்கார் சாலை அபிவிருத்தி திட்டத்தையும் முன்னணியில் வைத்து கவனிக்கின்றனர். ஐந்து ஆண்டு திட்டத்திலும் சமுதாய அபிவிருத்தி திட்டங்களிலும் சாலைகளை விருத்தி செய்வது மிகவும் முக்கியமான அம்சமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவிலும், இதர சில நாடுகளிலும் உள்ள சாலைகளைப்பற்றிய சில புள்ளி விவரங்களைக் காண்க:—

நாடுகள்	சாலைகள் மொத்த நீளம் (மைல்)	ஆயிரம் ச.மை. நிலப்பரப்பில் சராசரி நீளம் (மைல்)	ஒரு லட்சம் ஜனத்தொகைக்கு சாலை நீளம் (மைல்)
இந்தியா	2460000	201	73
ஆஸ்திரேலியா	5005000	168	6602
பர்மா	105000	40	62
கானடா	5534000	160	4398
சீனு	814000	22	18
பிரிட்டன்	1836000	2070	381
ஜப்பான்	5675000	3988	728
U. S. அமெரிக்கா	30454000	1008	2114

மேற்கண்ட இதர நாடுகளுடன் இந்தியாவை ஒப்பிட்டுப் பார்த்தால், ஒவ்வொரு லட்ச ஜனங்களுக்கும் 73 மைல் நீள சாலைகள் உள. சராசரி ஆயிரம் சதுர மைல் விஸ்தீரணத்தில் 201 மைல் நீளம் சாலைகளே உள. இதிலிருந்து எவ்வளவு துரிதமாக நம் நாட்டில் சாலைகளின் பெருக்கம் ஏற்படவேண்டும் என்பது விளங்குகிறதல்லவா ?

மோட்டார் வண்டிகள்

1948ல் இந்தியாவில் ரிஜிஸ்டர் (பதிவு) ஆகியிருந்த மோட்டார் வண்டிகள் 2 லட்சம். இதில் சுமார் 40 ஆயிரம் 1948ல் இறக்குமதி செய்யப்பட்டவை. 1948ல் சுமார் $2\frac{1}{2}$ லட்சம் சைகில் வண்டிகள் இறக்குமதியாயின.

இந்தியாவிலும் இதர சில நாடுகளிலும் ரிஜிஸ்டர் செய்யப்பட்ட மோட்டார் வண்டிகளின் கணக்கு கீழ் கண்ட அட்டவணையில் ஆயிரக் கணக்கில் கொடுக்கப் பட்டிருக்கிறது.

நாடுகள்	மொத்த எண்ணிக்கை	பிரயாண வண்டி	வியாபார வண்டி
இந்தியா	200	116	84
ஆஸ்திரேலியா	926	550	376
கானடா	1840	1370	440
சிலோன்	34	23	11
ஜப்பான்	109	20	89
தெ. ஆப்பிரிக்கா	447	352	95
பிரிட்டன்	2723	1996	727
U. S. அமெரிக்கா	37361	30719	6642

வியாபாரம் விருத்தி ஆவதற்கு துரிதப் பிரயாண சாதனங்கள் அவசியம். அவைகளில் மோட்டார் வண்டிகளே முக்கியம். இந்தியாவில் இந்த வசதி இன்னும் அதிகமாவது அவசியம். அமெரிக்காவில் சொந்த மோட்டார் வண்டி வைத்துள்ளவர்கள் ஏராளமாயுண்டு. அமெரிக்கத் தொழிலாளிகள் கூடத் தம் மோட்டார் வண்டிகளை சொந்த உபயோகத்திற்கு வைத்திருக்கிறார்கள்.

ரயில் வண்டிகள்

1853-ல் இந்தியாவில் முதல் ரயில் வண்டி ஓடத் தொடங்கியது. அப்பொழுது சுமார் 190 மைல்களுக்கே ரயில் பாதை அமைக்கப்பட்டது. இப்பொழுது இருக்கும் ரயில்வேக்களின் மொத்த நீளம் 34,000 மைல்.

ஆரம்பத்தில் அயல் நாட்டார் மூலதனம் போட்டு, கம்பெனிகள் ஸ்தாபித்து, ரயில் பிரயாணத்திற்கு உதவினர். பிறகு சிறுகச் சிறுக இந்திய அரசாங்கத்தாரே ரயில்வே நிர்வாகத்தை முற்றிலும் ஏற்றுக்கொண்டனர். இப்போது இது நமது மத்திய அரசாங்க நிர்வாகத்தில் உள்ளது. மொத்த மூலதனம் 672 கோடி ரூபாய் ஆகும். வருஷ வருமானம் சுமார் 235 கோடி ரூபாய். அரசாங்க வருமான இனங்களில் ரயில்வே மிகவும் பிரதானமானது.

1951-க்கு முன்பு ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள ரயில்வே, அதை நடத்தும் ரயில் கம்பெனிகளின் பெயர்களையே கொண்டிருந்தது. தென் இந்தியா, மதராஸ் சதரன் மராட்டா, என்று எல்லாம் பெயர்கள்

உண்டு. இப்போது கம்பெனிகள் நீக்கப்பட்டமையால் இந்திய ரயில்வேக்கள் ஆறு பிராந்தியங்களாக பிரிக்கப் பட்டுள. வடக்கு, மேற்கு, மத்திய, தெற்கு, கிழக்கு, வடகிழக்கு என்று ஆறு ரயில்வே பிராந்தியங்கள் உண்டு. கிட்டத்தட்ட ஒவ்வொரு பிராந்தியத்திலும் 5000 முதல் 6000 மைல் ரயில்பாதைகள் உண்டு. தென்இந்தியா முழுவதும் தென் பிராந்திய ரயில் பகுதியாகும்.

அரசியல் துறையில் மிகுந்த லாபம் தரும் இனம் ரயில் நிர்வாகம் என்று குறிப்பிட்டோம். வருஷ சராசரி யாக நடைமுறை செலவு போக 20% சதவீதம் அதாவது 50 கோடிக்குமேல் லாபம் கிடைக்கும்.

சென்ற 5 வருஷ காலத்தில் லாபம் பெருகிவருவது கவனிக்க.

வருஷம்	மொத்த ரூபாய்கள் (லக்ஷங்கள்)
1948—49	4234
1949—50	3774
1950—51	4756
1951—52	5541
1952—53	5747

இந்த லாபத்தைப் பயன்படுத்தி தொழிலாளருக்கும் பிரயாணிகளுக்கும் வேண்டிய வசதிகளைப் பெருக்கவும், இன்னும் ரயில்வேக்களை அபிவிருத்தி செய்யவும் மத்திய சர்க்கார் திட்டம் செய்துள்ளனர்.

இப்பொழுது இதர நாடுகளுடன் இந்திய ரயில் வேயை ஒப்பிட்டுப் பார்ப்போம். 1950 கணக்குப்படி:

ரயில் பாதை (மைல்கள்)

அமெரிக்க ஐக்கிய நாடு		227244	
ரஷ்யா	...	57487	
கானடா	...	42336	இந்தியாவில் 72000
பிரான்சு	...	40348	ரயில்வே ஸ்டேஷன்
ஜெர்மனி	...	36256	கள் உள.
இந்தியா	...	33987	மூன்றும் வகுப்பு பிர
அர்ஜன்டினு	...	26710	யாணிகளிட மிருந்து
பிரேஸில்	...	21251	வருமானம் மொத்த
பிரிட்டன்	...	19863	வருமானத்தில் 90சத
மெக்ஸிகோ	...	14981	வீதம் ஆகும்.
சீனு	...	12960	
ஜப்பான்	...	12572	

ரயில்கள் ஒரு வருஷத்தில் சராசரி 10 கோடி பிரயாணிகளையும் 10 கோடி டன் சாமான்களையும் ஏற் றிச் செல்கின்றன. இதற்காக இவை இந்திய நிலக்கரி யில் வருஷம் 100 லட்சம் டன் உபயோகிக்கின்றன.

கர்கி—சிம்லா, டார்ஜீலிங், கூனூர் நீலகிரி, பம்பாய்-மாதாரன்—இந்நான்கும் மலைமேல் செல்லும் மார்க்கங் கள். இங்கு காணக்கூடிய இயற்கைக் காட்சிகளை அனுபவிக்க பல ஜனங்கள் ஆண்டுதோறும் பிரயாணம் செல்வார்கள்.

கால்வாய்கள்

ஆறுகளும் நீர்ப்பாசன வாய்க்கால்களும் படகுப் போக்குவரத்துக்கு உபயோகப்படும். ரயில்வே அபிவிருத்தியால் கால்வாய்ப் பிரயாணம் குறைந்து

விட்டது எனலாம். கங்கை, யமுனை ஆற்றுக் கால்வாய்களில் படகுப் போக்குவரத்து உண்டு. வங்காளத்தில் படகுப் பிரயாணம் அதிகம். மலையாளக்கரையில் உள்ள கடல் உப்பங்கழிகள் படகுப் பிரயாணத்திற்கு மிகவும் உபயோகப்படுகின்றன.

இந்தியாவில் சுமார் 25,000 மைல் படகுப் பிரயாணவசதி உண்டு. இதில் 10,000 ஆறுகளிலும், 15,000 கால்வாய்களிலும் ஆக இருக்கும். படகுப் பிரயாண வசதிகள் இன்னும் வெகுவாகப் பெருகவேண்டும். ரயில் மார்க்கம் செல்லும் வியாபாரச் சரக்குகள் அளவில் 4 சதவீதம் படகு மார்க்கம் எடுத்துச் செல்லப்படுகிறது. பட்டினங்களுக்கிடையே கடற்கரையோரம் கப்பல் பிரயாண வசதிகள் இப்போது அதிகமாகியுள.

ஆகாயப் பிரயாணம்

1911-ல் ஆகாய விமானத்தில் இந்தியாவிற்கு முதன் முதல் ஒரு ஐரோப்பியர் பிரயாணம் செய்து வந்தார். 1925-ல் இந்தியாவிற்கு விமான சர்விஸ் தொடங்கியது. 1932-ல் இந்தியன் நேஷனல் ஏர்வேஸ் கம்பெனியை டாடா அண்ட் சன்ஸ் ஆரம்பித்தனர். இங்கிலாந்திற்கு தபால் எடுத்துச்செல்லும் கண்டிராக்ட் ஏற்றுக் கொண்டனர். அதன் பிறகு விமான சர்விஸ் நடத்தும் கம்பெனிகள் பல ஏற்பட்டன. 1952-ல் இந்தியாவில் 8 ஏர்சர்விஸ் கம்பெனிகள் உண்டு. இவைகளைத் தவிர 5 கம்பெனிகள் வழக்கமாக பிரயாணி சர்விஸ் நடத்தாவிடினும் தனி நபர் பிரயாணத்திற்கு விமானங்களை ஓட்டி வந்தன.

உலக முழுவதும் சுற்றிவர இப்போது ஆகாயப் பிரயாண சர்விஸ் வழக்கமாக நடைபெறும். 15 அயல்

நாட்டுக் கம்பெனிகள் விமான சர்விஸ் நடத்துகின்றன. ரயில் பிரயாணம் போலவே எல்லாவித செளகரியங்களும் உண்டு. புறப்படும் நேரம், வந்து இறங்கும் நேரம், ஜங்க்ஷனில் தங்கும் நேரம், விமானம் மாற்றுதல், உணவு ஏற்பாடுகள் முதலியன எல்லாம் திட்டப் பிரகாரம் நடைபெறும். இந்தியாவில் விமான மிறங்கும் இடங்கள் (air ports) 70 கட்டியிருக்கிறார்கள். இவைகளில் சிலவற்றில்தான் உலக விமானங்கள் நிற்கும். ஒவ்வொரு விமான ஸ்டேஷனிலும் $1\frac{1}{2}$ மைல் (அல்லது அதிக) நீளம் உள்ள செமண்டு பாதைகள் உண்டு. உயரக் கிளம்பு முன்னும், இறங்கி நிற்குமிடம் வரு முன்னும் கொஞ்ச தூரம் இந்தப் பாதையில் விமானம் ஓடவேண்டும்.

(டம்டம்) கல்கத்தா, (சாண்டாகுருஸ்) பம்பாய், (பாலம்) டில்லி இவைகள் உலக விமான ஸ்டேஷன்கள். (ஜுஹு) பம்பாய், டில்லி, சர்பாகம், சென்னை (மீனம்பாக்கம்), திருச்சிராப்பள்ளி, கோயம்பத்தூர், திருவனந்தபுரம், பங்களூர், அகர்தாலா, அஹமதாபாத், நாகபூர் இவைகள் எல்லாம் இந்தியா விமான ஸ்டேஷன்கள்.

இந்திய விமானக் கம்பெனிகளில் இரண்டு—பாரத் ஏர் வேஸ், ஏர் இந்தியா இண்டர்நேஷனல்—மாத்திரம் உலகப் பிரயாண சர்விஸ் நடத்துகின்றன. இதர கம்பெனிகள் இந்தியாவில் உள்நாட்டு பிரயாண சர்விஸ் நடத்தின.

இந்தியாவில் ஏர் சர்விஸ் நடத்தும் கம்பெனிகளை எல்லாம் ஒன்றாக்கி இந்திய சர்க்கார் தாமே இப்போது

விமானப் போக்குவரத்தை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். இந்தியன் ரயில்வேஸ் என்பது போலவே இந்தியன் ஏர்வேஸ் என்று விமான சர்வீஸ் நடத்துகிறார்கள். ரயில்வேக்களில் கிடைக்கும் அளவு இதிலும் லாபம் கிடைப்பதற்கு இன்னும் வெகு காலம் ஆகும்.

ஆகாயப் பிரயாணம் சுலபமாகி விட்டதால் தூரத்தையும் காலத்தையும் ஓரளவு மனிதன் வென்று விட்டான் என்று கருத வேண்டும். முன்னாட்களில் இந்தியாவிலிருந்து இங்கிலாந்து செல்ல மூன்று மாதம் பிடிக்கும். நீராவிக் கப்பல் உபயோகிப்பதற்குமுன் பாய் மரக் கப்பல் பிரயாணம் மிகவும் கஷ்டம். பிறகு சூயஸ் கால்வாய்வழி ஏற்பட்டபிறகு 20 நாட்களில் பிரயாணம் செய்யமுடிந்தது. ஆகாய விமானத்தில் இப்போது இரண்டு நாட்களில் பிராயணம் முடிகிறது. உலக முழுவதும் ஆறு நாட்களில் சுற்றி வந்து விடலாம்!

உள் நாட்டுத் தபால்கள் சென்னையிலிருந்து டில்லிக்கு மறுநாளே போய்ச் சேர்ந்துவிடும். பிரத்தியேக சார்ஜ் இல்லாமலே உள் நாட்டுத் தபால்கள் விமானம் மூலம் செல்கின்றன. சிறு பார்சல்களையும், அவசரமாக அனுப்ப வசதி உண்டு. வெளி நாட்டுத் தபால்களும் இவ்விதமே அதிசீக்கிரம் விமான மூலம் வருகின்றன.

விமானப் பிரயாணம் விருத்தியாக சர்க்கார் பல விதத்திலும் உதவி செய்கின்றனர். முக்கியமாக வானிலை ஆராய்ச்சியாளர் அவ்வப்போது அறிக்கைகள் வெளியிடுகிறார்கள். பிரயாணக் கட்டுப்பாடு விதிகளும்

உண்டு. இதர நாடுகளுடன் ஒப்பந்தங்களும் அவசியம். எல்லா நாடுகளும் ஒற்றுமையாக சில நிபந்தனைகளையும், நடைமுறை அனுஷ்டான விதிகளையும் ஏற்றுக் கொண்டு அவைகளை அனுசரிக்க வேண்டும். விமானங்களை ஓட்டுபவர்களும், என்ஜினீர்களும், ரேடியோ நிபுணர்களும் நன்கு பயிற்சி பெற்று, அனுபவம் அடைந்து, பரீக்ஷைகளில் தேறிய பிறகே வேலைகளை ஏற்றுக் கொள்ளவேண்டும். இவைகளை எல்லாம் கண் காணிக்கும் ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்திருக்கின்றனர். குடியரசு சர்க்கார் வேலைகள் இவ்வாறு பன் மடங்கு பெருகிவிட்டன.

---

14. கப்பல் வியாபாரம்

சில வருஷங்களுக்கு முன் கப்பல் வியாபாரம் முழுவதும் அந்நியர்—முக்கியமாக பிரிட்டிஷார்—வசமே இருந்தது. தமிழ் நாட்டில் வ. உ. சிதம்பரம் பிள்ளை முதன் முதலாக நம் நாட்டு வாணிபம் இந்தியக் கப்பல்கள் மூலமே இயங்கவேண்டுமென்று பாடு பட்டார். கப்பலோட்டிய சிதம்பரம் என்று தமிழ் நாடு அவரைப் போற்றும்.

1950ம் வருஷத்தில் 24 இந்தியக் கப்பல்கள் அயல் நாட்டு வியாபாரத்துக்கு பயன்பட்டன. இவை வருஷ மொன்றுக்கு 10 லட்சம் டன் சரக்குகள் ஏற்றிச் சென்றன. ஆனால் இது நமது அயல் நாட்டு வியா பாரத்தில் 5 சதவீதம் தான் ஆகும். இப்போது 24 கம்

பெனிகள் இந்தியக் கொடி தாங்கும் 108 கப்பல்களை வைத்துக் கொண்டு வியாபாரம் நடத்துகின்றன. இவைகளில் 3 கம்பெனிகள் மாத்திரம் அயல்நாட்டு வியாபாரத்திற்கு உதவுகின்றன. மற்றவை கடலோர மாக இந்திய வியாபாரம் செய்கின்றன.

கப்பல் ஓட்டும் ஆட்களின் பயிற்சி இடங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. போத்ரா, மேகலா இவ் விரண்டும் பயிற்சி தரும் கப்பல்கள். கல்கத்தா, விசாகப் பட்டினம் இவ்விரண்டு துறைமுகங்களிலும் பயிற்சிக் கூடங்கள் உண்டு. பயிற்சிக்குப் பிறகு பரிட்சை செய்து டிப்ளோமா, சர்டிபிகேட்டுகள் கொடுக்கப்படும்.

இந்திய கம்பெனிகளில் முக்கியமானது ஈஸ்டர்ன் ஷிப் கார்ப்பரேஷன் என்ற ஸ்தாபனம். பல கோடி ரூபாய்கள் மூலதனம் வைத்து இது ஆரம்பிக்கப்பட்டது. இதன் ஏஜெண்டுகள் சிந்தியா ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி.

விசாகப்பட்டினத்தில் கப்பல் கட்டும் தொழில் நடைபெறுகிறது. ஒரு கப்பல் கட்ட இந்தியாவில் சராசரி 60 லட்சம் ரூபாய் பிடிக்கிறது. பிரிட்டினில் கட்டிக்கொண்டு வந்தால் 50 லட்சம் தான் ஆகும். அதிகப்படியான செலவுக்கு சர்க்கார் உதவி அளிக் கிறார்கள். கப்பல் கட்டும் தொழிலுக்கு வேண்டிய மூலதனத்தில் சர்க்கார் 2 பங்கும் சிந்தியா கம்பெனி ஒரு பங்கும் ஆக ஏற்றுக்கொண்டு உள்ளர்.

துறைமுகப் பட்டினங்கள்

பம்பாய், சென்னை, கல்கத்தா, விசாகப்பட்டினம், கொச்சி இவைகளே முதல்தரமான துறைமுகங்கள்.


பிரிவினையினால் கராச்சி துறைமுகம் பாகிஸ்தானைச் சேர்ந்துவிட்டது. அதற்கு பதிலாக கச் கடற்கரையில் இப்போது கண்டலா துறைமுகம் கட்டப்பட்டு வருகிறது.

முதல்தர துறைமுகங்களில் பெரிய கப்பல்கள் கரையோரம் வந்து நிற்க வசதி உண்டு. 5 லட்சம் டன் சரக்குகள் கையாள முடியும். மேற் குறிப்பிட்ட துறைமுகங்கள் பெரிய துறைமுகங்கள் (**Major Ports**). இவை மத்திய சர்க்கார் நிர்வாகத்தில் இருக்கின்றன.

கரையோரமாகப் பல சிறு துறைமுகங்கள் (**Minor Ports**) உண்டு. இவ்விடங்களில் கரையிலிருந்து சுமார் இரண்டு மைல்களுக்கு அப்பால் கப்பல்கள் தங்கி நிற்கும். சரக்குகளையும் பிரயாணிகளையும் படகுகள் ஏற்றிச் செல்ல வேண்டும். 226 சிறு துறைமுகங்கள் உள. இவைகளைக் கவனிப்பது அந்தந்த இராஜ்ஜிய சர்க்கார் பொறுப்பு. நாகப்பட்டினம், தூத்துக்குடி, தனுஷ்கோடி, ஆலப்புழை, கொல்லம் இவைகள் எல்லாம் சென்னை இராஜ்ஜியத்தில் உள்ள சிறு துறை முகங்கள். விசாகப்பட்டினம், கொச்சி இரண்டும் மத்திய சர்க்கார் நேரடி நிர்வாகத்திலுள்ளன.

சென்னை, பம்பாய், கல்கத்தா இம் மூன்றிலும் போர்ட்டு டிரஸ்டுகள் (**Port Trusts**) இருக்கின்றன. பெரிய துறைமுகங்களின் மூலதன மதிப்பு சுமார் 82 கோடி ரூபாயாகும்.

ஐந்து ஆண்டு அபிவிருத்தித் திட்டத்தைத் தவிர, துறைமுக அபிவிருத்தித் திட்டங்களும் உண்டு. இவ்வினத்திற்கு 25 கோடி ரூபாய் செலவிடத் திட்டம்.


கானடா
பஸிபிக் சமுத்திரம்
தென் அமெரிக்கா
பிரிட்டன்
ஐரோப்பிய நாடுகள்
சோவியத்
ஆப்பிரிக்கா
ருஷ்யா
ஜப்பான
இந்தியா
இலங்கை
இந்திய சமுத்திரம்
ஆஸ்திரேலியா

விசாகப்பட்டினம் கப்பல் கட்டும் வகையில் மாத்திரம் $2\frac{1}{2}$ கோடி ரூபாய். எல்லாத் துறைமுகங்களிலும் வருஷம் $2\frac{1}{2}$ கோடி டன் சரக்குகள் கையாளவும், சுமார் 7000 கப்பல்கள் வரத்துப் போக்கு வசதி செய்யவும் அபி விருத்தித் திட்ட உத்தேசம்.

1951-ம் ஆண்டில் எல்லாத் துறைமுகங்களிலும் பதிவு செய்யப்பட்ட சாமான்களின் எடை 7,57,000 டன். அதில் 6,36,000 டன் சொந்தக்காரரிடம் ஒப் படைக்கப்படுகிறது. இச் சாமான்களில் பத்தில் 5 பங்கு பிரிட்டனிலிருந்தும், ஒரு பங்கு இந்தியப் பிரதேசத்தி லிருந்தும், மற்றும் ஒரு பங்கு அமெரிக்காவிலிருந்தும் எஞ்சிய மூன்று பங்கு இதர நாடுகளிலிருந்தும் வந்தவை யாகும்.

---

15. ஏற்றுமதி, இறக்குமதிப் பொருள்கள்

இந்திய வியாபாரத்தில் 85% கப்பல் மூலம் வெளி நாட்டு வியாபாரமும், 15% தரைமார்க்க உள்நாட்டு வியாபாரமும் ஆகும். மொத்த வியாபார வருமானம் சுமார் 1000 கோடி ரூபாய்.


சணல், பஞ்சு, டீ, தோல் ஏற்றுமதிப் பொருள் களில் முக்கியமானவை. இறக்குமதிப் பொருள்களில் முக்கியமானவை இயந்திரங்கள், பருத்தி, மண் எண் ணெய், உலோகங்கள், உணவு தானியங்கள்.

நம் நாட்டிலிருந்து ஏற்றுமதியாகும் பொருள்களை அடையும் நாடுகளை படத்தில் காணலாம்.


இந்த வியாபாரத் துறையில் நாம் இன்னும் எவ்வளவு முன்னேற வேண்டும் என்பதை கீழ்க்காணும் அட்டவணை காட்டுகிறது.

வியாபார விகிதம்	ஒரு நபர் மதிப்பு அளவு (ரூபாய் கணக்கில்).		
	இறக்குமதி	ஏற்றுமதி	மொத்தம்
இந்தியா	18	13	31
ஜப்பான்	28	11	39
ஈஜிப்டு	112	100	212
சிலோன்	140	142	282
பிரான்சு	257	170	427
ஸ்விட்ஸர்லாண்ட்	831	573	1407
பிரிட்டன்	554	438	992
கானடா	676	793	1473
U. S. அமெரிக்கா	161	281	442
ஆஸ்திரேலியா	525	706	1231

ஏற்றுமதி



இறக்குமதி



இந்திய வியாபாரம்

	ஏற்றுமதி	இறக்குமதி
(a) ஆக்கப் பொருள்கள்	55%	57%
(b) கச்சாப் பொருள்கள்	24%	25%
(c) உணவு, பான வகைகள், புகையிலை	21%	18%

மற்றும் சில விவரங்களையும் கீழே காணலாம்

ஏற்றுமதிப் பொருள்கள்	மதிப்பு ரூ. கோடிகணக்கில்		வாங்கும் நாடுகள்
டீ	65	...	பிரிட்டன் முக்கிய நாடு
புகையிலை	9	...	பிரிட்டன், எகிப்து
மிளகு	3	...	
முந்திரி	5	...	அமெரிக்கா ஐக்கிய நாடுகள்
நிலக்கடலை	3	...	
எண்ணெய்கள்	10	...	
அரக்கு	7	...	
மங்க்னிஸ்	2	...	பிரிட்டன்
மைக்கா	6	...	
நிலக்கரி	4	...	பாகிஸ்தான், சிலோன்
தோல்	15	...	அமெரிக்கா ஐக்கிய நாடுகள், பிரிட்டன்
சணல், சாக்கு, துணி	170	...	
கம்பளம்	3	...	
பருத்தி, நூல், ஆடை வகைகள்	50	...	
பட்டு	5	...	
கயிறு, பாய்	2	...	
ரப்பர்	1½	...	

இறக்குமதி பொருள்கள்	மதிப்பு ரூ. கோடிகணக்கில்
உணவு தானியங்கள்	65
பால்பொடி, பழங்கள், பானம்	14
பாக்கு, கிராம்பு வகையன	3
சிகார் - சிகரேட்டுகள்	3
உப்பு	2
மண்ணெண்ணெய்	7

இறக்குமதி பொருள்கள்	மதிப்பு ரூ. கோடிகணக்கில்
வண்டி எண்ணெய், பெட்ரோலியம்	20
தேங்காய் எண்ணெய்	1
பஞ்சு, நூல் ஆடை வகையறு	75
கம்பளம்	10
செயற்கைப் பட்டு	14
தேக்கமரம்	4
உரங்கள்	5
மருந்துகள்	8
ரசாயனப் பொருள்கள்	20
இரும்பு சாமான்கள், ஆயுதங்கள்	15
எந்திரங்கள்	30
கடிகாரங்கள்	3
உலோகங்கள்	30
எலக்டிரிக் சாமான்கள்	12
மோட்டார், பஸ், லாரி	18
சாயங்கள்	12
காகிதம், அட்டைகள்	12
கண்ணுடி	2

16. தேசிய வருமானமும் அரசாங்க வரவு செலவும்

சர்க்கார் வருமானம் பொதுமக்களது வருமானம் எல்லாம் மொத்தமாகச் சேர்ந்து தேசிய வருமானம் எனப்படும். 1951—52 வருஷ மொத்த வருமானம் சுமார் 9000 கோடி ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் கிட்டத்தட்ட 7% (ரூ. 650 கோடி) சர்க்காரின் வரி வசூல் ஆகும். மொத்த வருமானத் தொகையை ஜனத் தொகை எண்ணுல் வகுத்து ஒரு நபரின் சராசரி வருஷ

வருமானம் மதிப்பிடுவது வழக்கம். அவ்வாறு செய்தால் ஒரு நபர் வருஷ வருமானம் ரூ. 250 ஆகும். இது உலகத்தில் இதர நாடுகளில் உள்ள நபர் வருமான அளவில் மிகவும் குறைந்தது.

தொழில்களிலும் விவசாயத்திலும் உழைக்கும் தொழிலாளிகளின் எண்ணிக்கை பெருக வேண்டும். அவர்களது வருமானமும் அதிகரிக்க வேண்டும். அப்போதுதான் தேசிய மொத்த வருமானம் உயரும். இந்த இலட்சியத்தை நிறைவேற்றவே நம் நாட்டுத் தலைவர்கள் பலதிட்டங்களை வகுத்துள்ளனர்.

பல தொழில் துறைகளில் ஈடுபட்ட தொழிலாளிகளின் விகிதத்தைக் கீழ்க்காணும் அட்டவணை குறிப்பிடுகிறது:

தொழில் வகை		தொழிலாளிகள் (ஆயிரக் கணக்கில்)	விகிதம்
விவசாயம், ஆடுமாடு வகையறு	...	68300	65·0
உலோகத் தொழில்கள், சுரங்கம்	...	520	0·5
ஆலைத் தொழில்கள்	...	19500	18·0
போக்குவரத்து	...	1600	1·5
வியாபாரம்	...	4500	4·2
சேனை	...	2400	2·2
கலைகள், ஆசிரியர்	...	1400	1·3
அரசியல் அலுவலாளர்	...	1000	0·9
வீட்டு வேலைக்காரர்கள்	...	6800	6·4
		106020	100·0

முதல் மூன்று இனங்களில் உழைப்போர் உற்பத்தி செய்து உண்டாக்கும் பொருள்களே நாட்டுச் செல்வம். தொடர்ந்துள்ள இரண்டு இனங்களில் உள்ளவர் இச் செல்வத்தைப் பங்கிட்டு விநியோகிக்க உதவும் துறைகளில் உழைப்பவர். கடைசி நான்கு இனங்களிலும் உழைப்போர் வாழ்க்கை வசதிகளுக்கு உதவியாகப் பல அலுவல்களில் வேலை செய்பவர்.

பிரதான இனமாகிய உற்பத்தித் தொழில்களில் அதிக மக்கள் முனைந்தாலன்றி தேசிய வருமானம் பெருக வழியில்லை. பிறர் உழைப்பால் கிடைக்கும் வருமானத்தைச் செலவு செய்துகொண்டு வாழும் மக்கள் தொகை குறையவேண்டியது அவசியம். கல்விகற்ற பல இளைஞர்கள் சர்க்கார் வேலைகளையே இலட்சியமாகக் கருதி ஏங்குகிறார்கள். சர்க்காரிடம் பணம் ஏது? பல மக்கள் தொழில் செய்து வரிப் பணம் கொடுப்பதால் சர்க்கார் இராஜ்ஜிய நிர்வாகம் செய்ய முடிகிறது. தொழில் வகைகளும் தொழில் செய்வோரும் அதிகரித்தாலன்றி சர்க்கார் மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களுக்கு அதிகப் பணம் செலவிட வழியில்லை. உற்பத்தித் தொழில்களை விட்டுப் பல ஜனங்கள் சர்க்கார் வேலைகளைத் தேடுவதால் தேசீய செலவு அதிகமாகுமேயன்றி தேசீய வருமானம் அதிகமாகாது.

நமது நாடு இனி சுதந்திர நாடு; குடியரசு ஏற்பட்டதால் நாமே அரசாள்பவர்கள்; நமது நாட்டு வளத்தை முழு அளவுக்கும் பயன்படுத்தித் தேசீய செலவைக் குறைத்து வருமானத்தைப் பெருக்கவேண்டும் என்பதை நமது குறிக்கோளாகக் கொள்ளவேண்டும்.

அரசாங்க வரவு செலவு

மத்திய சர்க்கார்—1948-49 *வரவு* 371 *கோடி ரூபாய்*
செலவு 486 *கோடி ரூபாய்.*

வரவு

வரவு இனங்கள்		சத விகிதம்
(a) *கஸ்டம்ஸ்*	...	34
(b) *எக்சைஸ்*	...	13
(c) *கார்பரேஷன் வரி*	...	16
(d) *வருமான வரி*	...	21
(e) *தந்தி, ரயில்வே*	...	2
(f) *இதர இனங்கள்*	...	14
	...	100

செலவு

செலவு இனங்கள்		சத விகிதம்
(a) *காப்பு சேனை*	...	30
(b) *ரெவினியு*	...	36
(c) **Capital** *செலவுகள்*	...	34
	...	100

17. தொழிலாளிகளின் நலன்

பொருள் உற்பத்தியைப் பெருக்கி நாட்டுச் செல்வத்தை அதிகரிப்பவர் தொழிலாளிகள். இந்த உண்மையை நன்கு உணர்ந்து அவர்களது சுக வாழ்வை உயர்த்துவது அவசியம்.

நாட்டுப் பிரஜை ஒவ்வொருவரும் பலமும் சக்தியும் பெற்றவராய் இருப்பதுடன், எவ்வளவு அதிக (maximum) உழைப்பு ஆற்றிப் பாடுபட முடியுமோ அவ்வளவையும் உற்சாகமாகவும் ஒரு கவலையுமின்றியும் செய்து நாட்டுக்கு உதவவேண்டும். அப்போதுதான் நாட்டின் செல்வம் பெருகும். உலகத்தில் இதர வல்லரசு நாடுகளுடன் இந்தியாவும் சமதையாகத் தலை தூக்கி நிற்க முடியும். சுதந்திரமடைந்த இந்தியப் பிரஜைகள் இதை வெகுதீவிரமாகச் சாதிக்கவேண்டும்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்திலேயே மக்கள் சுதந்திரப் போரில் இறங்கிய சமயம் தொழிலாளரும் உத்சாகமாக பங்கு கொண்டனர். தொழிலாளர் சங்கங்களைப்பற்றி அக்காலத்தில் ஒருவித சந்தேகமும் பீதியும் ஏற்பட்டன. இருந்தபோதிலும் தொழிலுக்கு ஊக்கமளிப்பதன் அவசியத்தைக் கருதிப் பற்பல க்ஷேமநல சட்டங்களும் விதிகளும் இயற்றப்பட்டன. ஆரம்பத்தில் முதலாளிகள் பக்கமே சர்க்கார் சாய்கால் அதிகம் இருந்தது. நாளடைவில் தொழிலாளிகளின் நலன்களில் சர்க்கார் சிரத்தை அதிகமாயிற்று.

1929 ரயில் தொழில் கமிஷன் நியமிக்கப்பட்டது. அவர்கள் யோசனைகளை அனுசரித்துச் சட்டங்கள் இயற்

றப்பட்டன. சுரங்க வேலையிலும் இதர வேலைகளிலும் தினப்படி கால அளவு ஏற்படுத்தப்பட்டது. தொழில் சங்கங்களின் அலுவல்கள் திட்டமிடப்பட்டன. சச்சரவுகளைத் தீர்த்து சமரசம் செய்ய வழிகள் வகுக்கப் பட்டன.

1948-ம் ஆண்டில் குடியரசு சர்க்கார் ஒரு திட்டமான நோக்கத்தை வெளியிட்டனர். சுரங் கங்கள், தோட்டங்கள் (டீ, காப்பி, ரப்பர்) போக்கு வரத்து ஸ்தாபனங்கள், கடைகள் முதலிய துறைகளில் உழைக்கும் உழைப்பாளிகளுக்கு க்ஷேமாபிவிருத்தி ஏற்பாடுகள் ஆரம்பமாயின.

வாரம் 48 மணி வேலை, பெண்களும் பாலர்களும் உழைப்பதில் கட்டுப்பாடு, சம்பளவிகிதம், அதிக நேர வேலைக் கூலி, வார ஓய்வுநாள், இதர லீவு வசதிகள் முதலிய பல சௌகரியங்களைப் பற்றிய விதிகள் அமுலுக்கு வந்தன.

தொழிலாளிகளுக்கு இன்ஷியுரன்ஸ், காப்புநிதி ஏற்பாடுகளும் வற்புறுத்தப்பட்டன. வியாதி சமயம் வைத்திய உதவி, வேலை செய்திருக்கும்போது திடீர் ஆபத்துக்கள் ஏற்பட்டால் உதவி, வேலை இல்லாமல் தவிக்கும்போது உதவி, பெண் தொழிலாளிகளுக்குப் பிரசவ உதவி, வேலை சமயம் இறந்துவிடும் தொழி லாளர் குடும்பத்திற்கு உதவி என்றவாறு பல வித உதவி ஏற்பாடுகள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. தொழிலாளி - முதலாளி உறவில் மனஸ் தாபங்கள் காணப்படுமாயின், அவைகளை விசாரித்துத் தீர்ப்பு அளிக்கும் அதிகாரம்பெற்ற பஞ்சாயத்துச் சபை களும், நியாயக் கோர்ட்டுகளும் நிறுவப்பட்டுள்ளன.

தொழிலாளர் சங்கங்கள் இப்போது பிரபலமாகி வருகின்றன. அந்தந்தத் துறையில் உள்ள தொழிலாளி களுக்கும் தனிச் சங்கங்கள் உண்டு.

தொழிலாளிகள் சங்கங்கள்	சங்கங்கள்	மெம்பர்கள்
இந்திய தேசிய தொழிற் சங்கக் காங்கிரஸ்	587	913528
ஹிந்து மஸ்தூர் சபா	220	373549
அகில இந்திய தொழில் சங்க காங்கிரஸ்	334	210942
ஐக்கிய தொழில் சங்கக் காங்கிரஸ்	154	129942
	1295	1627961

வேலை தேடித் தரும் ஸ்தாபனம் (எம்பளாய் மெண்டு எக்சேஞ்) ஏற்படுத்தப்பட்டு இப்போது சிறப்பாக உதவி செய்து வருகிறது. 10 பகுதிகளில் மொத்தம் 124 கிளை ஸ்தாபனங்களுடன் இது வேலை செய்கிறது. வேலைக்குத் தகுந்த ஆளையும் ஆளுக்குத் தகுந்த வேலையும் தேடிக்கொடுத்து உதவி செய்கிறது.

இண்டர்நேஷனல் லேபர் ஸ்தாபனத்தில் இந்தியா வும் சேர்ந்துள்ளது. உலக ஒப்பந்தத் திட்டங்களில் இந்தியாவும் 16 இனங்களை ஏற்றுக்கொண்டிருக்கிறது. பஞ்சு ஆலை (Textile), நிலக்கரி, இரும்பு, கட்டிடம், உள் நாட்டுப் போக்குவரத்து, கெமிகல்ஸ் முதலிய தொழில் துறை உலகக் கமிட்டிகளில் இந்தியாவிற்கு இடம் உண்டு.

18. அபிவிருத்தி திட்டங்கள்

இதுகாறும் ஒவ்வொரு துறையிலும் குடியரசு சர்க்கார் ஏற்று நடத்திவரும் முன்னேற்ற அலுவல்களை விவரித்தோம். அவற்றில் சில முக்கிய திட்டங்களை இங்குக் குறிப்பாக விளக்குவோம்.

ஐந்தாண்டு திட்டங்கள்

நிரந்தரமான சுதந்திரம் வேண்டுமென்று பாடு பட்ட அக்காலத்திலேயே ஜனத் தலைவர்கள் நாட்டு அபிவிருத்திக்கான திட்டத்தைத் தயாரித்தார்கள். சுதந்திரம் பெற்ற பிறகு அக் கனவை நனவாக்கி உருப் படுத்தி, நாடு எங்கும் தொழில்கள் பெருகி மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும் என்று எண்ணி நமது நாட்டு மாபெரும் தலைவர் ஜவஹர்லால் நேரு அபி விருத்தித் திட்டத்தின் முதல் பகுதியான ஐந்து ஆண்டுத் திட்டத்தை வகுத்து 1952ல் மக்கள் சபையில் சமர்ப் பித்தார். இது முதல் படி; இன்னும் அடுத்த 2-ஆம், 3-ஆம் திட்டங்களில் தேசிய வருமானம் இரட்டிப்பாகப் பெருகும். அடுத்த தலைமுறை மக்கள் இன்னும் சுபிட்ச மாக வாழக்கூடும்.

முதல் ஐந்தாண்டுத் திட்டம்

இதற்குச் சுமார் 2068 கோடி ரூபாய் செலவு பிடிக் கும். செலவு இனங்கள் பின்வருவன :

	கோடி		சத வீதம்
விவசாயம்	360	...	17·4
நீர்ப்பாசனம், நீர்விசை	561	...	37·2
பிரயாணம், போக்குவரத்து	497	...	24·0
தொழில்கள்	173	...	8·4
வாழ்க்கை வசதிகள்	340	...	16·4
அகதிகள் குடியேற்றம்	85	...	4·1
இதரவகைகள்	52	...	2·5
	2068		110·0

விவசாயப் பெருக்கத்திற்கு முதன்மை இடம் அளிக்கப்பட்டுள்ளது. அதைச் சாதிக்க உதவும் நீர்த் தேக்கங்களும், நீர்ப்பாசனங்களும் இப்போதே தொடங்கப்பட்டுள்ளன. 6 கோடி டன் அதிக உணவு தானியங்களும், 7 கோடி ஏகராவிற்கு நீர்ப்பாசன வசதிகளும் எதிர்பார்க்கப்படுகின்றன. பருத்தி ஆடைகள், சர்க்கரை முதலிய தொழில்களும் பெருக, நீர்விசைச் சக்தியை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இவ்வளவு கோடி ரூபாய்கள் செலவிட நம்மிடம் பணம் ஏது? சர்க்கார் வருமான இனங்களில் ரயில்வே முக்கியமானது. இவ்வகையில் 700 கோடி ரூபாய் கிடைக்கும். நாட்டு மக்கள் தங்கள் பணத்தையும் மூலதனமாகப்போட்டு தொழில் பெருக்கம் செய்ய வேண்டும். இவ்வகையில் 600 கோடி ரூபாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அயல் நாட்டார் யாதொரு நிபந்தனையுமின்றி அளிக்கும் உதவிமூலம் 156 கோடி ரூபாய் எதிர்பார்க்கப்படுகிறது. எஞ்சியுள்ளதை அந்தந்த இராஜ்ஜிய சர்க்கார் ஏற்றுக் கொள்வார்கள்.

வெளிநாட்டார் அளிக்கும் உதவியைப் பெறுவது பற்றி நம்மவரில் ஒருசிலர் சற்று தயங்குவது சகஜம். ஆனால் நாம் பீதியடையவேண்டிய அவசியம் இல்லை. வருங்காலத்தில் நம் தொழில் ஸ்தாபனங்களைத் தேசியமாக்கிக் கொள்ளலாம். உதவும் மூலதனத்தைத் திருப்பிக் கொடுத்துவிடலாம். தொழில் பெருக்கத்தினால் கிடைக்கும் லாபம் நம் நாட்டிலேயே இருக்கும்.

ஐந்தாண்டுத் திட்டத்தை வெற்றிகரமாகச் சாதித்து முடிப்போமாயின், முதல் படியாக இந்திய வரு

மானம் 20% உயரும். பிறகு இரண்டாம் திட்டத்தில் 31% உயரும். இப்போதுள்ள 9000 கோடி வருமானம் மூன்றும் திட்டமுடிவில் இரட்டிப்பாகி 18000 கோடியாகும். இவ்வளவு முன்னேற்றத்தைப் பற்றி நாம் நினைக்கும்போதே அடுத்த தலைமுறை மக்களின் அமோக வாழ்வைப்பற்றி நாம் பெருமித மகிழ்ச்சி அடைகிறோமல்லவா ?

நம்மிடமுள்ள இயற்கைச் செல்வத்தை நாம் இதுகாறும் செம்மையாகப் பயன்படுத்தவில்லை. அந்த இனங்களைப் பிரயோசனப் படுத்துவதுமன்றி, நாட்டு மக்களின் மனித சக்தியையும் பெருமிதமாக உபயோகப் படுத்தவேண்டும். அதாவது மனித உழைப்பும் திட்டமாக அதிகரிக்க வேண்டும் என்பதே இந்த ஐந்தாண்டுத் திட்டத்தின் முக்கிய அம்சம்.

நிலம், மூலதனம், எந்திரசாதனம், உழைப்பு இவைகள் பொருள் உற்பத்திக்கு அவசியமானவை. மூலதனத்தைக்கொண்டு எந்திரசாதனத்தை அதிகமாக்கலாம். உழைப்பு, அறிவு, ஆராய்ச்சி இவைகளின் பலனுகை எந்திர சாதனைகளைத் திறமையாகப் பயன்படுத்த முடியும்.

நாட்டில் உள்ள மொத்த நில விஸ்தீரணத்தைப் பெருக்க முடியாது. ஆனால் இப்போதுள்ள சாகுபடி நிலங்களில் அதிக மகசூல் எடுப்பதற்கு உழைக்க வேண்டும். அதுவுமின்றி இதுவரை சாகுபடிக்குக் கொண்டு வரப்படாத நிலங்களிலும் சாகுபடி செய்ய வேண்டும். காடுகளையும் மேய்ச்சல் நிலங்களையும் அழித்துவிடக் கூடாது. அவைகளையும் அபிவிருத்தி

செய்து காட்டு வளத்தை அதிகரிக்க வேண்டும். கால் நடைச் செல்வமும் செழிப்படைய வேண்டும்.

உற்பத்தி அதிகரிப்பதில் அரசியலார் பங்கு எம் மட்டும் இருக்கலாம் என்பது பெரியதொரு பிரச்சினே. எல்லாத் தொழில்களேயும் தேசிய சர்க்கார் ஏற்றுக் கொண்டு நடத்துவதே நல்லது என ஒரு சிலர் கருத்து. சர்க்காருக்கும் ஓரளவு இதே கருதது உண்டு எனினும்; உடனடியாக எல்லாத் தொழில்களேயும் தேசிய மாக்கு தல் சாத்தியப்படாது. அப்படி முற்பட்டால் நாட்டில் புரட்சியும் கலவரமும் ஏற்பட்டு, அமைதி குலேந்து விடும். ஆயினும் சிறுகச் சிறுக சில முக்கியத் தொழில் களேச் சர்க்காரே ஏற்று நடத்தத் தொடங்கிவிட்டனர். முக்கியமாக ரயில்வே, சில இராஜ்ஜியங்களில் பஸ் போக்குவரத்து, அடுத்தபடியாக விமானப் போக்கு வரத்து என்று அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

தொழில் நடத்தும் முதலாளிகளின் ஒத்துழைப்பும் பொதுமக்களின் ஊக்கமும் திட்டங்களே வெற்றிகர மாக்கும் சாதனங்கள். நான்கு வருஷ காலத்தில் இவ் விரண்டும் சிறப்பாகவே கிடைத்துள. சர்க்கார் எவ் வளவுதான் திட்டங்கள் பிரசுரித்தாலும் அவைகளே நடைமுறையில் அமுலுக்குக் கொண்டு வருவது பொது மக்களது உற்சாகமேயாகும். அரசாங்கம் பொது மக்களது என்ற அடிப்படையில் அபிவிருத்தி வேலேத் திட்டங்களே நடத்தி வெற்றி காண்பது அவர்களது பொறுப்பே என்பது விளங்கும்.

உற்பத்திப் பொருள்கள் பெருகுவதில் முதல் இனம் உணவு தானியங்கள். இதனல் நாம் இதுவரை

வெளிநாடுகளிலிருந்து விலை கொடுத்து வாங்குவது குறையும். 35 லட்சம் டன்கள் வாங்கிய வகையில் ரூ. 750 கோடி செலவாயிற்று. இச் செலவை மிச்சப் படுத்துவதுடன் இனி நாம் ஏற்றுமதி செய்யும் நிலைமையும் உண்டாகும். நீர்ப்பாசனங்களைப் பெருக்குவதற்கும், உரங்கள், எருக்கள், அதிகம் உபயோகிப்பதற்கும் திட்டத்தில் ஏற்பாடுகள் காண்கிறோம். இவ்வேற்பாடுகளின் விளைவாக ஒவ்வொரு ஏகரா நிலத்திலும் மகசூல் நன்றாக விருத்தியடையும்.

தொழில்களில் சர்க்கார் மூலதனம் போடுவதை விட பொது ஜனங்களும் முதலாளிகளும் போடுவதற்கே திட்டமிட்டுளர். தொழிலுக்கு அவசியமான கருவிகளையும் தொழில் அபிவிருத்திக்கான ஆராய்ச்சி வேலைகளை நடத்தி அந்த அறிவுப் பயனைத் தொழிலில் உபயோகிக்கவும் சர்க்கார் உதவியாகப் பற்பல ஏற்பாடுகளைச் செய்துவருகிறார்கள். எத்தனைவித ஆராய்ச்சிச்சாலைகள் வேலை செய்யத் தொடங்கி விட்டன என்று முன்னரே விளக்கினோம்.

கிராம முன்னேற்றத்திற்கும் குடிசைத் தொழில் அபிவிருத்திக்கும் திட்டத்தில் இடம் உண்டு. சிற்சில இனங்களில் பெருவாரியான ஆலைத் தொழில் போட்டி உற்பத்தியைக் கட்டுப்படுத்தி, குடிசைத் தொழில்களுக்கு ஆதரவு அளிப்பதே சர்க்காரின் நோக்கம். கைத்தறி நெசவுத் தொழிலுக்கு இவ்வித சலுகை தருவதான திட்டம் உண்டு.

வாழ்க்கை வசதிகளைப் பெருக்கி சமூக நலன் துறைகளைச் சிறப்பாகக் கவனிக்கவும் ஏற்பாடுகள் உள. கல்விக்

காக 150 கோடி, சுகாதார அபிவிருத்திக்காக 100 கோடி, மலேரியா தடுப்புக்காக 10 கோடி, பிற்போக்கான மக்கள் குடியிருப்பு வசதிகளுக்காக 50 கோடி ரூபாய்கள் செலவுகொண்ட பல முன்னேற்றத்திற்கான வழிகளை மேற்கொண்டுளர். இந்த இனங்களில் அநேகமாக வேலைகள் தொடங்கி பூர்த்தியாகி வருகின்றன. முக்கியமாக அகதி நிவாரண வேலைகள் பூர்த்தியாகி விட்டன.

குடியரசு சர்க்கார் மேற்கொண்ட அபிவிருத்தி திட்டங்கள் குறையின்றி வெற்றி சாதித்து வருவது



கம்யூனிடி ப்ராஜக்டு—கிராமவாசிகள் ஒரு சாலையை அமைத்தல்

பற்றி உலக முழுவதும் அதிசயித்துப் பாராட்டுகிறது. பிரதமர் நேருவின் சேவையை எல்லா நாட்டினரும் புகழ்கின்றனர்.

இரண்டாவது ஐந்து ஆண்டுத் திட்டம் தயாரித்து வருகிறார்கள். முதல் திட்டத்தின் வெற்றியை அளந்து



சாலைகட்டும் வேலை—பிரதம மந்திரியும் உழைக்கிறார்

மதிப்பிட்டு அடுத்தபடியாக உள்ள முன்னேற்றப் பகுதிகள் இரண்டாவது திட்டத்தில் கவனிக்கப்படும்.

சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள் (Community Projects)

சென்ற ஆண்டிலேயே இவ்வேலைகள் தொடங்கி விட்டன. அபிவிருத்திக்கென சில இடங்களைப் பொறுக்கி அவ்விடங்களில் வேலை செய்து வருகிறார்கள். சாலைகள் அமைப்பது, சிறு வீடுகள் கட்டுவது, வயல் களுக்கு எரு சேகரிப்பது, உழவு ஆயுதங்கள் தருவது, வெட்டுக்கிளி முதலிய நாசக்காரப் பூச்சிகளை ஒழிப்பது, நிலத்தின் தரத்தைச் சோதித்து உதவுவது, மண் அரிப்பைத் தடுப்பது, மீன்கள் வளர்ப்பது, குழாய்க் கிணறுகள் பதிப்பது முதலியன கவனிக்கப்படுகின்றன. இவைகளைத் தவிர சமூகக் கல்வி, மருத்துவ உதவி, சுகாதார உதவி முதலியன செய்யவும் திட்டம் உண்டு. இவ்வாறான பற்பல வேலைகளைச் செய்ய ஆயிரக்கணக் கான கிராம சேவைத் தொண்டர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். இதுவரை சுமார் 4500 பேர்கள் பயிற்சி பெற்று கிராமங்களில் உழைத்து வருகிறார்கள்.

முதல் ஐந்து ஆண்டுத் திட்டம் அநேகமாக வெற்றியாகிவிட்டது. திட்டம் தயாரித்துப் பிரசுரித்த போது பலர் “இதெல்லாம் ஏட்டுத் திட்டம், உணவுக்கு உதவும் கறியல்ல” என்று ஏளனம் செய்தனர். ஆனால் நாட்டு மக்களது உற்சாகமும் சர்க்காரது தீவிர முயற்சி யும் வெற்றி சாதித்துத் தந்தன.

முதல் ஐந்து ஆண்டுத் திட்டத்தின் வெற்றி

	1951-ல் திட்டமிட்டது.	*1954-ல் சாதித்தது.*
உணவு	76 லட்சம் டன் வருஷம் அதிக உற்பத்தி	90 லட்சம் டன் அதிக உற்பத்தி
நீர்ப்பாசனம்	85,33,000 ஏக்ரா	35,00,000
மின்சக்தி	10,87,000 கிலோவாட்	4,25,000
சாலைகள்	870 மைல்கள்	447
உடை	470 கோடி கஜம்	470 கோடி கஜம்
சமுதாய அபிவிருத்தி கிராம நலன் திட்டங்கள்	120000 கிராமங்கள்	48750 கிராமங்கள்
புதிய கல்விச் சாலைகள்	49695	29723
புதிய ஆஸ்பத்திரிகள்	995	609

19. உலக மதிப்பு

சுதந்திரக் குடியரசுநாடாகிய பிறகு இந்தியாவின் மதிப்புப் பன்மடங்கு அதிகரித்துவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்த இந்தியா எப்போதுமே பிரிட்டிஷாரின் பின் செல்லும் அடங்கிய நாடாக இருந்தது. ஆனால் இப்போது இந்தியக் குடியரசு உலக வல்லரசுகளுடன் சமதையான அந்தஸ்து பெற்று, உலக வியவகாரங்களில் தீர்க்கதரிசியான யோசனை கூறும் முன்னணிப் பதவியில் அமர்ந்துள்ளது.

சுதந்திரக் குடியரசு ஆயினும், இந்தியாவும் இஷ்டமாகவே பிரிட்டிஷ் காமன்வெல்த் சங்கத்தில் சேர்ந்து இருக்கிறது. இளம் பருவத்தில் உள்ள நமது நாடு உலக வியாபாரத்திலும் உலக வியவகாரங்களிலும் சரிசம அந்தஸ்து பெறுவதற்கு இந்த பிரிட்டிஷ் தொடர்பு சில காலத்திற்கு மிகவும் உதவியாகும். காமன் வெல்த் ஒப்பந்த ஏற்பாடுகளில் இந்தியாவும் கலந்து கொண்டு இந்தியாவிற்கு வியாபார நலன்களும் பாது காப்பு வசதிகளும் பெற இடம் உண்டு. சுதந்திரம் அடைந்த பிறகும் பிரிட்டனுடன் ஏன் இனியும் தொடர்பு வைத்துக் கொள்ளவேண்டும் என்று ஒரு சாரார் வாதம் செய்வதும் உண்டு. ஆனால் அவ்விதப் பேச்சு தற்காலிய உணர்ச்சி வசப்பட்டதாகும். அது எதிர்காலத்தில் நிரந்தரமான நட்புக்கும் அமைதிக்கும் அடிகோலுவதற்கு உதவி ஆகாது.

மேலும் பிரிட்டனும் இதர காமன்வெல்த் நாடுகளும் தங்கள் ஸ்தாபனத்துடன் சுதந்திர இந்தியா

தானாகவே சேர்ந்து கொண்டது பற்றி மிகவும் பெருமை கொண்டுள. முக்கியமாகப் பிரிட்டிஷ் பத்திரிகைகள் இந்தியாவின் பிரதமர் நேருவை மெச்சிப் புகழ்ந்திருக்கின்றன. சென்ற ஆண்டு நிகழ்ந்த பிரிட்டிஷ் அரசி எலிஸபெத் மகுடாபிஷேக விழாவுக்கு இந்தியாவின் சார்பாகப் பிரதமர் நேரு சென்றார். மற்ற பிரதம மந்திரிகளுடன் மகாநாட்டில் கலந்து கொண்டார். "சுதந்திர இந்தியா இப்போது உலக வல்லரசுகளில் ஒன்று. திறமையான பிரதமர் நேருவின் ஆட்சியில் உள்ள இந்தியா இப்போது கிழக்கு ஆசியா நாடுகளில் தலைமை ஸ்தானம் பெற்றுள்ளது. புதிய ஆசியாவின் கவலைகளையும் ஆசைகளையும் நன்கு விளக்கக்கூடியவர் அவர் ஒருவரே. இந்தியாவும் பிரிட்டிஷ் காமன்வெல்த் சபையில் சேர்ந்திருப்பது பற்றி நாம் மிகவும் பெருமை கொள்கிறோம்" என்று பிரிட்டிஷ் பத்திரிகைகள் பாராட்டின.

அந்நிய நாடுகளுடன் உறவாடும் விதம் பற்றி பிரதமர் நேரு திட்டமாக விளக்கியிருக்கிறார். இந்தியா ஒருவருடனும் சண்டைக்குச் செல்லத் தயாராக இல்லை. இந்திய மக்கள் நிம்மதியாக முன்னேற்றம் அடையவே விரும்புகிறார்கள். முடிந்தவரையில் மற்ற நாடுகளுக்கு உதவி செய்து ஒத்துழைப்போம்; எல்லா நாடுகளுடனும் நட்புக் கொள்வோம், முக்கியமாக ஒடுக்கப்பட்ட நாடுகளது சார்பில் உதவி செய்யப் பாடு படுவோம்.

தாய்லாண்டு (சயாம்), இந்தோநேஷியா, பாரசீகம், ஈஜிப்டு முதலிய எல்லா நாடுகளும் இந்தியாவின் யோசனைகளை எதிர்பார்த்து நாடுகின்றன.

அயல் நாடுகளுடன் உறவு

உலக சமாதானத்திற்காகப் பாடுபடுவதே இந்தியாவின் முக்கிய நோக்கம். இதன்பொருட்டு நமது நாடு உலக ஐக்கிய தேச ஸ்தாபனத்தை (**United Nations Organisation**) மிகவும் பயன்படுத்தும். இதர நாடுகளுடன் நேசத் தொடர்பு ஏற்படுத்திக்கொண்டு இந்தியத் தூதர்களையும் பிரதிநிதிகளையும் நம் அரசாங்கம்



அமெரிக்க ஸ்தானிகர் டௌலஸ், நேரு, விஜயலக்ஷ்மி

நியமித்துள்ளது. நம் நாட்டைப்பற்றி இதர நாடுகள் அறியவேண்டும். அந்த நாடுகளைப்பற்றி நாமும் தெரிந்துகொள்ள வேண்டும்.

1947க்குப் பிறகு 20 நாடுகளில் இந்திய தூதர்கள், 6 நாடுகளில் ஹைகமிஷனர்கள், 8 நாடுகளில் இந்திய லிகேஷன் ஆபீசர்கள், 48 நாடுகளில் இந்தியப் பிரதிநிதிகள் இருக்கின்றனர். 3 நாடுகளில் இந்திய ஏஜெண்டுகள் இருக்கிறார்கள். அயல் நாட்டு இலாக்கா என்ற ஒரு தனிப் பகுதி ஏற்படுத்தித் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமித்து இந்திய சர்க்கார் பயிற்சி அளிக்கிறார்கள்.

பர்மாவுடன் 1951-இல் நேச உடன்படிக்கையும் வியாபார ஒப்பந்தமும் ஏற்பட்டன. இந்தோனேஷியாவுடன் 1951ல் நட்பு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. சீனாவிலிருந்தும் ஒரு கோஷ்டியினர் இந்தியாவுக்கு வந்து போனார்கள். சீனப் பிரதமர் சூ என்லூ சமீபத்தில் டில்லிக்கு வந்து போனது ஒரு முக்கிய சம்பவமாகும். இது சீனாவுக்கும் இந்தியாவுக்கும் உள்ள ஆதிகால நட்பு உறுதிப்படுவதற்கு உதவியாகின்றது. சோவியத் ருஷ்யாவிற்கு இந்திய சுகாதார மந்திரி ராஜகுமாரி அமிர்த கௌரி சமீபத்தில் சென்றனர். ஆப்கானிஸ்தான், ஈஜிப்டு, இரான், துருக்கி முதலிய நாடுகளுடன் வியாபார ஒப்பந்தங்கள் உண்டு. அமெரிக்கா (U. S. A.) இந்தியாவின் அபிவிருத்தி திட்டங்களுக்குப் பண உதவி செய்கிறது. பிரிட்டனும் அமெரிக்காவும் தொழில் நிபுணர்களையும் விஞ்ஞான வைத்திய வல்லுநரையும் தந்து இந்தியாவின் முன்னேற்றத்திற்குப் பெரிதும் உதவி செய்கின்றன.

சிலோனில் நிரந்தரமாக வாழும் இந்தியர்களது பிரஜா உரிமைகளைப் பற்றி சிலோன் சர்க்கார் ஏதோ நிர்ப்பந்தங்கள் தொடங்கினர். ஆனால் இது பற்றி

சமீப காலத்தில் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதன்படி நிரந்தரமாக வாழ்ந்து தொழில் செய்யும் இந்தியர்களுக்குச் சிலோன் பிரஜா உரிமைகள் கிடைக்கும்.

தென் ஆப்பிரிக்காவில் வாழும் இந்திய ஜனங்கள், தென் ஆப்பிரிக்காவின் பிரஜைகளாக இருந்த போதிலும், மிகவும் இடைஞ்சல்களை அனுபவித்துக் கஷ்டப்படுகிறார்கள். தென் ஆப்பிரிக்க சர்க்கார் தங்கள் நாட்டில் வாழும் ஐரோப்பியரல்லாத இந்தியர்களையும் ஆப்பிரிக்கர்களையும் ஒதுக்கிவைக்கத் திட்டம் செய்து வருகிறார்கள். இது பற்றி ஐக்கிய தேச சபை என்ன செய்வதென்று ஆலோசித்திருக்கிறது.

இந்தியாவும் பாகிஸ்தானும் பரஸ்பரம் ஒற்றுமை கொண்டு தங்கள் மனஸ்தாபங்களைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ள இப்போதுதான் நல்ல சமயம் தொடங்கியிருக்கிறது. இதன் முடிவு இரு நாடுகளுக்கும் திருப்திகரமாக முடியும் என எதிர்பார்க்கிறோம்.

20. உலகக் குடும்பம்

மக்களது ஆசைகளும் பற்றுக்களும் தம்தம் குடும்பத்தில் தொடங்கி, காலக்கிரமத்தில் சமூகப் பற்று ஆகவும் நாட்டுப் பற்று ஆகவும் பெருகி வளர்ந்து வேர் ஊன்றி விடுகிறது. இப்போது உலக முழுவதும் ஒரே குடும்பம். உலக நாடுகள் எல்லாம் கூட்டுறவுடன் ஒருவருக் கொருவர் உதவி செய்து எல்லா

ஜனங்களும் சுபிட்சமாக வாழவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்தை மேற்கொண்டுள.

இதன் விளைவாகப் பல நன்மைகள் ஏற்பட்டுள்ளன. ஆகாயப் பிரயாணம் சாதாரணமாகிவிட்டது. விஞ்ஞான முன்னேற்றத்தின் பலனாகப் பற்பல சௌகரியங்களை நாம் அனுபவிக்கிறோம். முன்னாட்களில் கனவிலும் நினைத்திராத பல வசதிகள் இப்போது சகஜமாகி விட்டன. தூரதேசங்களில் நடைபெறும் சம்பவங்களைச் சினிமாப் படங்களில் பார்க்கிறோம். பல்லாயிர மைல் களுக்கு அப்பால் நடைபெறும் பிரசங்கங்களையும் இசை நிகழ்ச்சிகளையும் வானொலி மூலம் ரேடியோவில் கேட்டு இன்புறுகிறோம். அமெரிக்க ஜனாதிபதி, பிரிட் டிஷ் ராணி, நமது பிரதமர் நேரு, உபஜனாதிபதி ராதா கிருஷ்ணன் இவர்களது பேச்சை நாம் நம் வீட்டிலிருந்த வாறே கேட்கிறோம். அமெரிக்காவிலும் பிரிட்டனிலும் இப்போது இன்னொரு அதிசயம் உண்டு. டெலிவிஷன் ரேடியோவில் பேச்சுக் கேட்பதுடன் காட்சி நிகழ்ச்சியை யும் தத்ரூபம் கண்முன் நடப்பதுபோலக் காணமுடியும்.

உலகத்தில் பலவேறு நாடுகள் இருந்தபோதிலும் ஒற்றுமையும் கூட்டுறவும் வலுத்து வருகின்றன. பல் வேறு மதங்களும் மொழிகளும் இருந்தபோதிலும் மனித சமூகம் என்ற ஒரு குடும்பம் உலக முழுவதிலும் பரவி இருக்கிறது.

முன் காலத்தில் பொதுவாகச் சுயநலமும் செருக் கும் அதிகமாயிருந்தன வெனலாம். நமது குடும்பமே மேன்மையானது, நமது கிராமமே மிகவும் உயர்ந்தது, நமது நாட்டினரே மகா மேதைகள், நாகரிகமுள்ளவர்

கள் என்ற குறுகிய மனப்பான்மை பெரும்பாலும் மக்களை வசப்படுத்தி இருந்தது. தன் இனத்தைச் சேராதவர்களைக் காட்டுமிராண்டிகள், தன் மதத்தை ஏற்காதவர்களை மிலேச்ச அஞ்ஞானிகள் (Pagans, Heathens, Kaffirs) என்றும் கருதுவது வழக்கம். ஆனால் இவையெல்லாம் உலக குடும்ப க்ஷேம விருத்திக்குப் பாதகமானவை. ஊரார் பிள்ளைகளுடன் தோழமையுடன் நமது பிள்ளைகளும் வளர்ந்து செழிக்கவேண்டும் என்பதே நம் முன்னோர்கள் விதைத்த பண்பாடு. யாதும் ஓர் ஊரே, எல்லாரும் சகோதரர்களே, யாவரும் இன்புற்று வாழவேண்டும் என்ற கொள்கைகளில் நாம் திடமான நம்பிக்கை உள்ளவர்கள். இதுவே நமது ஜனங்களிடை தலைமுறை தலைமுறையாக வளர்ந்துவந்த அறவழியாகும். இவ்வழியைக் கடைப்பிடித்து நடைமுறையில் அனுசரிக்க ஐக்கிய தேச ஸ்தாபனம் பாடுபடுகிறது. ஆகவே இந்தியாவின் முழு ஆதரவும் இந்த ஸ்தாபனத்திற்கு உண்டு.

நாட்டுப் பற்றும் உலக சகோதரப் பண்பும் ஒன்றுக் கொன்று முரண்பாடு ஆனவையல்ல. எல்லா நாட்டு மக்களும் ஒற்றுமைப்பட்டு, ஒரே குடும்பத்தினர்—மனிதசமுதாயம்—என்று கருதி உழைத்தால், நாடு பிடிக்கும் சண்டைகளும் வியாபாரப் போட்டி யுத்தங்களும் குறைந்துவிடும். ஒரு நாட்டாரை இன்னொரு நாட்டார் போரில் வென்று, பல ஜனங்களைக் கொன்று நாட்டைச் சூறையாடுவதும் மக்களை அடிமைப்படுத்துவதும் வழக்கம் என்று உலக சரித்திரத்தில் நாம் படித்தோம். வெள்ளை ஐரோப்பியர்கள் தாங்களே பலவான்கள் என்று பிறநாடுகளை ஜெயித்துக்கட்டி சாம்ராஜ்யம்

அமைத்தார்கள். 1914-இல் ஏற்பட்ட முதல் உலக யுத்தத்திற்குக் காரணமே இதுதான். வியாபாரப் பெருக்கத்திற்கும் தம் நாட்டு மக்கள் குடியேறி ஆதிக்கம் செலுத்துவதற்கும் வசதியாக ஐரோப்பியர்கள் நாடு பிடிப்பதில் தீவிரமாக இருந்தனர். இந்த யுத்தம் முடிந்த பிறகு 1920-இல் உலக மக்கள் சபை (League of Nations) என்று அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு முதலிய நாடுகள் சேர்ந்து ஒரு ஸ்தாபனம் அமைத்தன. பிரிட்டனது கையாளாக இந்தியாவுக்கும் அதில் இடம் இருந்தது. இந்தச் சபையினால் உலக சமாதானம் சாதிக்க முடியவில்லை. 1938-இல் இரண்டாவது உலக யுத்தம் தொடங்கியது. ஜெர்மனியில் ஏதேச்சாதிகாரியாக ஆட்சி செய்த ஹிட்லர் ஆதிக்கம் ஐரோப்பா முழுவதிலும் பரவலாயிற்று. ஜெர்மனியுடன் ஜப்பானும் சேர்ந்துகொண்டது. உலகமெங்கும் பரவியுள்ள பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைத் தகர்த்தெறிய வேண்டும் என்பதே அவர்கள் ஆசை. பிரிட்டிஷாருக்கு உதவியாக அமெரிக்கர் முன்வந்தனர். இதேசமயம் ஜெர்மனியும் சோவியத் ருஷ்யாவை ஜெயிக்கக் கிளம்பிற்று. இதர இடங்களில் வெற்றிபெற்று வந்த ஜெர்மன் படைகள் ருஷ்யாவில் படுதோல்வியடைந்தன. அச்சமயம் இங்கிலாந்து மிகவும் நெருக்கடியான நிலையில் இருந்தது. ருஷ்யாவில் ஜெர்மன் தோல்வி யுத்தத்தின் போக்கை மாற்றிவிட்டது. அமெரிக்கத் துருப்புகள் வந்ததும் ஜெர்மன் வீழ்ச்சியும் கூடிய சீக்கிரம் ஏற்பட்டது.

ஜப்பானியரும் சிங்கப்பூரைத் தாக்கி ஜெயித்துவிட்டு பர்மாவைப் பிடித்துக் கொண்டனர். அங்கிருந்து இந்தியாவில் படை எடுக்கலாயினர். பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து இந்தியாவை மீட்டுச் சுதந்திர இந்தியா

வாக்குவதாக ஜப்பானியர் உறுதி அளித்தனர். இந்தியத் தலைவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் தலைமையில் இந்திய தேசிய ராணுவப்படை ஏற்பட்டது. அஸ்ஸாம் எல்லையில் இந்தப் படையும் ஜப்பானியர் படையும் நெருங்கி விட்டன. இந்த நிலையில் அணுகுண்டு வீசி அமெரிக்கர் இரண்டு ஜப்பானிய நகரங்களை நாசமாக்கினர். ஜப்பானியர் பின்வாங்க வேண்டியதாயிற்று. இல்லையேல் யோகஹாமா, டோகியோ நகரங்களும் நாசமாகிவிடும். ஜப்பானியர் சரணமடைந்தனர்.

---

21. உலக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம். (United Nations Organisation)

1945-ல் இரண்டாம் உலக யுத்தம் முடிந்தவுடன் ஐக்கிய நாடுகள் மன்றம் ஸ்தாபிதமாயிற்று. இப்படி அணுகுண்டு வீசிக்கொண்டு போர் புரிவதால் இனி நாடுகளுக்குள் பெரும் நாசம்தான் ஏற்படும். நாடுகளுக்கிடை ஏற்படும் தகராறுகளை இந்தச் சபையில் பஞ்சாயத்து செய்து தீர்ப்பு அளிப்பதே அறிவுள்ள மனிதனது அழகாகும் என்று பல நாடுகள் ஒப்புக்கொண்டன. 50 நாடுகளிலிருந்து பிரதிநிதிகள் ஒன்றுகூடி உலக சாசனம் (United Nations Charter) பிரகடனம் செய்தார்கள்.

இந்தச் சபையின் நோக்கம் மிகவும் போற்றுதற்குரியது. இனி வருங்கால உலக க்ஷேமத்திற்கு அடிகோலியதாகும் இந்தத் திட்டம். இம்முயற்சியைப்பற்றி எதிர்கால சரித்திரத்தில் உலகத்தின் நன்றி குறிப்பிடப்படும். உலக மக்களது க்ஷேமம் இனி விருத்தியடையும்.

இப்போது ஐக்கிய நாட்டுச் சபையில் (U. N. O.) 60 நாடுகள் சேர்ந்துள. சபையின் வேலைகள்:

1. உலக சமாதானத்தைப் பாதுகாப்பது.

2. தகராறுகளை விசாரித்து நியாயம் அளிப்பது.

3. உலக ஜனங்கள் யாவரும் சுகமாகவும் சந்தோஷமாகவும் வாழ உதவி செய்வது.

இந்த நோக்கங்கள் மகா மேன்மையானவை. அவைகளை அனுஷ்டானத்தில் கொண்டுவருவதுதான் சற்று சிரமமாகவிருக்கிறது. ஏனெனில் நாடுகளில் சில இன்னும் கட்சி மனப்பான்மையில் ஊறியுள்ளன. சில வல்லரசுகள் தாம் பிடித்த கொள்கையை வற்புறுத்த முயற்சி செய்கின்றன. சிறிய நாடுகளின் உரிமைகளையும் சம அந்தஸ்தையும் இன்னும் கௌரவமாக ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மை வல்லரசுகளிடை அபிவிருத்தியடைய வேண்டும். ஒரு சிலருக்குப் பிடிக்காத அம்சங்களை ஒரேயடியாக ஒதுக்கவும் துணிகின்றன. புதிதாக உருவடைந்த கம்யூனிஸ்டு சீனாவை இந்தச் சபையில் ஏற்று இடம் அளிக்க இன்னும் எதிர்ப்பு இருக்கிறது. தென் ஆப்பிரிக்கா அரசாங்கத்தார் மேற்கொண்டுள்ள ஒதுக்கு முறைகளைக் கண்டித்து அடக்க இச்சபையால் முடியவில்லை. அதிகமாக வற்புறுத்தினால் சபையிலிருந்து விலகிவிடத் தென் ஆப்பிரிக்கா தயாராய் இருப்பதாகத் தெரிகிறது.

இவ்வளவு குறைபாடுகள் இருந்தபோதிலும் இந்த ஸ்தாபனம் ஏற்பட்டதுபற்றி நாம் பெருமைகொள்ள

வேண்டும். காலக்கிரமத்தில் இந்தச் சிறு பூசல்கள் ஒழிந்து ஒற்றுமை ஏற்படும். இதை உறுதியாக நம்பியே இந்தியா இந்த ஸ்தாபனத்தில் மனப்பூர்வமாக ஒத்துழைத்துப் பாடுபட்டுவருகிறது. பற்பல முக்கிய மான செயல் கமிட்டிகளில் இந்தியாவுக்குக் கவுரவ மான இடம் உண்டு.

கொரியாவில் ஏற்பட்ட சண்டையில் சமாதான வழி ஏற்பட இந்தியாவின் யோசனையை எல்லா நாடு களும் சந்தோஷமாக வரவேற்றன. சண்டையில் கைதி களாக அவதிப்பட்ட பல்லாயிர மக்களைப் பந்தோபஸ்து செய்து விசாரித்து அவரவர் தாயகம் செல்லும்படி அனுப்பும் வேலையை ஐ. நா. சபை இந்தியாவிடம் ஒப் படைத்தது. பலவித இன்னல்கள் நடுவே இந்தியத் துருப்புகள் இந்தப் பணியை அதிமேன்மையாக நிர் வகித்து முடித்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பின. இந்தியாவின் அரிய சேவையை உலகம் முழுவதும் மெச்சியது.


பிரெஞ்சு இந்தோ சீனவில் சில ஆண்டுகளாக நடைபெற்று வந்த சண்டையை நிறுத்துவதற்கான பூர்வாங்க ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது. இதில் இந்தி யாவின் பங்கு சிறப்பானது. சுதந்தர இந்தியாவின் சேவையை உலகம் முழுவதும் வரவேற்கிறது.

ஐ. நா. சபையின் வேலைகளைச் செய்யும் தனிச் சபைகளாவன :—

1. காப்பு சபை

நாடுகளுக்கிடையே ஏற்படும் சச்சரவுகளும் மனஸ் தாபங்களும் இச்சபையில் விசாரிக்கப்படும். யுத்தத்

திற்குச் செல்லாமல் சமாதான வழியிலேயே மனஸ்தாபங்களைத் தீர்த்துக்கொள்ள இது சிறந்த முயற்சி. ஆனால் சபை அளிக்கும் தீர்ப்பை வற்புறுத்த வேண்டுமே! என்ன செய்வது? பொதுச் சபைக்குச் சேனை பலம் வேண்டும். மெம்பர் நாடுகள் வீதாசாரம் ஏற்று, சேனை திரட்டி தீர்ப்பை ஒப்புக் கொள்ளாத நாட்டின் மேல் போர் தொடுக்க வேண்டி வரும்.



இச்சபையில் உள்ள மொத்த மெம்பர்கள் 11. இவைகளில் சீனா, பிரான்சு, பிரிட்டன், சோவியத் ருஷ்யா, ஐக்கிய அமெரிக்கா நிரந்திர மெம்பர்கள். இந்தச் சபை ஒப்புக்கொண்ட சீனா தேசம் வேறு. அது முன்பு ஆட்சி செலுத்திய சியாங்கே ஷேக் கட்சியாகும். இவர் உலக யுத்தத்தில் ஜப்பானுக்கு எதிரியாக நேச நாடுகளுடன் சேர்ந்திருந்தார். ஆனால் இப்போது சீனாவில் இவர் ஆட்சி இல்லை. மாசேதுங்

தான் சீனாவின் தலைவர். சீனா முழுவதும் இப்போது கம்யூனிஸ்டு ஆட்சியில் உள்ளது. ஐ. நா. சபையில் இதற்கு இன்னும் இடம் கிடைக்கவில்லை.

பொது சபையிலிருந்து இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறை மேலே குறிப்பிட்ட 5 நாடுகளைத் தவிர இதர நாடுகளிலிருந்து மற்ற 6 பிரதிநிதிகளும் தேர்ந்து எடுக்கப்படுவர்.

இந்தக் காப்பு சபை எப்போதும் அலுவல்களைக் கவனிக்கத் தயாராக இருக்கவேண்டும்.

2. டிரஸ்டி சபை

உலகத்தில் இன்னும் சில நாடுகளில் ஜனங்களது சுய ஆட்சி ஏற்படவில்லை. இதர வல்லரசுகள் இந்த நாடுகளை ஆட்சி செய்கின்றன. இந்த நாடுகளில் சில ஐ. நா. சபையின் மேற் பார்வையில் ஒப்படைக்கப் பட்டுள. இந்த நாடுகளில் வாழும் மக்களது நலன்களைக் கவனிக்க இந்தச் சபை வருஷம் இருமுறை கூடும். மேற் பார்வையில் உள்ள நாடுகளை ஆட்சி செய்யும் வல்லரசு நாடுகள் எல்லாம் மெம்பர்கள். இந்தத் தொகைக்குச் சரிசமமாக இராஜ்ஜிய ஆட்சி பெறாத நாடுகளிலிருந்து மெம்பர்கள் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள்.

3. நிர்வாக சபை

எல்லா விஷயங்களையும் எப்போதும் கவனித்து ஏற்பாடுகள் செய்யும் இந்தச் சபையின் அவ்வப் போதைய சபைக் கூட்டத்திற்கான நிகழ்ச்சிகளைக் காரியதரிசி திட்டமிடுவார்.

4. பொருளாதார சமூக நலன் சபை

இந்தச் சபையில் 18 மெம்பர்கள் உண்டு. பொது சபையில் இவர்களைத் தேர்ந்து எடுப்பார்கள். ஒவ்வொரு மெம்பருக்கும் ஒரு வோட் உண்டு.

இந்தச் சபையின் வேலையே மிகவும் உபயோககரமாகவும் திறமையாகவும் நடைபெற்று வருகிறது. உலக மக்கள் க்ஷேமத்திற்கு வேண்டிய திட்டங்களைத் தயாரித்து ஒருவித பாரபட்சமும் இன்றி இச் சபை பாடுபடுகிறது.

இந்தச் சபையுடன் ஒத்துழைப்பதற்காக ஏற்பட்டுள்ள மற்ற உப சபைகளாவன :—

(i) ஐக்கிய நாடுகள் கல்வி விஞ்ஞான ஸ்தாபனம்.

(United Nations Educational Scientific, Cultural Organisation—UNESCO.)

(ii) உலக சுகாதார ஸ்தாபனம்

(World Health Organisation—W. H. O.)

(iii) உணவு விவசாய ஸ்தாபனம்.

(Food and Agricultural Organisation—F. A. O.)

இம்மூன்று உதவி சபைகளும் வெகு சிறப்பாக வேலை செய்து வருகின்றன.

இந்தியாவிலே இச்சபைக் கூட்டங்கள் நடைபெற்றன. பலநாட்டுப் பேராசிரியர்களும், வைத்திய


வல்லுநர்களும் சஸ்திர சிகிச்சை நிபுணர்களும் வந்து கலந்துகொண்டு உதவி செய்தனர். இந்தியாவில் உள்ள ஏற்பாடுகளையும் நடைமுறை அனுஷ்டானங்களையும் பார்வையிட்டு, முன்னேற்ற யோசனைகள் கூறினர்கள். அந்தந்த நாடுகளுக்கு அவசியமான தொழில் உதவியும் பணவுதவியும் தேவையான அம்சங்களில் கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நமது நாட்டு நிபுணர் களும் இச் சபைகளில் கௌரவமான இடம் பெற்றுள்ளனர். டாக்டர் ஏ. இலட்சுமணஸ்வாமி முதலியார் உலக சுகாதார சபையில் பெருமதிப்பிற்குரிய பதவியைப் பெற்றிருக்கிறார்.

5. நீதி சபை

சண்டை சச்சரவுகள் இச் சபையின் முன் சமர்ப்பிக்கப்பட்டால் இரு கட்சியினரது விவாதங்களைக் கேட்டு விசாரித்துப் பஞ்சாயத்து செய்யவேண்டியது இச்சபையின் வேலை. 15 நீதிபதிகள்—பொதுசபையில் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். பல நாட்டு நாகரிக அமைப்புகளையும் சட்ட சம்பிரதாயங்களையும் அனுசரித்துப் பிரதிநிதிகளைத் தேர்தல் செய்யவேண்டும். காலஞ்சென்ற B. நரசிங்கராவ் இதில் ஒரு நீதிபதியாக இருந்தார்.

6. பொதுச் சபை

60 மெம்பர் நாடுகள் கொண்டது. அதிக பட்சமாக ஒவ்வொரு நாடும் 5 பிரதிநிதிகளை அனுப்பலாம். ஆனல் ஒவ்வொரு நாட்டிற்கும், பெரியதாயினும் சரி, சிறியதாயினும் சரி, ஒரு "வோட்" உரிமைதான் உண்டு. வருஷம் ஒருமுறை பொதுச்சபை கூடும்.



ஐ. நா. சபையின் அலுவல்களில் ஆரம்பம் முதல் இந்தியா சிறப்பான பங்கு எடுத்துக் கொண்டு வந்திருக்கிறது. இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு இந்தச் சபையின் சேவையைப் பற்றி மிகவும் நம்பிக்கையும் உற்சாகமும் கொண்டவர். மனித உரிமைகள், பெண்கள் அந்தஸ்து, சமூகநலன் இவைகளுக்கும் சுதந்திர சுய ஆட்சிக்குப்பாடுபடும் எல்லா நாடுகளுக்கும் சார்பாக இந்தியா உழைக்கத் தீர்மானித்துள்ளது.

ஐ. நா. சபைகளிலும் இணைந்துள்ள கிளை ஸ்தாபனங்களிலும் மிகவும் புகழுடன் பல இந்தியர்கள் உழைத்திருக்கின்றனர். சர் டுலிப் சிங், சர் மஹராஜ் சிங், சர் எஸ். ராதாகிருஷ்ணன், ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்,

ராஜ்குமாரி அமிர்த்த கௌரி, டாக்டர் ஏ. இலட்சுமண ஸ்வாமி முதலியார் முதலியவர்களைக் குறிப்பிட வேண்டும்.

1953—54 ஆண்டில் ஐ. நா. பொதுச் சபையில் ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் தலைவர் ஸ்தானம் வகித்தார். உலக நாடுகள் ஒரு இந்தியரைத் தேர்தல் செய்தது இந்தியாவின் பெருமையும் மதிப்பும் உலக அரங்கில் உயர்ந்துள்ளது என்பதைக் காட்டுகிறது.

---

22. நாம் செய்யவேண்டியது என்ன?

உலக சமாதானத்திற்கு மிகவும் அடிப்படையாக இருப்பவை நம்மிடம் உள்ள சகிப்புத் தன்மையும் பரஸ்பர விசுவாசமும். இயல்பாகவே சிலருக்கு இந்த குணங்கள் இருக்கலாம். அவை இல்லாத பலரும் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். வேலைகளிலும் விளையாட்டுகளிலும் பழகும்போது பிறர் நிலைமையை அறிந்து அனுதாபத்துடன் உதவிக் கொள்வதால் சமூக நட்பு பெருகுகிறது.

பாரத் சாரணர் படை

பள்ளிக்கூடங்களில் படிக்கும் சிறுவர் சிறுமியர் சாரணர் படையில் சேர்ந்து வேலை செய்யலாம். இளஞ் சாரணர் (cubs), சாரணர், முது சாரணர் என மூன்று பகுதிகள் இப்படையில் உண்டு. இதேமாதிரி பெண் படைகளும் இருக்கின்றன. பாரத் சாரணர் கைடு

படையில் சுமார் 5 லட்சம் பேர் சேர்ந்துளர். சென்னையில் சுமார் 80,000 பேர் சாரணர் ஆக உளர். ஓடியாடி விளையாடி சந்தோஷமும் சுகமும் நிரம்பி வளரவும், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்ளவும் சமூக சேவை செய்யவும் பற்பல வேலைத்திட்டங்களை அமைத்து சாரணர் நிறைவேற்றுகின்றனர்.

செஞ்சிலுவைச் சங்கம்

உலக சமாதானத்திற்குப் பாடுபடும் ஜீவகாருண்ய ஸ்தாபனம் இது. யுத்தங்களில் காயம்பட்டு விழு வோருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் முதலில் ஆரம்பிக்கப்பட்டது. எல்லா நாடுகளும் இந்தச் சங்கத் தின் சேவையைப் பாராட்டி கௌரவித்து வருகின்றன. செஞ்சிலுவைக் (Red Cross) கொடி தாங்கிச் செல்லும் வண்டிகளையும் விமானங்களையும் கப்பல்களையும் சண்டையிடும் நாடுகள் தாக்குவதில்லை என்று எல்லா நாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன.

சமீபத்தில் இந்திய ரெட் கிராஸ் படை கொரியா யுத்தத்தில் மகத்தான சேவை செய்து புகழ் பெற்றது. காயம் பட்டவர்களுக்கு உதவி செய்வதில் பயிற்சி வேண்டும். வைத்தியர்கள், நர்சுகள் எல்லாரும் ஆபத் துக்கு அஞ்சாமல் பிறர் உயிர்களைக் காப்பாற்றுவதில் உற்சாகமாகத் தொண்டு செய்கிறார்கள்.

சமாதான காலத்திலும் செஞ்சிலுவைச் சங்கம் சிறப்பாக உதவி செய்து வருகிறது. ஏழை மக்களுக்கு, முக்கியமாக சிசுக்களுக்கும் பாலர்களுக்கும், உணவு மருந்து வசதிகள் இலவசமாகக் கொடுக்கிறார்கள். சங்க

வேலைகளுக்குப் பொது மக்கள் அவ்வப்போது பணம் கொடுத்தும், வருஷா வருஷம் சந்தா தொகை கொடுத்தும் உதவுகிறார்கள். இவ்விதம் சந்தா தருபவர்கள் லட்சம் மெம்பர்கள் உண்டு.

பள்ளிக்கூடங்களில் உள்ள மாணவ மாணவிகள் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தில் சேர்ந்து சேவை செய்யலாம். சந்தோஷமாக வளர்ந்து, பிறருடன் நட்பு கொண்டு விளையாடி இன்பமடைவதுடன் பிறநாட்டு இளைஞருடன் சமாதானத் தொடர்பு கொள்வதும் இச்சங்கத்தின் முக்கிய நோக்கங்கள். சென்னை இராஜ்ஜியத்தில் சுமார் $1\frac{1}{2}$ லட்சம் சிறுவர் சிறுமியர் கொண்ட 5000 இளைஞர் சங்கங்கள் உண்டு. இவர்கள் சுகாதார வாழ்க்கையில் பழக்கம் பெறுகிறார்கள்.

பிறருடன் நட்பு கொள்ளவும், அன்புடன் உதவி புரியவும் எவ்வளவோ சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன. புயல், பெருமழை, பூகம்பம், எரிமலை கக்குதல் முதலிய இயற்கை உத்பாதங்களினால், நாடுகள் தவிக்கும் போதும் உலக முழுவதும் அனுதாபம் கொண்டு உபகார நிதி திரட்டி உதவி செய்கிறது.

குழந்தை உலகத்தில் உலக முழுவதும் ஒற்றுமை உணர்ச்சி உண்டாக்கப் பலவகைகள் உண்டு. ஜப்பானியக் குழந்தைகளுக்கும் அமெரிக்கக் குழந்தைகளுக்கும் பிரதமர் நேரு யானைக் குட்டிகளைப் பரிசுகளாக அனுப்பினார். பல்லாயிரக் குழந்தைகள் அவைகளைக் கண்டு களித்தார்கள். ஜப்பானியக் குழந்தைகள் இந்தியக் குழந்தைகளுக்குப் பொம்மைகள் அனுப்பினார்கள். அமெரிக்கக் குழந்தைகள் பஞ்சத்தில் பரிதவிக்கும்

இந்தியர்களுக்கு உதவியாகப் பணம் வசூலித்து அனுப்பினார்கள். உலக குழந்தைகள் நட்புக்கு உதவியாக இசை, சிறு கதை, சித்திரம் இவ்விதப் போட்டிகளை நடத்திப் பரிசுகள் வழங்குகிறார்கள். சிலகாலமாக பிரதி வருஷமும் சங்கர்ஸ் வீக்லி ("Shanker's Weekly") என்ற டில்லிப் பத்திரிகை இவ்விதப் போட்டி நடத்தி வருவதைச் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

மகாத்மா காந்தி உலக சமாதானத்திற்கு உழைத்துத் தம் உயிரையே தியாகம் செய்த உத்தமர். பல நாடுகளிலும் காந்தி நினைவுச் சின்னங்கள் கட்டி அப்பெரியார்க்கு மக்கள் அஞ்சலி செய்கின்றனர்.

உழைப்பின் அவசியம்

"நான் ஒரு தனி ஆள்," "நான் ஒரு ஏழைச் சிறுவன்" என்று உங்களில் ஒருவரும் பயந்துகொண்டு வருத்தம் அடைந்து ஒதுங்கி நிற்கவேண்டியதில்லை. "பல கோடி மக்களில் நானும் ஒருவன், நான் ஒருவனாக ஒன்றும் சாதிக்கமுடியாது" என்று ஏங்கவேண்டாம். ஒவ்வொருவனும் தன் கடமையை உற்சாகத்துடன் செய்தால், மகத்தான பெரிய வேலையை முடிக்கலாம். எல்லாரும் ஒன்றுசேர்ந்து இழுத்துப் பெரிய தேரை ஊர்வலமாகக்கொண்டு போகிறோம். "நான் செய்யக் கூடியது சொற்பமாயினும் அதை நிச்சயமாகச் செய்வேன்" என்று ஒவ்வொருவரும் செய்தால் போதும். தான் ஒரு வேலையும் செய்யாமல் பிறர் உழைப்பின் பயனை மாத்திரம் ஒருவன் அனுபவிப்பது நியாயமாகாது. ஒவ்வொருவனும் உழைத்துப் பாடுபட்டுத் தனக்கும் மற்றவருக்கும் நலம்தரும் வகையில்

உதவவேண்டும். அப்பொழுது எல்லாரும் சுகமாகவும் இன்பமாகவும் வாழமுடியும்.

சுதந்திர வாழ்வு


"ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்." பல வருஷங்களுக்கு முன் சுதந்திரக் கனவு கண்டு களித்த பாரதியார் இவ்விதம் பாடினார். அவர் கண்ட கனவு 1947 ஆகஸ்டு 15-ந் தேதியன்று நனவாகி உருவடைந்தது. அன்றைய தினம் அந்தப் பாட்டைப்பாடி மக்கள் கும்மியடித்துக் களியாட்டம் செய்தனர். ஆனால் 30 ஆண்டுகளுக்குமுன் அந்தப்பாட்டை உரக்கச் சொல்லவும் மக்கள் பயப்பட்டார்கள்.

ஏன் இந்தப் பயம்? அந்நியர் ஆட்சி செய்திருந்த காலத்தில் சுதந்திரத்தைப்பற்றிப் பேசினால் தண்டனை கிடைக்கும். அவ்வாறு பேசி, ஜனங்கள் இடையே ஒற்றுமையை உண்டாக்க உழைத்த தேசபக்தர்கள் பல்லாயிரக் கணக்கினர். அவர்கள் தண்டனை அடைந்தார்கள்; அடிக்கடி பல ஆண்டுகள் சிறைகளில் காலம் கழித்தார்கள். அவர்களது மகத்தான சேவையும் தியாகமும் சுதந்திர இந்தியாவின் அஸ்திவாரம். இப்போது ஜனாதிபதியாகவும் மந்திரிகளாகவும், கவர்னர்களாகவும் சுதந்திர இந்தியாவில் சேவைசெய்யும் வீரப் பெரு மக்களில் பெரும்பாலர் இவ்விதம் சுதந்திரப் போரில் சிறைவாசம் செய்து கஷ்டப்பட்டவர்கள். அவர்கள் சேவையின் பயனாக நாம் இப்போது சந்தோஷமாகச் சுதந்திர வாழ்வு நடத்துகிறோம். அவர்களுக்கு நாம் அஞ்சலி செய்து வணக்கம் செலுத்துவோம்.

அவர்களுக்கு நன்றி செலுத்துவதுடன் நின்றுவிட்டால் போதுமா? நமக்குக் கிடைத்த சுதந்தி

ரத்தை நிலைநிறுத்தவேண்டும். எல்லா மக்களும் சுகமாகவும், சந்தோஷமாகவும் வாழ்வதற்கு நாம் எல்லோரும் உழைக்கவேண்டும். நமது நாடு மிகச் செல்வவளம் நிரம்பியுள்ளது என்று இதுகாறும் எடுத்துக் காட்டினேம். உழைப்பினுல் அச்செல்வத்தைப் பயன்படுத்தி ஏராளமாக ஆக்கப் பொருள்களை உற்பத்தி செய்யவேண்டும். வறுமையை விரட்டுவோம், வியாதியை அகற்றுவோம், சுகத்தைப் பெருக்குவோம்; நம் நாட்டிற்கு நிகர் உண்டா என்று இனி வருங்கால மக்கள் பெருமகிழ்ச்சி கொள்ள நாம் இப்போது உழைப்போம். இதுவே நாம் எல்லோரும், நமக்கு மாத்திரமின்றி நமது நாட்டிற்கும், நமது நாட்டு மக்களுக்கும் செய்யக்கூடிய உதவியாகும்.

ஜெய் ஹிந்த்.



THE JUPITER PRESS, LTD., MADRAS-18

SITU

PUBLICATIONS LTD.